REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 1 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரන්

வரு. 90 இல. 27 | Tuesday 1, February, 2022 | 16 பக்கங்கள் | 30/-




## தமிழக மீனவர்கள் விடயத்தில் ஆராய்ந்தே செயற்பட வேண்டும்

### எடுத்த எடுப்பில் எதனையும் செய்ய முடியாது



இந்தியா எங்கள் நண்பன், அதிக உதவிகளை எமது நாட்டுக்கு செய்துள்ளனர். ஆகவே மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளை நாம் சரியான முறையில் அணுகி தீர்வினை பெற்றுக்கொள்ள வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரசின் முக்கியஸ்தரும், பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே 06

## சிறுபான்மை கட்சிகளை அரசு சந்திக்க ஏற்பாடு

### யாழில் அமைச்சர் அலிசப்ரி தெரிவிப்பு



சிறுபான்மை கட்சிகளை சந்தித்து அரசாங்கம் விரைவில் கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (30) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலில், தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட ஏனைய வடக்கு கிழக்கு 06

## TNAயுடன் சந்திப்பை நடத்த அரசு ஆர்வமாக உள்ளது

### யாழில் சுமந்திரனிடம் GL தெரிவிப்பு



ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திக்கும் விடயத்தில் இன்னும் அக்கறையுடன் இருப்பதாக, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (30) காலை இடம்பெற்ற தனிப்பட்ட சந்திப்பு ஒன்றின் போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார். இந்த சந்திப்பில் அமைச்சர் 06

## யாழ். பலாலி விமான நிலையம் விரைவில் திறப்பு

### யாழ். ஊடக மாநாட்டில் ஜீ.எல். பீரிஸ்



இலங்கையில் கொரோனா தலைவிரித்தாடிய நிலையிலேயே யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டதாகவும் விரைவில் அதனை திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே 06

### கிராமத்திற்கான வேலைத்திட்டத்தின் கீழ்

# நாடு முழுவதும் ஒரு இலட்சம் அபிவிருத்தி திட்டங்கள்



### நாளை மறுதினம் காலை 8.52 மணிக்கு ஆரம்பம்

### நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்திருந்த நிதி மூலம் சகல மாவட்டங்களிலும் இந்த செயற்றிட்டம் ஆரம்பமாகிறது

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கு அமைய கிராமத்திற்கான வேலைத்திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் 100,000 அபிவிருத்தித் திட்டங்கள் 3ஆம் திகதி காலை 8.52 மணிக்கு நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படுகிறது.

'பட்ஜெட்டில் இருந்து ஒரு லட்சம் வேலைத்திட்டங்கள் ' என பெயரிடப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் வரவு செலவு திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க, அபிவிருத்தி திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் 06

### ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் 74ஆவது

# தேசிய சுதந்திர தின விழா சுதந்திர சதுக்கத்தில் ஏற்பாடு



### 6500 படையினர் பங்கேற்பு; பொதுமக்களுக்கு அனுமதியில்லை

**ஸாதிக் ஷிஹான்**

74ஆவது தேசிய சுதந்திர தின பிரதான வைபவம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் சுகாதார வழிமுறைகளை முழுமையாக பின்பற்றி சுதந்திர சதுக்கத்தில் நடாத்துவதற்கு தேவையான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன அமைச்சரும், தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்தமுகாமைத்துவ இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா நிலைமை காணப்படுவதனால் சுகாதார வழிமுறைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு தேசத்தின் அபிமானத்தை காக்கும் வகையில் வழக்கம் போன்று எவ்வித குறைபாடுகளுமின்றி சம்பிரதாயமான எழிமையான முறையிலும் நடத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். “சவால்களை வெற்றிக் கொண்ட 06

## ச.தொ.சவில் 75 ரூபாவுக்கு பெரிய தேங்காய் விற்பனை

### குறைந்த விலையில் அரிசியும் வாங்கலாம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ச.தொ.ச மூலம் பெரிய தேங்காய் ஒன்றை 75 ரூபாய் உத்தரவாத விலைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முதல் இது நடைமுறைக்கு வந்துள்ளதாக தெரிவித்துள்ள அவர் ஒருவர் ஐந்து பெரிய தேங்காய்களை கொள்வனவு செய்ய முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் தெங்கு அபிவிருத்தி அதிகார 06

### அனுர குமார வாகனம் மீதான முட்டை வீச்சு;

## பக்கச்சார்பற்ற விசாரணைக்கு IGPயிடம் பிரசன்ன கோரிக்கை

**ஷம்ஸ் பாஹிம்**




பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்கவின் கார் மீது முட்டை வீசி தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பொலிஸ் மா அதிபரிடம் கோரியுள்ளார். இது தொடர்பில் அவர் கடிதமொன்றை அனுப்பி 06

## நுரைச்சோலை மின் நிலையம் மீண்டும் இயல்பு நிலைக்கு

### நேற்று முதல் 160 மெ.வா மின்னுற்பத்தி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தில் செயலிழந்திருந்த மின் உற்பத்தி இயந்திரத்தின் திருத்த வேலைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் நேற்றைய தினம் முதல் 06

## தடுப்பிலுள்ள அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை

### அமைச்சர் அலி சப்ரி உறுதியளிப்பு



பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் 27 பேர் விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாகவும் இது 06

## ரயில்வே அதிகாரிகள் சிலருக்கு கொரோனா



### 14 சேவைகள் அதிரடியாக நிறுத்தம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ரயில் கட்டுப்பாட்டாளர்கள் சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 14 ரயில் சேவைகளை இடைநிறுத்தியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் நேற்றைய தினம் கருத்து தெரிவித்த ரயில்வே பிரதி பொது முகாமையாளர் ஏ.டி.ஜி. செனவிரட்ன; பிரதான ரயில் வழி பாதைகளில் ஆறு ரயில் 06

## முட்டை வீச்சு தாக்குதலின் பின்னணியில் "எவன்ட்கார்ட்"

### JVP விஜித ஹேரத் எம்.பி குற்றச்சாட்டு


**லோரன்ஸ் செல்வநாயகம்**



மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவின் வாகனத்தின் மீது முட்டை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதன் பின்னணியில் எவன்ட்கார்ட் நிறுவனமும், அரசியல் தலையீடும் காணப்படுகிறது.

எதிர்காலத்தில் அனுரகுமார திஸாநாயக்கவின் 06

## ஆண்டுதோறும் 500 பேர் வரை நீரில் மூழ்கி பலி!



நாட்டில் ஆண்டு தோறும் நீரில் மூழ்கி ஐநூறு பேர் வரையில் உயிரிழப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 06



## நாட்டில் தடைசெய்யப்பட்ட இரண்டு அதிக திறனுள்ள மோட்டார் சைக்கிள்கள் அகப்பட்டன

பல கோடி ரூபா பெறுமதியுள்ளவையாம் 06



## அனுரவை தாக்குவதற்கு 5000 ரூபா பெற்றோம்



கைதான சந்தேக நபர்கள் சாட்சியம் 06

## அனுர மீது முட்டை வீசியது நானல்ல!



அமைச்சர் பிரசன்ன மறுப்பு தெரிவிப்பு 06

### உலகின் முதல் முறையாக

## பறக்கும் படகு துபாயில் அறிமுகம்



உலகின் முதல் முறையாக ஹைட்ரஜன் எரிபொருள் மூலமாக இயங்கும் ‘பறக்கும் படகு’ துபாயில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. தி ஜெட் (The Jet) என்ற பெயருடைய பறக்கும் படகு, சுவிஸ்லாந்து 06

## தங்கத்தின் விலை திடீரென வீழ்ச்சி

### மேலும் குறைவடைய வாய்ப்பு



உலக சந்தையில் தங்கத்தின் விலை குறைவடைந்துள்ளதால் உள்நாட்டிலும் தங்கத்தின் விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதற்கமைய, நாட்டில் 22 கரட் தங்கத்தின் விலை 1 இலட்சத்து 14 ஆயிரம் வரையிலும், 24 கரட் தங்கத்தின் விலை 06

## மறு அறிவித்தல் வரை இனி மின்வெட்டு இல்லை


### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு



சம்பந்தப்பட்ட மின் நிலையங்களுக்கு உரிய எரிபொருள் இருப்புக்கள் கிடைத்துள்ளதால் மறு அறிவித்தல் வரை மின்வெட்டு இருக்காது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் 06

## 81 பிரதேச செயலாளர் பிரிவுகளில் டெங்கு அபாயம்

### டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அடையாளம்



நாட்டில் டெங்கு பரவும் அபாயத்தில் உள்ள 12 மாவட்டங்களில் உள்ள 81 பிரதேச செயலாளர் பிரிவுகளை தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அடையாளம் கண்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, யாழ்ப்பாணம், புத்தளம், களுத்துறை, கண்டி, 06

### விக்கல் வீராச்சாமி



நாட்டில தொலருக்கு தட்டுப்பாடு எண்டு அரசாங்கம் அடிக்கடி சொல்லுது, ஆனா ஏர்போட்டில அடிக்கடி டாலர், பவுண்ட் எல்லாம் பிடிடுது....

எனக்கும் உந்த சந்தேகம் பல நாளா இருக்குது, போதைப்பொருள சுத்தி வளைச்சு பிடிக்கிற மாதிரி இதயும் அரசு செய்யலாமே...!!!

# கம்பியற்ற சமிக்ஞைகளால் இயங்கும் Zero-Battery திட்டத்தை அறிமுகப்படுத்தும் OPPO

OPPO ஆராய்ச்சி நிறுவனம், ZeroPower Communication குறித்த தொழில்நுட்ப அறிமுக ஆவணத்தை (white paper) உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது. IoT வெளியில் தற்போது அவசியமற்றதாக உள்ள தேவையின் பின்னணியில் ZeroPower Communication தொழில்நுட்பத்தின் தொழில்நுட்ப நிலைப்பாட்டை குறித்த அறிக்கையில் ஆராயப்பட்டுள்ளது. அத்துடன், எதிர்காலத்தின் ஏனைய தகவல் தொடர்பு அமைப்புகளுடன் இணைந்து தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்கான எதிர்காலத்திற்கான பாதையின் வரைபடத்தை அது கோடிட்டுக் காட்டுகிறது.



தற்போதைய மின்கல தொழில்நுட்பமானது மின்கலங்களின் ஒட்டுமொத்த அளவு, உற்பத்திச் செலவு, ஆயுட்காலம், பயன்பாட்டின் எளிமை மற்றும் சூழல் நட்பு ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க சிக்கல்களை காண்பிக்கிறது. ZeroPower Communication தொழில்நுட்பமானது, சூழலில் உள்ள கதிரியக்க அதிர்வலை சக்தியை பயன்படுத்துவதன் மூலம் மின்கலங்களின் தேவையைத் தவிர்க்கிறது. இதன் விளைவாக மிகவும் கச்சிதமான, திறமையான, குறைந்த விலையிலான சாதனங்களை உருவாக்க வழியேற்படும். சேமிப்புக் கிடங்கிற்கான அவசியம், விவசாயம் போன்ற வணிகப் பயன்பாடுகளிலும் அணியக்கூடிய சாதனங்கள், ஸ்மார்ட் வீடுகள் மற்றும் ஏனைய அதிநவீன நுகர்வோர் பயன்பாடுகளிலும் இத்தகைய பண்புகள் நன்மைகளை வழங்கும்.இது தொடர்பில், OPPO வின் பிரதான 5G விஞ்ஞானி Henry Tang தெரிவிக்கையில், "கையடக்கத்தொலைபேசி தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் ஆரம்பம் முதல் நான்காவது தலைமுறை வரை, தொலைத்தொடர்புத் துறையானது நான்கு தொழில்நுட்ப பாய்ச்சலைக் கடந்துள்ளது.

அனலொக் முதல் டிஜிட்டல், தரவு, இறுதியாக புரோட்பேண்ட் வரை இந்த பாய்ச்சல் அமைந்துள்ளது. இந்த பாய்ச்சல்கள் ஒவ்வொன்றும் வேகமான தரவுப் பரிமாற்ற விகிதங்களை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், அடுத்த தசாப்தத்தில், 5G தொழில்நுட்பம் மற்றும் அதனைக் கடந்து செல்லும்போது, தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தில் தரவு பரிமாற்றமானது ஒரு பாரிய விடயமாக இருக்குமென நாம் நம்பவில்லை. ZeroPower Communication தொழில்நுட்பமானது, இலத்திரனியல் உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளில் இருந்து மின்கலங்களை அகற்றி, அவற்றின் செலவுகள் மற்றும் சூழலின் தாக்கத்தை குறைக்கும் வழிமுறையை வழங்கும். எனவே, நாம் B5G/6G தலைமுறைக்கு செல்வதால், ZeroPower Communication ஆனது நாம் கவனம் செலுத்தும் முக்கிய பகுதிகளில் ஒன்றாக உள்ளது" என்றார். OPPO தனது சொந்த கண்டுபிடிப்புகளுக்கு மேலதிகமாக, ZeroPower Communication நிலைப்பாட்டை மேம்படுத்துவதில் முன்னணியில் உள்ளது.

இதில் ZeroPower Communication ஆராய்ச்சி திட்டங்களை 3GPP இற்கு முன்மொழிதல் மற்றும் FuTURE மற்றும் ICCC போன்ற தொழில்துறை மாநாடுகளின் போது அதன் கண்டுபிடிப்புகளை தெரிவிப்பது உள்ளிட்ட விடயங்கள் அடங்குகின்றன.

செப்டெம்பர் 2021 இல் இடம்பெற்ற IMT2030 6G Vision நிகழ்வில், OPPO ZeroPower Communication Forum இனை ஆரம்பித்ததுடன் அதனை ஏற்பாடும் செய்திருந்தது. ZeroPower Communication இல் பயன்பாடுகள், தொழில்நுட்பத் தேவைகள், முக்கிய தொழில்நுட்பங்களைப் பற்றி விவாதிக்க கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்தது.

54வது ஆண்டில் நுழையும் நிலையில்

# சமூகத்தின் மீதான அக்கறையை வெளிப்படுத்தும் Munchee

54 வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நிலையில் சமூகத்தின் மீதான அக்கறை அணுகுமுறைக்கான தனது உறுதிப்பாட்டை Munchee மீண்டும் உறுதிப்படுத்துகிறது

இலங்கையின் மிகப் பெரிய பிஸ்கட் உற்பத்தியாளரும் ஏற்றுமதியாளருமான Munchee, தனது 54வது ஆண்டில் நுழையும் நிலையில் 'நாங்கள் பிஸ்கட்களை மட்டும் தயாரிக்கவில்லை" என்ற தொனிப்பொருளுடான திட்டத்தை அறிவித்தது. கடந்த ஐந்து தசாப்தங்களாக Munchee வர்த்தக நாமம் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள நுகர்வோர் மத்தியில் மிகவும் பிரபலமாகியுள்ளது. இதற்கிடையில், Munchee பிஸ்கட்கள் 60 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன, Munchee இலங்கையின் முதல் வர்த்தக நாமமாக எட்டு முறை தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.CBL இன் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் Janmesh Paul Anthony கருத்துத் தெரிவிக்கையில் , CSR முயற்சிகள் மூலம் Munchee ஒரு வியாபாரம் மற்றும் வர்த்தக நாமம் என்ற ரீதியில் வெற்றியடைவதை விட இலங்கை சமூகத்தின் நலனுக்காக மேலும் பலவற்றைச் செய்துள்ளதாக தெரிவித்தார். மஞ்சி தனது அக்கறையான அணுகுமுறையால் அனைத்து தரப்பு மக்களின் இதயங்களையும் சென்றடைய முடிந்ததில் மகிழ்ச்சி அடைவதாக அவர் கூறினார். "நாங்கள் பிஸ்கட்களை மட்டும் தயாரிக்கவில்லை" என்ற தொனிப்பொருளின் கீழ் 54 ஆவது ஆண்டில் நுழைவதற்கான தீர்மானம், சமூகத்தை மேம்படுத்துவதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் என்பதை அனைத்து பங்குதாரர்களுக்கும் வலியுறுத்துவதற்காக எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.



ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான காலப் பகுதியில், கல்வி, இளைஞர்கள் மற்றும் விளையாட்டு, கலை மற்றும் கலாச்சாரம், சமூக மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அனர்த்த நிவாரணம் ஆகிய துறைகளில் மஞ்சி தனது செயலில் உள்ள சமூகப் பராமரிப்பை விரிவுபடுத்தியுள்ளது. இப்பகுதிகளின் கீழ் தற்போது நூற்றுக்கணக்கான திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன.




# முதன்முறையாக இடம்பெற்ற இலங்கை கோப்பி திருவிழா



அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடனான Market Development Facility (MDF) ஆனது, இலங்கையின் கோப்பி தொழிற்துறையுடன் இணைந்து, இலங்கையின் கோப்பிதுறையைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகளை ஒன்றிணைத்து முதன் முதலாக 'Sri Lanka Coffee Festival' (இலங்கைகோப்பித்திருவிழா) நிகழ்வை நடாத்தியிருந்தது.

இலங்கையில் தனித்துவமாக வளரும் விசேடத்துவம் கொண்ட கோப்பி மற்றும் மீளவளர்ந்து வரும் கோப்பிக் கலாச்சாரத்தின் கொண்டாட்டத்தை குறிக்கும் இவ்விழாவானது, இத்துறையின் மீதான அஸ்திரேலியாவின் தொடர்ச்சியான ஆதரவை எடுத்துக்காட்டுகிறது. இலங்கை கோப்பியின் எதிர்காலம் குறித்து கலந்துரையாடுவதற்காக, அரசாங்க மற்றும் தனியார் துறையிலுள்ள அனைவரையும் ஒன்றிணைத்து, கருத்துகளை பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்கும்வகையில், உள்ளூர் கோப்பிதுறையில் உள்ள பல்வேறு மட்டத்திலான பங்குதாரர்களை மையப்படுத்தி இந்நிகழ்வு ஏற்பாடு செய்ப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் அரசமற்றும் தனியார்துறையைச் சேர்ந்தவர்களுக்கு இடையிலான குழுரீதியான கலந்துரையாடல்கள், சர்வதேச கோப்பி நிபுணர்களின் விளக்ககாட்சிகள் மற்றும் உள்ளூர் விசேட கோப்பி வர்தக நாமங்களை காட்சிப்படுத்தும் கோப்பி எக்ஸ்போ ஆகியன இடம்பெற்றன. நிகழ்வின் ஒருபகுதியாக, இலங்கையின் விசேடத்துவமான கோப்பிபற்றிய MDFRoar Media ஆவணப் படத்தின்வெளியீடுமற்றும் MDF இன் 'Arabica Coffee Value Chain Analysis' ( அறிக்கையும்வெளியிடப்பட்டது.



SLTMOBITEL, இந்த ஆண்டின்தைப் பொங்கல் வைபவத்தை வவுனியா மாவட்ட பொதுவைத்தியசாலையில் ஏற்பாடு செய்திருந்தது. வைத்தியசாலைக்கு பெறுமதிவாய்ந்த நன்கொடையையும் வழங்கியிருந்தது. இந்தவைபவத்தின்போது, SLT இன் வடக்குமற்றும்கிழக்கு பிராந்தியபொது முகாமையாளர் எம். பத்மசுதன், 1 மில்லியன் ரூபாய்பெறுமதிவாய்ந்த ICU படுக்கைகளை, வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர். வைத்தியர். கே.ராகுலனிடம் கையளித்தார். உலர்உணவுப்பொருட்கள்விநியோகம் மற்றும் சுகாதாரத்துறைக்கு அத்தியாவசிய சாதனங்களை வழங்கி மற்றும் இதர நன்கொடைகளினூடாக ஆதரவளித்திருந்தது.








லயன்ஸ் கழகம் 306B2 (கொழும்பு பெரு நகரம்) தலைவர் லயன் அமிர்தம் ஜெயக்குமாரின் பூரண அனுசரணையில் கலைமகள் தேசிய பாடசாலை மத்துகமவில் ஊடக கழகம் அங்குரார்ப்பணம் மற்றும் ஊடக செயலமர்வு தினகரன்,தினகரன் வாரஞ்சரி. வண்ணவானவில் பத்திரிகைகளின் ஊடக அனுசரணையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்வு தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வண்ணவானவில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் அதிபர் வீ.சசிகுமாரின் நெறிப்படுத்தலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஊடகசெயலமர்வுக்கு வளவாளர்களாக சிரேஷ்ட ஊடகவியலாளர் கிருஷ்ணி கந்தசாமி, வாழ்நாள் ஊடவியலாளர் அன்னலக்ஷமி ராஜதுரை, தினகரன் பிரதம உதவி ஆசிரியர் ஸ்ரீகாந்த், உதவி ஆசிரியர் சுரேஷ்ராஜ், விளம்பர முகாமையாளர் திருமதி ரெஜினா மற்றும் சுமூக செயற்பாட்டாளர் இளஞ்செழியன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
















தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN தினකරන්

2022 பெப்ரவரி 1 செவ்வாய்க்கிழமை




**தொழுகை நேரம்**

01 முதல் 06 வரை

சுபஹ் - 05.11
லுஹர் - 12.26
அஸர் - 03.48
மஃரிப் - 06.20
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் தை 19

ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: பிரதமை

## கொரோனா தொற்றுக்கு 11 வயது மாணவி பலி

லோரன்ஸ் செல்வநாயகம்

புத்தளம் நாத்தாண்டிய தம்மஸ்ஸர தேசிய பாடசாலை மாணவியொருவர் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

நாத்தாண்டிய தேசிய பாடசாலையில் ஆறாம் வகுப்பில் கல்வி கற்கும் மேற்படி 11 வயது மாணவி நாத்தாண்டி தப்போவ பகுதியைச் சேர்ந்த பி. எம். டி. மனிஷா குமாரி பெர்னாண்டோ என அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

இரண்டு தினங்கள் சுகவீனமுற்ற நிலையில் அவர் மாரவில தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

06

## சவூதியிலுள்ள இலங்கை தூதரகம் மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு



சவூதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதரகம் இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளுக்கு 1.2 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. சவூதி அரேபியாவில் வசிக்கும் இலங்கை சமூகத்துடன் இணைந்து இலங்கை கலாசார மன்றம் மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

கொழும்பில் உள்ள வெளிநாட்டு அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து இந்த நன்கொடை இராஜாங்க அமைச்சர்

06

# உயர்தரப் பரீட்சை இடம்பெறும் காலத்தில் மின் துண்டிப்பை மேற்கொள்ள வேண்டாம்

## கல்வியமைச்சர் தினேஷ் குணவர்தன மின்சார சபையிடம் வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்



கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நடைபெறும் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் மார்ச் 5ஆம் திகதி வரையிலான காலத்தில் மின் துண்டிப்பை மேற்கொள்ள வேண்டாம் என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன மின்சார சபையிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் தினேஷ் குணவர்தன அது தொடர்பில் மின்சாரசபை உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களின் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த காலத்தில் மின் துண்டிப்பை மேற்கொண்டால் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் எதிர்கொள்ளக்கூடியஅசௌகரியங்களை கவனத்திற் கொண்டு மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வரும் நிலையில் கல்வி பொது தராதர பரீட்சையை ஒத்திப்போடுவதற்கான எந்த அவசியமும் கிடையாது என கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி எந்தவித சிக்கலும் இல்லாமல் பரீட்சைளை நடத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சையை ஒத்திப்போட்டால் மாணவர்கள் உளரீதியாக பாதிப்பை

06

டெங்கு மீண்டும் தீவிரம்

## ஜனவரியில் மாத்திரம் 7656 நோயாளர் பதிவு



கடந்த ஜனவரி மாதத்தில் 7656 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சுதத் சமரவீர நேற்று (31) தெரிவித்தார்.

2021 ஜனவரியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2122 ஆகவும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ஜனவரியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருப்பதாகவும் அவர் கூறினார்.

பொதுவாக மூன்று வருடங்களுக்கு ஒருமுறை டெங்கு நோய் பரவுவது வழக்கமாக இருப்பதாகவும்,

06

ஈஸ்டர் தாக்குதலில் உண்மையை மறைப்பதாக

## ஊடகங்கள் மீது பேராயர் மல்கம் திடீர் பாய்ச்சல்



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பான உண்மையை நாட்டின் சில ஊடகங்கள் மக்களுக்கு வெளியிடுவதில்லை என கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு பேராயர் வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குற்றம் சுமத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வார இறுதியில் கருத்து வெளியிடும் போதே பேராயர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இருக்கும்

06

## தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டத்திற்கு எதிரான மனு உச்ச நீதிமன்றால் நிராகரிப்பு

### விசாரிக்க தமக்கு அதிகாரமில்லை என தீர்ப்பு

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள “தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டமூலத்தின்” ஒரு சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது என தீர்ப்பளிக்கக் கோரிய தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரிக்க தமக்கு அதிகாரம் இல்லை என உச்ச நீதிமன்றம் நேற்று (31) தீர்ப்பளித்துள்ளது.

அது தொடர்பில் சபாநாயகருக்கு அறிவிக்கப்படும் எனவும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. குறித்த மனுவை விசாரிக்க உச்ச நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்ற சட்டமா அதிபரின் வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

இளம் ஊடகவியலாளர் சங்கத்தின் பொருளாளர் தரிந்து இரங்க ஜயவர்தன மற்றும் எம்.எப்.எம். பசீர் இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

உச்ச நீதிமன்ற நீதியரசர்களான எல். டி. பி. தெஹிதெனிய, ஷிரான் குணரத்ன மற்றும்

06




காய்ச்சல், தலைவலி, கண்களின் கீழ் வலி, குமட்டல், உடல் வலி, சிவப்பு தோல் திட்டுகள், உங்கள் மலத்தில் இரத்தம்? #உடனடியாக NS1 டெங்கு ஆன்டிஜென் பரிசோதனை செய்யுங்கள்.




தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் தை மாதம் 19ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஆகிறா பிறை 28

### குறள் தரும் சிந்தனை



காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு

வேலேந்திய வீரர்களை வீழ்த்துகின்ற ஆற்றல் படைத்த யானை, சேற்றில் சிக்கி விட்டால் அதனை நரிகள் கூடக் கொன்று விடும்.

## சிறந்த ஆரம்பத்துக்காக விடுக்கப்பட்ட அழைப்பு

நாட்டின் ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப வடக்கு மக்கள் எம்முடன் கைகோருங்கள் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜில். பீரிஸ் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருக்கின்றார். நீதிய மைச்சின் நீதிக்கான அணுகல் வேலைத் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்டன.

இத்திட்டங்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவு படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இந்த அ ழைப்பை விடுத்திருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் இ ருந்து விடுக்கப்பட்டிருக்கும் இவ்வழைப்பை ஒரு சாதாரண அழைப்பாக நோக்கலாகாது. அதேநேரம் இவ்வழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் காலச்சூழலும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்நாட்டின் 74 வது சுதந்திர தினம் கொண் டாடப்படுவதற்கு இன்னும் சில நாட்கள் இருக்கும் சூழலில் இவ்வழைப்பு விடுக்கப்பட்டிருப்பதும் கவ னத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். பல்லின மக்கள் வாழும் நாடொன்றைக் கட்டியெ ழுப்புவதற்கு அந்நாட்டில் வாழும் எல்லா மக்களும் ஒற்றுமையாகவும் ஒன்றாகவும் செயற்படுவது அவசி யம். அந்த அடிப்படையில்தான் ஐரோப்பியரின் ஏகா திபத்தியத்திற்கு 443 வருடங்கள் உள்ளாகி இருந்த இந்நாட்டுக்கு இங்கு வாழும் எல்லா மக்களும் ஒன் றிணைந்து சுதந்திரத்தைப் பெற்றெடுத்தனர்.

ஆனாலும் சுதந்திரத்திற்கு பின்வந்த சில ஆட்சியா ளர்கள் முன்னெடுத்த தவறானதும், பிழையானது மான கொள்கை, வேலைத்திட்டங்களின் காரணமாக நாட்டின் சுதந்திரத்தின் போது ஒன்றுபட்டு செயற் பட்ட மக்களிடையே பிளவுகள் ஏற்பட்டன. இதன் விளைவாக சுமார் 30 வருட கால ஆயுத மோத லுக்குள் இந்நாடு துரதிஷ்டவசமாகத் தள்ளப்பட்டது. அந்த மோதலின் காரணத்தினால் இந்நாடு பாரிய இழப்புகளையும் அழிவுகளையும் சந்தித்தது. அந்த துரதிர்ஷ்டமான ஆயுத மோதல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஒரு தசாப்தத்திற்கும் மேலாகியுள்ளது.

சுதந்திரத்திற்கு பின்னர் வந்த சில ஆட்சியாளர் கள் முன்னெடுத்த கொள்கை, வேலைத்திட்டங்கள் சமூகங்களுக்கு இடையில் ஏற்படுத்திய இடைவெளி குறைக்கப்பட வேண்டும். இதன் பொருட்டு பிரதேச மட்டத்தில் சென்று மக்களுடன் கலந்துரையாடுவது அவசியம். அதன் ஊடாக மக்களின் தேவைகள், எதிர் பார்ப்புகள் குறைபாடுகள் என்பவற்றைக் கண்டறிய முடியும். மக்களோடு கலந்துரையாடாது அவற்றை செய்ய முடியாது.

இந்த நிலையின் ஓர் அங்கமாக நீதிக்கான அணுகல் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் நீதியமைச்சர் அலி சப்ரி, வெளிவிவ கார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் தலைமையில் வடமாகாணத்தின் பாடசாலை மாண வர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வியாபாரப் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப் பினரும் சந்தித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளனர். இதன் ஊடாக வடபகுதி மக்களின் தேவைகள், எதிர் பார்ப்புகள், குறைபாடுகள் என்பவற்றை அவர்க ளால் அடையாளம் காண முடிந்துள்ளது. அதன் ஊடாக வடக்கு மக்கள் எதற்கு முக்கியத்துவம் அளிக் கின்றனர்? அவர்களது அடிப்படைப் பிரச்சினைகள் எவை? என்பவற்றை அவர்கள் கண்டறிந்துள்ளனர். அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவும் அரசாங்கம் தயாராக உள்ளது.

இதேவேளை வடக்கு, தெற்கு இளம் பராயத் தினர் மத்தியிலான தொடர்புகள் மேம்படுத்தப் பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. பொதுவாக எல்லா இளம் பராயத்தினரும் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்ற பேதமின்றி ஒரே மாதிரியான சிந்தனையிலும் எதிர்பார்ப்பிலும்தான் இருப்பர். குறிப்பாக அவர்கள் பல்லின தன்மையு டன் வாழ்வதற்கான சூழல், குடும்பம் ஒன்றைக் கட் டியெழுப்புதல் போன்றவாறான விடயங்கள் குறித்து சிந்திப்பர். அதனால் இளம் பராயத்தினர் ஒருவ ருக்கொருவர் மத்தியில் புரிந்துணர்வு ஏற்படுத்த வேண்டும். இதற்கு மொழி தடையாக இருந்தால் ஆங்கிலம் போன்ற இணைப்பு மொழியைப் பயன்ப டுத்திக் கொள்ளலாம். அத்தோடு திறன்கள் மூலமும் வடக்கு தெற்கை இணைக்க முடியும்.

இதன் நிமித்தம் கிரிக்கெட் போன்ற விளையாட்டுப் போட்டிகள், கலாசார நிகழ்ச்சிகள், விவாதப் போட்டி கள் போன்றவற்றை முன்னெடுக்கலாம். அத்தோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தென்பகுதி பல்க லைக்கழகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது அவசியம். இவ்வாறான செயற்பாடுக ளின் ஊடாக நாட்டில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்பு வது இலகுவான காரியமாகி விடும். அதனை அடிப் படையாகக் கொண்டுதான் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டு இருக்கின்றது.

ஆகவே அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் விடுத்திருக் கும் இந்த அழைப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவது அவசியம். குறிப்பாக சிறந்த தொடக் கத்திற்கான ஆரம்பமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அழைப்பு இது. அதற்கான பொறுப்பு வடக்கு மக்களின் முன்பாக உள்ளது.

editor.tkn@lakehouse.lk

# சிறுபான்மை அரசியல் சக்திகளிடம் புதிய சிந்தனை உதயமாக வேண்டும்

நாட்டில் இயல்புநிலை மீளத்திரும்பிக் கொண்டிருக்கையில் ஒமிக்ரோன் தொற்று பரவியுள்ளது. அதேசம யம் டொலர் தட்டுப்பாடு, எரிபொருள் பற்றாக் குறை, எரிவாயு வெடிப்பு, மின்சார நெருக்கடி போன்றவற்றை வைத்து அரசுக்கு நெருக்கடி கொடுக்கின்றது எதிரணி.

ஆனால் எதிரணிக்குள்ளோ இப்போது ஏராளமான பிரச்சினைகள்! இப்போதும் கூட குழப்பத்திலும் பதற்றத்திலுமே எதிரணி இருக்கிறது. 2025 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்பாளர்கள் வெளிப்படுகின்றனரே தவிர, இதற்கான வியூ கங்களை இக்கட்சியில் காணவில்லை. சஜித், சம்பிக்க என்று இன்னும் எத்தனை வேட்பா ளர்கள் வெளிப்பட்டு, வெடிப்புக்கள் ஏற்படப் போகிறதோ தெரியாது?

இதற்குள் புகுந்து கொண்ட சிறுபான்மைக் கட்சிகளுக்குத்தான் இப்போது அதிக கவலை பிடித்திருக்கும். தென்னிலங்கையில் மக்கள் மத்தியில் மிளிரக் கூடிய தலைமை கிடைக் காது விட்டால், இன்னும் எத்தனை வருடங்க ளுக்கு இவர்கள் அடையாளமிழக்க நேரிடுமோ தெரியவில்லை. எனவே எதிரணி ஒன்றுபட் டால் மட்டுமே ஆரோக்கியமாக இருக்கும்.

ஆனால், ஆளுந்தரப்பு இவ்விடயத்தில்



இதுவரைக்கும் ஆரோக்கியமாகவே இருக்கி றது. தோழமைக் கட்சிகளின் சீண்டல்களும் சமாதியாகி விட்டன.

எத்தனையோ அரசியல் ஆரூடங்கள் கூறப்படும் நிலையில், சிறுபான்மைச் சமூகங் களின் கட்சிகள் நிலைமைதான் உறுதியற்றதாக உள்ளது. பத்து வருட பூர்த்தியில்தான் பாராளு மன்ற ஓய்வூதியம் என்றிருக்கையில், எதிரணி யிலுள்ள பாதிப் பேரே பக்கம் சாய்ந்து விடலாம்.

தமிழர்களுக்காக சர்வதேசம் பேசலாம். முஸ்லிம்களுக்காக எந்தத் தேசம் பேசுவது? எந்த ஆதாரங்கள் அல்லது ஆவணங்களின் படி நிலைமைகளை விளக்குவது? ஆகக் குறைந்த அதிகார அடையாளத்தையாவது அமுல்படுத்துமாறு மோடிக்கு எழுதப்பட்ட ஆவணத்திலிருந்து ஒதுங்கிய அல்லது பிரிய நேரிட்ட சந்தி எது என்பது, மக்களுக்கு தெளி வூட்டப்படாதது ஏன்? பிடிக்காமல் விலகி யோர் வெளியிலிருந்து இதற்கு ஆதரவளிப் பதாகக் கூறுவதன் பின்புலங்கள் என்ன? இவைதான், சிறுபான்மைக் களங்களின் இன்றைய எதிரொலிகள்.

நாற்பது வருடங்கள் பரிணாமம் அடைந் துள்ள இந்தச் சிறுபான்மை அரசியல் பிரச்சி னைக்கு, இனி புதிய சிந்தனையிலான முறை யிலேயே தீர்வு காண முயற்சிக்க வேண்டும். வண்டிகளில் பயணித்த காலங்கள் கழிந்து, கார்களில் விரையும் காலத்தில், வாழ்க் கையில் கிறவல் வீதியையா உரிமையாகக் கேட்பது? நிலத்துக்கான, இருப்புக்கான அல்லது அடையாளத்துக்கான அதிகாரங்களை அடைந்து கொள்ள அல்லது அர்த்தப்படுத்த புது வழிகளில் சிந்திக்கவே புறப்பட வேண்டும். எவ்வடிவத்திலும் உரிமைகளைக் கைவிட்ட தாக இவ்வழிகள் இருக்கப் போவதில்லை. தென்னிலங்கையும் இதே மனநிலையில் பயணிப்பதையே அவதானிக்க முடிகிறது.

சுஐப் எம்.காசிம்


# லண்டன், இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகங்கள் நடத்தும் இரா. உதயணன் இலக்கிய விருது விழா

லண்டன் தமிழ் இலக்கிய நிறுவ கமும், இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து நடாத்தும் இரா.உதயணன் இலக்கிய விருது விழா– 2019 மற்றும் விருது வழங்கல், ஊடகவி யலாளர் கே.பொன்னுத்துரையின் அகவை 70 நூல் வெளியீடு ஆகிய நிகழ்வுகள் கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்ட பத்தில் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலை மையில் எதிர்வரும் பெப்ரவரி 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளன.

முதன்மை விருந்தினராக 'சாகித்திய ரத்னா' பேராசிரியர் சபா. ஜெயராசா கலந்து சிறப்பிப்பார். இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர் முன்னிலையில் நிகழ்வு நடைபெறும். பேராசிரியர் சோ. சந்திரசேகரம், கலாகீர்த்தி உடுவை எஸ். தில்லைநடராசா, வைத்திய கலாநிதி ஞானசேகரன், ஐ.இராசரத்தினம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்வர்.

கலாபூஷணம் பி. திருஞாவுக்கரசு, வைத்திய கலாநிதி நா. நவகீதன், அ.வைத்தி லிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்பர்.

டொக்டர் யோவான்பிள்ளை சந்திரசேகரம்.




திருமதி பாக்கியம் சந்திரசேகரம் ஞாபகார்த்த விருது (சிறுகதை 'தஞ்சம்') யாழ்ப்பாணம் க. சட்டநாதனுக்கு வழங்கப்படுகிறது. டொக்டர் எம்.என். ஸ்ரீஸ்கந்தராசா ஞாபகார்த்த விருது (தமிழ் வளர்ச்சி இலக்கியம்_ 'சங்கமும் தமிழரும்')

கலாநிதி தமிழ்மணி அகளங்கனுக்கு வழங்கப்படுகிறது.

சின்னவட்டர் ஐயம்பிள்ளை ஞாப கார்த்த விருது ('சிறந்தஊடகவியலா ளர்') சின்னத்துரை சண்முகராஜாவுக்கு வழங்கப்படுகிறது. சின்னத்தம்பி ஸ்ரீ இராமகிருஷ்ணா, திருமதி கமலநாயகி, ஸ்ரீ இராமகிருஷ்ணா ஞாபகார்த்த

### ஊடகவியலாளர் கே.பொன்னுத்துரையின் அகவை 70 நூல் வெளியீடு

விருது (உயர் இலக்கிய விருது) திருமதி அன்னலட்சுமி இராஜதுரைக்கு (யாழ்நங்கை)வழங்கப்படும்.

முருகேசு தம்பு, திருமதி தையல் நாயகி தம்பு ஞாபகார்த்த விருது ('கவிதை சிறகு') வைத்திய கலாநிதி தாஸிம் அகமதுக்கு வழங்கப்படுகிறது. திரு, திருமதி கிட்னர் பாப்பாத்தியம்மாள் விருது(' இனநல்லுறவு இலக்கிய விருது') ஜீ.ஜீ. சரத் ஆனந்தவுக்கு வழங்கப்படுகிறது.

திருமதி தவமணி சிவஞானம் ஞாபகார்த்த 'வாழ்நாள் சாதனையாளர் விருது'கே.ஆர் டேவிட் (யாழ்ப்பாணம்) அவர்களுக்கு வழங் கப்படுகிறது. சிவகாமி நாதபிள்ளை சிங்கா ரம்பிள்ளை ஞாபகார்த்த விருது (அயலகப் படைப்பு– கவிதை' அகாலத்தின் நித்தியக் கடல்') தமிழ்உதயாவுக்கு வழங்கப்படுகி றது. வைரமுத்து தம்பிராசா ஞாபகார்த்த விருது ('வாழ்நாள் சாதனையாளர் விருது) இரத்தினசபாபதிமகேந்திரனுக்கு (முல் லைஅமுதன்) வழங்கப்படுகிறது. கலாநிதி தம்பிராசா வசந்தகுமார் ஞாபகார்த்த விருது ('தேசவியோகநிலையில் சாகித்தி யசமத்ஹார'உயர் விருது) அமரர் திருமதி பத்மாசோமகாந்தனுக்கு வழங்கப்படுகி றது.

# வாழைச்சேனை நூலகத்தின் அரை நூற்றாண்டு நிறைவு

கோறளைப்பற்று பிரதேச சபையின் கீழ் இயங்கு கின்ற வாழைச்சேனை பொதுநூலகத்தின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு, புதிய ஆண்டின் முதல் நிகழ் வாக பொங்கல் விழாவுடன் இணைந்த தாக வாழைச்சேனை நூலகத்தில் சிறுவர் நூலகப் பிரிவை ஆரம்பிக்கும் அங்குரார்ப் பண நிகழ்வும் நடைபெற்றது. சஞ்சிகை வெளியீடு மற்றும் நூலகத்தின் வெளியீட் டுப் பிரிவின் முதல் நூல் வெளியீடான ஔவையாரின் ஆத்திசூடி நூல் வெளியீடு ஆகியனவும் நடைபெற்றன.

வாழைச்சேனை பொதுசன நூலகத்தின் நூலகர் திருமதி ஜெஸ்மின் கப்சா தலை மையில் நடைபெற்ற இவ்விழாவில், கோற ளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் திருமதி ஸோபா ஜெயரஞ்சித், சபையின் செயலாளர் ச.நவநீதன், சனசமூக அபிவி ருத்தி உத்தியோகத்தர் அ.ஹாரூன், நிதி உத

### பொன்விழா ஆண்டின் முதல் நிகழ்வாக பொங்கல் திருநாள் முப்பெரும் விழா

வியாளர் எஸ்.ஜெயரூபன், உள்ளூராட்சி உதவியாளர் க.ரமேஷ் மற்றும் சபையின் உத்தியோகத்தர்கள், பிரதேச இலக்கியப் படைப்பாளிகளான கலாபூஷணம் முத்துமா தவன், கலாபூஷணம் ஹெ.மெத்தியேஸ், கிராம சேவை உத்தியோகத்தர்களான சி.வ ரதராஜன், அ.பிரபு மற்றும் கோறளைப் பற்று பிரதேச சபையின் கீழ் இயங்குகின்ற ஏனைய பொதுநூலகங்களின் உத்தியோ கத்தர்களும் கலந்து கொண்டனர்.

நூலகத்தின் நூலக சேவகர்களாக பணிபு ரியும் திருமதி தாரணி தங்கத்துரை, திருமதி எஸ்.சிவனேஸ்வரி ஆகியோரின் ஏற்பாட் டிலான பொங்கல் விழாவில் தவிசாளர் திருமதி ஸோபா ஜெயரஞ்சித், பொங்கல் பானையில் புத்தரிசி இட்டு விழாவினை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, சிறுவர் நூலக அங்கு ரார்ப்பண நிகழ்வின் பொருட்டு சிறுவர் நூல கத்திற்கான பெயர்ப் பலகை தவிசாளரினால் திறந்து வைக்கப்பட்டது.



பெயர்ப்பலகையினை கிராமசேவை உத்தியோ கத்தர் அ.பிரபு அன்பளிப்பாக வழங்கியி ருந்தார்.

பொன்விழா காணும் நூலகத்தின் செயற்பாடுகளைச் சிறப்பிக்கும் வண்ணம் பிரதேச நூலக, இலக்கியத்தை வளப்ப டுத்தும் வகையில் ஒவ்வொரு மாதமும் வெளிவரும் வண்ணம் 'நூலக உலகம்' எனும் பெயரில் இதழ் வெளியிடப்பட்டது. இதழினை சபையின் தவிசாளர் வெளி யிட்டு வைக்க, கலாபூஷணம் மெத்தியேஸ் பெற்றுக் கொண்டார். நூலகம், புத்தகம், வாசிப்பு தொடர்பான படைப்புக்களுடன், கோறளைப்பற்று பிரதேசம் குறித்த கட்டு ரைகள், வரலாற்றுக் கட்டுரை, முகநூலில் கவிதை எழுதுகின்ற கோறளைப்பற்று பிரதேச படைப்பாளிகளின் கவிதைகளுக்கு களமான 'முகநூல் கவியுகம்' எனும் கவிதைப் பகுதி, மற்றும் வாழைச்சேனை பொதுசன நூலகம் தொடர்பான செய்திகள், தகவல்கள் போன்றவை இதழினை அலங் கரித்தன.

வாழைச்சேனை பொதுசன நூலகத்தில் நூலக சேவகராக பணிபுரியும் அ.ஸ்ரீதர் இதழின் ஆசிரியராக இருந்து, இதழை வடி வமைத்துள்ளார்.



அதனைத் தொடர்ந்து, சிறுவர் பிரிவுக் கான நூல் பதிப்பு நிகழ்வை ஆரம்பித்து வைக்குமுகமாக சபையின் தவிசாளரால் பதிப் பிக்கப்பட்டு, வாழைச்சேனை பொதுசன நூலகத்தின் வெளி யீட்டுப் பிரிவினால் அச்சிடப் பட்டு வெளியிடப்பட்ட ஔவை யாரின் ஆத்திசூடி நூலை சபையின் செயலாளர் வெளி யிட்டு வைக்க கலாபூஷணம் கறுவாக்கேணி முத்துமாதவன் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து, விழாவில் கலந்து கொண்ட அதிதிகளுக்கும், சிறு வர்களுக்கும் 'நூலக உலகம்' சஞ்சிகை மற்றும் 'ஆத்திசூடி' நூல்களின் பிரதிகள் வழங்கப் பட்டன.

எதிர்வரும் ஜூலை 01ஆம் திகதி 50ஆவது ஆண்டை நிறைவு செய்ய வுள்ள வாழைச்சேனை பொதுசன நூலகத் தில் இவ்வருடம் பல்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் பொருட்டு பல்வேறு விட யங்கள் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளன. அவ்வகையில், நூலகத்தின் பொன்விழாக் கொண் டாட்டத்தின் போது புத்தகக் கண் காட்சியும், புத்தக விற்பனையும் மேற்கொள்வதற்காக நூலகத்தின் வெளியீட்டுப் பிரிவினால் குறைந் தது 50 தலைப்புக்களிலாவது சிறுவர்களுக்கான நூல்கள் வெளி யிடப்பட்டு அவை பொன்விழாத் தருணத்தில் காட்சிப்படுத்தப்படும் நோக்கில் இன்றைய முதல் நூல் வெளியீடு இடம்பெறுவதாக முதல் நூலை பதிப்பித்த சபையின் தவி சாளர் தெரிவித்தார். அத்தோடு எதிர்வரும் நாட்களில் நூலகத்தில் திருத்த வேலைகளையும் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எஸ்.ஏ.ஸ்ரீதர்
நூலக சேவகர்,
பொதுசன நூலகம், வாழைச்சேனை.

# புலிகள் அன்று முன்வைத்திருந்த சுயநிர்ணய உரிமையையே சுமந்திரனும் இன்று கோருகின்றார்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அளிக்கும் விளக்கம்

## ஜனாதிபதியின் அழைப்புக்கு தமிழ் கட்சிகள் செவிசாய்க்க வேண்டும்!

புலிகள் முப்பது ஆண்டுகளாக எதனைக் கோரினார்களோ அதே சுயநிர்ணய உரிமையையே சுமந்திரனும், அவர்களின் பாணியில் கட்டமைக்கப்பட்ட அரசியல் கட்சியினூடாக கோருகின்றார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதியினால் 2022.01.18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றப்பட்ட கொள்கை விளக்க உரையை மேற்கோள்காட்டி எம்.சுமந்திரன் எம்.பி தெரிவித்தாக பத்திரிகையொன்றில் வெளியான அறிக்கை தொடர்பில் அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர ஊடகங்களுக்கு விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையிலேயே அமைச்சர் சரத் வீரசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையில் வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகள் தங்களது அரசியல் கொள்கைகளை ஒருபுறம் தள்ளிவைத்துவிட்டு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மிகுந்த வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிப்பதுடன், அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்குமாறுமே கூறியிருந்தார்.

அவ்வாறிருக்கையில் வடக்கு, கிழக்கு மக்கள் போராடியது தங்களது நன்மைகளை நாடி அல்ல என்றும், சமஉரிமைக்காகவே போராடினார்கள் என்னும் கோணத்திலும் தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார் சுமந்திரன். அம்மக்கள் வசதிகளுக்காக போராடவில்லை என்றும் சமமான குடியுரிமை, சுயநிர்ணய உரிமை மற்றும் சுயாட்சி உரிமைகளுக்காகவே போராடுகிறார்கள் என்றும் அதனைத்தான் அவர்கள் விரும்புகின்றார்கள் என்றும் அவர் கூறுகின்றார்.

பொருளாதாரம் பற்றி பேசும் போது சுமந்திரன் வெளிப்படையாக பல்வேறு விடயங்களை கூறுவதற்கு தவறிவிட்டார். இந்த நாட்டின் பொருளாதார முதுகெலும்பான சுற்றுலாத்துறையினால் கிடைக்கக் கூடிய 4.5 பில்லியன் வருமானம் கொவிட் தொற்றின் காரணமாக முற்றாக இழக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப்பயணிகளின் வருகை இல்லாமல்போனதால் ஆயிரக்கணக்கானவர்கள் வேலையிழந்துள்ளனர். தடுப்பூசி செலுத்துவதற்காக அரசாங்கம் பெருந்தொகை நிதி செலவிட்டுள்ளது. தனிமைப்படுத்தல் காலங்களில் குடும்பம் ஒன்றுக்கு தலா 5000 ரூபா வழங்கப்பட்டதுடன், சுமந்திரன் உட்பட 15 இலட்சம் அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளமும் தொடர்ந்து வழங்கப்பட்டது. மேலும் சர்வதேசத்திடமிருந்து பெற்ற கடன் முறிகளை அரசாங்கம் தொடர்ந்து செலுத்திக் கொண்டேதான் இருக்கின்றது.

நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக திட்டங்களையும், வழிகளையும் ஜனாதிபதி காண்பிக்கின்றார். இதனை சுமந்திரன் எள்ளிநகையாடி பேசுகின்றார். ஆனால் ஜனாதிபதி அந்நிய செலாவணியை ஈட்டுவது தொடர்பிலான திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கின்றார்.

சுமந்திரன் ஒரு உண்மையை மறந்திருக்கின்றார். மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் ஏனைய நாடுகளை விட கொவிட் இற்கு எதிராக 85 வீதமான மக்களுக்கு தடுப்பூசி செலுத்தி, அதனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கின்ற ஒரு நாடு இலங்கையாகும்.



புலிகள் பல்லாயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்தார்கள். கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் அதேபோன்று தமிழினத்தின் கல்வியலாளர்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் என பலரையும் கொன்று குவித்தார்கள். பல்லாயிரம் பெறுமதிமிக்க அரச சொத்துக்களை அழித்து நாசம் செய்தார்கள். அதேபோல் முன்னொருபோதும் இல்லாதவகையில் இளைஞர்களையும், பிள்ளைகளையும் வலுக்கட்டாயமாக கடத்தி சிங்கள மக்களை கொல்வதற்காக அவர்களுக்கு மூளைச்சலவை செய்து பயிற்சி வழங்கி அதனை இலக்காக கொண்டு செயற்பட்டனர். ஆனால் மிகவும் சாணக்கியமான முறையில் அரசபடைகள் புலிகளை மாத்திரமன்றி அவர்களது சுயநிர்ணயம் என்கிற கருத்தியலையும் தோற்கடித்தனர். அதனை வெற்றி கொள்ள அதிகளவான செலவு மாத்திரமன்றி 29ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன், 14ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தங்கள் அவயவங்களை இழந்திருக்கின்றார்கள்.

புலிகளும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் சுயநிர்ணய உரிமையை வடக்கில் ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். அது இராணுவ பலத்தை பிரயோகித்து சுக்குநூறாக்கப்பட்டது. யுத்தத்தின் பின்னர் வடக்கிலே மிகப் பாரியளவான அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டிருந்தது. அது 22வீதமான அபிவிருத்தியாகக் காணப்பட்டது. அப்போது கொழும்பில் அந்த அபிவிருத்தி 7 வீதமாகவே இருந்தது. ஆனால் சுமந்திரன் அப்போது கொழும்பில் வாழ்ந்து கொண்டு சுயநிர்ணயத்துக்காக குரல் எழுப்பிக் கொண்டிருந்தார். இதன் பின்னாலுள்ள மறைமுக நிகழ்ச்சி நிரல் என்ன?

புலிகளினதும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் சிந்தனை ஒன்றாகவே இருக்கின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பானது புலிகளினால் நேரடியாகவே கட்டுப்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்ட கட்சி. கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற சிறப்புரிமையினை மீறுகின்றவர்களாக காணப்பட்டனர்.

அதேபோன்று அரசியலமைப்பையும் மீறினார்கள். புலிகளின் கொள்கைப் பிரகடனத்தை கடல் கடந்த நாடுகளில் கொண்டு நடத்துகின்றவர்களாகவும் காணப்பட்டார்கள். புலிகளின் சர்வாதிகாரப் போக்கிற்கு எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஒருபோதும் குரலெழுப்பவில்லை.

அதேபோன்று புலிகளால் மனிதக் கேடயங்களாக சிறைப்பிடிக்கப்பட்ட மக்களை விடுதலை செய்யும்படி குறைந்தபட்சம் ஒரு கோரிக்கையையேனும் அவர்களால் விடுக்க முடியவில்லை. அதேபோன்று அப்பாவி தமிழ் மக்களுக்கு ஒரு அரிசி பக்கட் கூட அவர்களால் வழங்க முடியவில்லை.

விடுதலைப் புலிகளின் வருடாந்த வருமானம் 400மில்லியன் டொலராக காணப்பட்டது என்று ஜென்ஸ் என்கிற பாதுகாப்பு வாராந்த சஞ்சிகை குறிப்பிட்டது. புலிகளினாலோ, தமிழ் தேசியக் கூட்டமைப்பினராலோ முப்பதாண்டு காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு ஒற்றைப் பாதையைக் கூட நிர்மாணிக்க முடியவில்லை. ஏழை மக்களுக்காக ஒரு வீட்டைக் கூட அவர்களால் கட்டிக் கொடுக்க முடியவில்லை. அவர்களால் சிறந்த மாணவர் ஒருவரைக் கூட உருவாக்க முடியவில்லை. சிறுவர்களை யுத்தத்தின் கேடயங்களாகவே பயன்படுத்தினர். ஒரு வைத்தியசாலையையோ, பாடசாலையையோ கட்டிக்கொடுக்க முடியவில்லை. ஆனால் ஆடம்பர வசதிகளுடன் வாழ்வதற்குத் தேவையான பதுங்குகுழிகள் ஏற்படுத்தப்பட்டு, நீச்சல் தடாகங்கள் நிர்மாணிக்கப்பட்டு அதி சொகுசாகவே பிரபாகரன் வாழ்ந்து கொண்டிருந்தார்.

வடக்கிலே மிகக் கொடூரமான ஒருவருடைய ஆட்சிதான் நடந்துகொண்டிருந்தது என்பது யுத்தகாலத்தில் எங்களுக்கு நன்றாகத் தெரியும் . தமிழ் மக்களையே தங்களுடைய எதிரிகளாக பார்த்தனர். சி.வி.விக்னேஸ்வரன் பிரபாகரனின் நீதிமன்றங்களில் நீதிபதியாக பணியாற்றியிருந்தால் அவருக்கு என்ன மரியாதை கிடைத்திருக்கும்?

ஆனால் சுமந்திரன் சுயகௌரவம், சமத்துவம் மற்றும் நீதி பற்றி தமிழ் மக்கள் மத்தியிலே பேசிக் கொண்டிருக்கின்றார். பாதுகாப்புப் படையினர் வடக்கை விடுவித்ததன் காரணமாகவே சுமந்திரன் போன்ற தமிழ்த் தலைவர்களால் தலைநிமிர்ந்து நடக்கவும் கௌரவமாக தமது அரசியலை முன்னெடுக்கவும் முடிந்தது. இன்று சுமந்திரனால் ஜனாதிபதியை அச்சமின்றி விமர்சிக்க முடிகின்றது. ஆனால் தமிழர்களின் ஏகபிரதிநிதி என்று அறிவித்த பிரபாகரனின் ஆட்சியில் பிரபாகரனுக்கு எதிராக ஒரு வார்த்தை கூட பேச அவர்களுக்கு சுதந்திரம் இருக்கவில்லை. தமக்கு நீதியோ, மரியாதையோ மற்றும் சமத்துவமோ கிடைக்காது என்று தெரிந்தும் கூட பிரபாகரனின் அதிகாரத்தை ஏற்க சம்மதித்ததனால் சுமந்திரனும் தமிழ்த் தலைவர்களும் தங்களது மானத்தை இழந்தனர். அரசாங்கத்தின் கீழ்தான் சுதந்திரமான மனிதர்களாக செயற்பட முடிந்தது.

தமிழர்களுக்கு சுயநிர்ணயம் அவசியம் என்று இன்னமும் சுமந்திரன் கருதினால் தமிழர்களுக்கு பிரத்தியேகமாகவும், அரசியலமைப்பு ரீதியாகவும் மறுக்கப்பட்ட உரிமைகள் என்ன என்பதை அவர் தெளிவாக குறிப்பிட வேண்டும். சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் அல்லது பறங்கியர், மலாய் இனத்தவர்களுக்கும் பாகுபாடுகள், குறைகள் ஏதும் உள்ளனவா? 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணம் எவ்வாறு இருந்தது, இப்போது எவ்வாறு இருக்கின்றது என்பதை கற்பனை செய்து பார்க்க வேண்டும்.

பயங்கரவாத குண்டுகளை சுமந்தவர்களின் எவ்வித அச்சுறுத்தல்களும் இன்று அங்கு இல்லை. மக்கள் கொல்லப்படுவதற்காக கேடயங்களாக பாவிக்கப்பட்டு வந்த நிலை இன்று இன்று அங்கில்லை. அம்மக்கள் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். புலிகளுக்கு வரி செலுத்துவதைப் போன்றல்லாது சுதந்திரமாக தொழிலில் ஈடுபடுகின்றனர். தற்போது உட்கட்டமைப்பு வசதிகள் பாரியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனாலேதான் ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையில் வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகள் தத்தமது வித்தியாசமான அரசியல் எண்ணக்கருக்களை தள்ளிவைத்து விட்டு அரசாங்கத்திற்கு ஆதரவளிக்குமாறும், அந்த பிரதேசத்தில் வாழுகின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரியிருந்தார். இதுவே இந்த நாடும் மக்களும் இன்று இறுதியாக இந்த நாட்டின் மீது அபிமானம் கொண்ட மக்களிடத்தில் விடுக்கும் கோரிக்கையாகும்.

இன்னுமொரு விடயத்தை கவனமாக உற்றுநோக்குதல் அவசியம். தெற்கிலே 50வீதத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் சிங்கள மக்களுடனும், முஸ்லிம்களுடனும் ஐக்கியமாக வாழ்கின்றனர். அவர்கள் வெவ்வேறு வகையான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். வடக்கிலுள்ள தமிழ் மக்கள் ஒன்றைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் எதனைக் கொண்டு வரப் போகின்றார்கள்? இப்போது எதனை வைத்திருக்கின்றார்கள்? நீங்கள் சுமந்திரனிடம் கேளுங்கள் சுயநிர்ணயம், சுயாட்சி அடையப்படுமாகவிருந்தால் நீங்களும், உங்கள் குடும்பத்தினர்களும் வடக்கில் வாழ்வீர்களா என்று. அவ்வாறு வாழும்போது இங்கிருக்கின்ற சமூகங்களுக்கு இடையில் சுயகௌரவமாகவும், இறைமையுடனும், சமத்துவமாகவும், நீதியாகவும் உங்களால் எங்களை நடத்த முடியுமா என்று கேளுங்கள். .

சுயநிர்ணயத்திற்காக போராடுகின்றோம் என்று கூறுவார்களே தவிர வடமாகாணத்திலுள்ள ஏனைய தமிழ் மக்களோடு இணைந்து ஒற்றுமையாக அவர்கள் வாழவுமில்லை, வாழவும் மாட்டார்கள். அவர்களின் பிள்ளைகளால் கூட அது முடியாது. அவர்கள் இன்னும் பெருமைவாத கோட்பாடுகளை வைத்துக் கொண்டு தமிழர்களை பிரிவினைவாதிகளாக காட்டிக் கொண்டேயிருப்பார்கள்.

அவர்களால் தமிழர்களுடன் ஒற்றுமையாக வாழ முடியாது. இதனை புரிந்து கொண்டுதான் ஜனாதிபதி தத்தமது வித்தியாசமான அரசியல் சித்தாத்தங்களை விட்டுவிட்டு அந்த மக்களுக்கு உதவுவதற்கான நேரம் இதுவே என்றும், இந்த அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு நல்குங்கள் என்றும் கூறினார். இதனை தமிழ் மக்களே புரிந்து செயற்படுதல் வேண்டும். அதிக வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு முன்வந்துள்ள ஜனாதிபதியின் கருத்துக்கு ஆதரவளிப்பது பற்றி கௌரவமான தமிழ் மக்கள் தீர்மானமொன்றுக்கு வருவது இக்காலகட்டத்தில் மிக அவசியமாகும்.



இவ்வாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

றிசாத் ஏ காதர்...

---

# பொலிஸ் சேவையில் மக்கள் உள்ளம் கவர்ந்த பண்பாளன் ஓய்வு பெற்ற டி.ஐ.ஜி அரசரத்தினம்

## அன்னார் காலமாகி ஒரு மாதம் நிறைவு (29.12.2021)

காரைநகரின் மேற்கே உள்ள பத்தர்கேணியைச் சேர்ந்த அரச ஊழியரான கனகரத்தினம் மற்றும் பொன்னுப்பிள்ளை தம்பதியருக்கு 02.01. 1953 இல் அரசரத்தினம் மகனாகப் பிறந்தார். அவர் தனது ஆரம்பக் கல்வியை 'கோவிந்தன் பள்ளிக்கூடம்' எனப்படும் காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் கனிஷ்ட பாடசாலையில் தொடங்கினார். பின்னர் தனது தந்தையின் தொழில் நிமித்தமாக அவர் குடியிருந்த அனுராதபுரத்தில் உள்ள விவேகானந்தா மகாவித்தியாலத்திலும், சென் ஜோசப் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தார்.

பாடசாலைக் காலத்தில் விளையாட்டுத்துறையில் மிகவும் ஆர்வமாக இருந்த அவர் உதைபந்தாட்டம், றகர், குத்துச்சண்டை போன்ற விளையாட்டுகளில் மிகவும் ஆர்வமாக இருந்து பல பதக்கங்களையும் கேடயங்களையும் தனதாக்கிக் கொண்டார். தேசிய மட்டத்தில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் 1975 ஆம் ஆண்டு சம்பியன் ஆனார். பொலிஸ் துறையில் சேர்ந்த பின்னர் பொலிஸ் திணைக்களத்தின் றகர் அணியில் இணைந்து பல போட்டிகளில் விளையாடி பொலிஸ் அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தார் .

பாடசாலைக் காலத்தில் விளையாட்டுத் துறையில் மட்டுமல்லாது கலைத்துறையிலும் ஈடுபாடு காட்டிய அவர், பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற பல்வேறு இலக்கிய விழாக்கள் மற்றும் கலைவிழாக்களிலும் பங்குபற்றினார். அவர் நகைச்சுவை உணர்வு கொண்டவர். பல வானொலி, தொலைக்காட்சி நிகழ்வுகளில் பங்குபற்றினார். கலை, இலக்கிய பண்பாட்டுச் செயற்பாடுகளில் இயங்கிய பல்வேறு நிறுவனங்களோடு தன்னை இணைத்துக் கொண்டு செயற்பட்டார் . குறிப்பாக அகில இலங்கை நகைச்சுவை மன்றத்தின் தலைவராகப் பல வருடங்கள் செயற்பட்டு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினார். இலங்கை திரைப்படத் தணிக்கைக் குழுவிலும் அங்கத்தவராக இருந்து தனது பங்களிப்பை வழங்கினார் . இந்த ஆர்வம் காரணமாகத் தனது சுயசரிதையை எழுத முற்பட்டவர், தனது எழுத்துப்பணி முடியும் முன்பே இவ்வுலக வாழ்வை விட்டு நீங்கினார்.

15.10.1976 இல் பொலிஸ் உப பரிசோதகராகத் தெரிவு செய்யப்பட்ட அவர், பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் ஏழு மாதங்கள் பயிற்சி பெற்ற பின் 16.04.1977 இல் பாணந்துறை பொலிஸ் நிலையத்தில் உபபரிசோதகராக (SI) நியமனம் பெற்றார் . அவர் பாணந்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் காலத்திலேயே இனக்கலவரம் 1977 இல் ஏற்பட்டது. இந்த இனக்கலவர காலத்தில் தனி ஒருவராக நின்று பாதிப்புற்ற தமிழர்களைக் காப்பாற்றுவதில் தனது உயிரையும் பொருட்படுத்தாது செயற்பட்ட போது வன்முறையாளர்களின் கத்திக்குத்துக்கு இலக்கானார்.

பொலிஸ் தலைமை அலுவலகத்தில் கடமையாற்றும் காலத்தில் காரைநகர் தங்கோடை வேம்படியைச் சேர்ந்த செல்லத்துரை_ அன்னமுத்து தம்பதிகளின் புதல்வி பொன்மலரை திருமணம் முடித்தார். இத்தம்பதியினருக்கு மூத்த குழந்தையாக மகள் ஷாமினியும் அவரைத் தொடர்ந்து சுரஞ்சன், இந்துஜன் என்று இரு புதல்வர்களும் பிறந்தனர் .

தலைமன்னாரில் பரிசோதகராக பதவி உயர்வு பெற்று பொறுப்பதிகாரியாகப் பணியாற்றிய பின்னர் கறுவாக்காடு பொலிஸ் நிலையைப் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் போது பொலிஸ் தலைமையகத்தில் அமைந்துள்ள பொலிஸ் போக்குவரத்து கல்விப்பிரிவுக்கு பொறுப்பதிகாரியாக நியமனம் பெற்றார்.அங்கு கடமையாற்றும் காலத்தில் முருங்கன் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக நியமனம் பெற்றார். பின்னர் மீண்டும் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு 01.03.1990 இல் பிரதான பொலிஸ் பரிசோதகராக(Chief Inspector) பதவி உயர்வு பெற்று தலைமை நிலையப் பரிசோதகராக(HQI) நியமனம் பெற்றார். இவ்வாறு இவர் முருங்கன் மற்றும் மன்னார் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் காலத்தில் இந்திய அமைதிப்படை இந்த நாட்டில் இருந்தமை குறிப்பிடத்தக்கது .

மன்னாரில் கடமையாற்றும் காலத்தில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு தலைமை நிலையப் பரிசோதகராக நியமனம் பெற்றார். இக்காலப் பகுதியில் உள்நாட்டு போரின் போது தாக்குதலில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பிய இவர் மீண்டும் பொலிஸ் தலைமையலுவலகத்தில் உள்ள வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் அலுவலகத்தில் இணைப்பதிகாரியாகக் கடமையாற்றினார். 01.02.1992 அன்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றார். 10.02.1992 அன்று



பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் உதவிப் பணிப்பாளராக நியமனம் பெற்றார்.

மீண்டும் கொழும்பு பெரும்பாக போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் பிரத்தியேக அலுவலராக நியமனம் பெற்றார். பின்னர் கொழும்பு நகர போக்குவரத்துப் பிரிவுக்குரிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக நியமனம் பெற்றார். பின்னர் வவுனியாவுக்கான உதவி பொலிஸ் அத்தியட்சகராக 15.06.1996 அன்று நியமனம் பெற்றார்.

யுத்தம் காரணமாக வவுனியா நகரம் யாழில் இருந்தும் வன்னியில் இருந்தும் இடம்பெயர்ந்த மக்களாலும், மருத்துவ காரணங்கள், குடும்ப காரணங்கள் உட்பட பல்வேறு காரணங்களுக்காக தென்பகுதிக்கு செல்ல முற்பட்ட மக்களாலும் வெளிநாடுகளுக்குச் செல்ல முண்டியடித்த மக்களாலும் நிறைந்த காலப்பகுதியாக இருந்தது. பயண அனுமதி பெறாமல் ஈரப்பெரிய குளத்தில் உள்ள தடை முகாமைத் தாண்ட முடியாத காலம் . இத்தகைய காலத்தில் இந்தத் தடை முகாமைத் தாண்ட வேண்டிய நூற்றுக்கணக்கான மக்களுக்கு அவர்கள் தாண்டிச் செல்வதற்கான அனுமதிகளை பலத்த சிரமங்களின் மத்தியில் வழங்கினார்.

பின்னர் தங்காலை பொலிஸ் மாவட்டத்திற்கும் பாணந்துறை பொலிஸ் மாவட்டத்திற்கும் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றினார். இவ்வாறு கடமையாற்றும் காலத்தில் 21.02. 2000 அன்று பொலிஸ் அத்தியட்சகராக (SP) பதவி உயர்த்தப்பட்டு பொலிஸ் தலைமையகத்தில் சிவில் பாதுகாப்புப் பிரிவிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். பின்னர் நீர்கொழும்பு மற்றும் களுத்துறை பொலிஸ் மாவட்டங்களின் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டார். பொலிஸ் தலைமையகத்தில் போக்குவரத்துப் பிரிவிற்குப் பொறுப்பான அத்தியட்சகராக நியமிக்கப்பட்டார் .பின்னர் கல்கிசை பொலிஸ் மாவட்டத்தில் அத்தியட்சகராக கடமையாற்றும் போது சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகராக(SSP) 22.05. 2005 அன்று பதவி உயர்வு பெற்றார் .

பின்னர் பொலிஸ் கைரேகைப் பிரிவிற்கு பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டவர் 11.06.2009 அன்று அதே பிரிவிற்கு பணிப்பாளராக நியமனம் பெற்றார். பின்னர் பொலிஸ் தலைமையகத்தில் நிர்வாகப் பகுதிக்குப் பொறுப்பான மேலதிக பணிப்பாளராக நியமனம் பெற்றவர், பொலிஸ் தலைமையகத்தில் கட்டடங்கள் பிரிவிற்குப் பணிப்பாளராக நியமனம் பெற்றார். இவ்வாறு கடமையாற்றும் போது மீளவும் பொலிஸ் தலைமையகத்தின் போக்குவரத்துப் பிரிவின் போக்குவரத்து நிர்வாகப் பிரிவின் பணிப்பளராகக் கடமையாற்றும் போது நீதிமன்ற உத்தரவின்படி பிரதிப் பொலிஸ் மா அதிபராக(DIG) 01.01.2013 அன்று பதவி உயர்வு பெற்று 02.01.2013 அன்று முப்பத்தேழு வருட நீண்ட பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார் . ஓய்வின் பின்னரும் கூட கிழக்கு மாகாணத்துக்கான சமூகப் பொலிஸிற்கான ஆலோசகராகவும் அதன் இணைப்பாளராகவும் ஆறு மாதங்கள் வரை பணியாற்றினார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப் பட்டதாரியான இவர், கொழும்புப் பல்கலைக் கழகத்தில் மனித உரிமைகளில் டிப்ளோமாவையும், மனித உரிமைகளும் சமாதானக் கல்வியிலும் டிப்ளோமாவையும் பெற்றுக் கொண்டார். பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களில் பயிற்சிகளையும் பெற்றுக் கொண்ட அவர், பல்வேறு சர்வதேச மகாநாடுகளில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவம் செய்தார்.இவரின் இந்தச் சேவைகளைப் பாராட்டி பொலிஸ் தலைமை அலுவலகத்தால் சிறந்த பொலிஸ் அலுவலருக்கான விருதினை நான்கு முறை பெற்றிருக்கிறார் .

அதேபோன்று சமூக சேவைகளிலும் ஆர்வம் உள்ள இவர் கொழும்பு தெற்கு றோட்டறிக் கழகத்தில் இணைந்து பல்வேறு சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டார் .குறிப்பாக அக்கிளையின் தலைவராக கடமையாற்றிய காலப்பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். இதேவேளை சர்வதேச பொலிஸ் சங்கத்தின் இலங்கைப் பிரிவிற்கான நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும், ஆசியப் பிராந்திய குற்றத் தடுப்பு நிறுவனத்தின் இலங்கைப் பிரிவிற்கான நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும், ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகள் நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும் கடமையாற்றி பணிகளையும் முன்னெடுத்தார். சிறந்த கலை இலக்கிய ஆர்வலரான அவர் நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கியதுடன் புரவலராகவும் இருந்து பல நிகழ்ச்சிகள் நிறைவேறுவதற்கு உதவியாக இருந்துள்ளார். பொலிஸ் திணைக்களத்தில் பணியாற்றிய காலத்தில் இன ,மத, சாதி,மொழி, பிரதேச, பால் வேறுபாடுகள் எதனையும் பாராது உதவி என்று வந்த பலருக்கும் தன்னாலான உதவிகளைச் செய்துள்ளார். உதவிகளை கேட்டால் முகம் சுளிக்காது அவர்களுக்கு உதவி செய்கின்ற மனப்பான்மை அவரிடம் இருந்தது. குறிப்பாக சிங்கள மொழி தெரியாத பலருக்கு அவர் உதவியாக இருந்துள்ளார். அரசரின் சமூகம் சார்ந்த சேவையைப் பாராட்டி தற்காப்புக் கலைகளுக்கான சர்வதேசப் பல்கலைக்கழகம் 2003 ஆம் ஆண்டு கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கி இருந்தது.பிறருடைய பிரச்சினைகளை எல்லாம் தன்னுடைய பிரச்சினைகளாகச் சுமந்த அவர் 29.12.2021 அன்று காலமானார்.



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்...

# அதிக திறனுடைய தடைசெய்யப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்கள் மீட்பு

## பல கோடி ரூபா பெறுமதியென தெரிவிப்பு




இலங்கை வீதிகளில் பயன்படுத்த தடை செய்யப்பட்ட அதிக திறன் வாய்ந்த 1.2 கோடி ரூபாய் பெறுமதியான இரண்டு மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தென் மாகாணத்தில் இருந்து மேல் மாகாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த 100 மோட்டார் சைக்கிள்கள் கொண்ட பேரணியில் இந்த மோட்டார் சைக்கிள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதில் பயணித்த இளைஞர்கள் இருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி கொழும்பு பிரதான வீதியின் ஊடாக பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் பேரணி, மேல் மாகாணம் வரை பயணித்துக் கொண்டிருந்த போது அழுத்கம நகர போக்குவரத்து பொலிஸ் குழுவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது. இதன் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் களுத்துறை பிரதேசத்தை சேர்ந்தவர்களாகும் என பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# அனுர மீது முட்டை வீசியது நானல்ல!



## அமைச்சர் பிரசன்ன மறுப்பு தெரிவிப்பு

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கவின் கார் மீது நடத்தப்பட்ட முட்டை வீச்சு தாக்குதலுக்கும் தனக்கும் தொடர்பில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் தனக்கு தொடர்பு இருப்பதாக வெளியான செய்திகளை மறுத்துள்ள அவர், இந்த சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தனது சமூக வலைத்தள கணக்குகளிலும் பதிவிட்டுள்ளார்.

"கலகெடிஹேனவில் நடைபெற்ற கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவரின் கார் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தில் நான் ஈடுபட்டதாக சமூக வலைத்தளங்களில் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்தை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

கம்பஹா மாவட்டத்தில் மாத்திரமன்றி எங்கும் அரசியல் கூட்டத்தை நடத்துவதற்கான ஜனநாயக உரிமையை அங்கீகரித்து மதிக்கும் நபர் என்ற வகையில், இவ்விடயம் தொடர்பில் முறையான விசாரணைகளை நடாத்தி, இதற்குக் காரணமானவர்களை கடுமையாக தண்டிக்க நான் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளேன் என்பதை வலியுறுத்துகிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அனுரவை தாக்குவதற்கு ரூ. 5000வை பெற்றோம்

கைதான சந்தேக நபர்கள் சாட்சியம்

ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கவின் கார் மீது தாக்குதல் நடத்திய நபர்களுக்கு 5000 ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைதானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, கொழும்பிலுள்ள வர்த்தகர் ஒரு வர் தமக்கு 5000 ரூபாவை கொடுத்து இந்த இடத்துக்கு அனுப்பி வைத்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இருவரையும் நிட்டம்புவ பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அதிகாரபூர்வமற்ற தகவல்களின்படி கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த பலம் வாய்ந்த அமைச்சர் மற்றும் பலம் வாய்ந்த வர்த்தகர் ஒருவரால் இந்தக் குழுவுக்கு தலைமை தாங்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

# பொரல்ல கால்வாயில் ஆணின் சடலம் மீட்பு

## பொலிஸார் விசாரணை முன்னெடுப்பு

கொழும்பு பொரளை லேக் டிரைவில் அமைந்துள்ள கால்வாயில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## தனிப்பட்ட தரவு பாதுகாப்பு... (03 ஆம் பக்கத் தொடர்)

அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் மனு விசாரிக்கப்பட்டது.

சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஏழு நாட்களுக்குள் அதற்கு எதிரான மனுவை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் குறித்த காலத்திற்குள் மனு தாக்கல் செய்யப்படாததால் இந்த மனு காலதாமதமானது எனவும் சட்டமா அதிபர் சார்பில் சுட்டிக்காட்டப்பட்டது.இந்த அடிப்படை ஆட்சேபனையை ஏற்றுக்கொண்டு மனுவை விசாரிக்க உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் கோரினார்.

உத்தேச சட்ட மூலத்தில் ஊடகவியலாளர்களின் உரிமைகள் உள்ளடக்கப்படவில்லை என்று மனுதாரர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. குறித்த சட்டமூலத்தின் மூலம் நியாயமான கருத்துக்களை வெளியிடும் உரிமை குறைக்கப்படும் எனவும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.இந்த சட்டமூலத்தின் விதிகள் அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகவும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, இது சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமானால், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டிருந்தது. (பா)

## ஜனவரியில் மாத்திரம்... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்த வருடம் டெங்கு பரவலாம் என கடந்த 15 வருட அனுபவத்தில் இருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர், ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருவதாகவும், கொவிட் நோயால் பாதிக்கப்பட்ட டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தால், அது ஒரு தீவிர தேசிய சுகாதாரப் பிரச்சினையாக மாறும் என்றும் அவர் கூறினார். டெங்கு பரவுவதை தடுக்க முடியும் என்றும், டெங்கு குடம்பிகள் பரவாமல் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். குறிப்பாக டெங்கு நுளம்புகளை பரப்பும் வகையில் தண்ணீர் தேங்கும் இடங்களை அழித்து வாரத்தில் ஒரு நாளாவது சுற்றுப்புறத்தை சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ப)

## உயர்தரப் பரீட்சை இடம்பெறும்... (03 ஆம் பக்கத் தொடர்)

எதிர்கொள்ள நேரும் என தெரிவித்துள்ள அவர் உலகில் எந்த நாட்டிலும் பரீட்சைகள் ஒத்திப்போடப் படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மாணவர்களை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் அதேவேளை, அவர்களுக்கான கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.(ஸ)

## 81 பிரதேச செயலாளர்...

இரத்தினபுரி, அம்பாறை, திருகோணமலை, குருநாகல் மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் கடுமையான டெங்கு அளவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஜனவரி மூன்றாம் வாரத்தில் கொழும்பு மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 411 பேரும், கம்பஹாவில் 305 பேரும், களுத்துறையில் 120 பேரும், குருநாகலில் 109 பேரும், புத்தளத்தில் 96 பேரும், காலியில் 83 பேரும், கண்டியில் 73 பேரும் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் இதுவரை 7,000 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 2 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

## தடுப்பிலுள்ள அரசியல்...

தொடர்பிலான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தற்போது திருத்தப்படுகின்றது. எதிர்காலத்தில் அதனை முழுமையாக மாற்றியமைக்கும் திட்டமும் இருக்கின்றது என்றும் அத்துடன் அரசியல் கைதிகள் என்று சட்டத்தின் அடிப்படையில் எவரும் இல்லை. அவர்கள் அனைவரும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ச.தொ.சவில் 75 ரூபாவுக்கு...

சபைக்கும் வர்த்தக அமைச்சுக்கும் இடையில் விசேட உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திட ப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் 75 ரூபா உச்சவிலையில் ஒரே தடவையில் 5 தேங்காய்களை கொள்வனவு செய்ய முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்: 75 ரூபாய் உத்தரவாத விலைக்கு இந்த வருடம் முழுவதும் நுகர்வோர் ச.தொ.சமூலம் தேங்காய்களை பெற்றுக்கொள்ள முடியும்.

அதேவேளை தேங்காயை கொள்வனவு செய்ய விரும்பாத நுகர்வோர் ஏற்றுமதிக்கு உகந்த வகையில் தயார் செய்யப்பட்டுள்ள 2 தேங்காய்களின் பாலை 150 ரூபாவுக்கு சதோச மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நிலையில் சந்தையில் தேங்காயின் விலை மேலும் குறைவடைந்தால் இந்த தேங்காயின் விலையும் குறைவடையும். எனினும் சந்தையில் தேங்காயின் விலை அதிகரித்தால் ச.தொ.ச மூலம் விற்பனை செய்யப்படும் தேங்காயின் விலை அதிகரிக்கப் படாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை ச.தொ.சமூலம் குறைந்த விலையில் அரிசியை கொள்வனவு செய்வதற்கும் நுகர்வோருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## பக்கச்சார்பற்ற விசாரணைக்கு...

வைத்துள்ளார்.

கம்பஹா கலகெடிஹேன பிரதேசத்தில் தேசிய மக்கள் சக்தி யினால் நடத்தப்பட்ட கூட்டத்தின் போது முட்டை வீசித் தாக்கப்பட்டமை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க வேண்டுமென சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஜனாதிபதி மற்றும் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். கூட்டம் நடத்த எவருக்கும் ஜனநாயக உரிமை உள்ளதாகவும் அதனை ஏற்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் மாத்திரமன்றி நாட்டின் எந்தப் பகுதியிலும் அரசியல் கூட்டங்களை நடத்துவதற்கான ஜனநாயக உரிமையை அங்கீகரிப்பதாகவும், அதற்கு மதிப்பளிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். கம்பஹா மாவட்டத்திலுள்ள புத்திஜீவிகள் இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகளை ஏற்றுக் கொள்வதில்லை எனவும் எனவே இவ்விடயம் தொடர்பில் முறையான பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு அவர் எழுதியுள்ள கடிதங்களில் சுட்டிக்காட்டியுள்ளார்.

முட்டை வீசி தாக்குதலைத் தாக்கியவர்களுக்கும் அதற்கு ஆதரவளித்தவர்களுக்கும் எந்தத் தரமும் இன்றி கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டுமென ரணதுங்க தனது கடிதத்தில் கோரியுள்ளார். இதேவேளை, இந்த சம்பவத்துடன் தனக்கு தொடர்பு இருப்பதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகும் பிரச்சாரத்தை வன்மையாக மறுப்பதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தனது முகநூலில் குறிப்பிட்டுள்ளார். இந்த தாக்குதலை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட தலைவர் என்ற வகையில் அவர் வன்மையாக கண்டித்துள்ளார். கம்பஹா மாவட்ட மக்கள் முன்னணியின் தலைவர் என்ற ரீதியில் இவ்வாறான சம்பவங்களை தான் ஏற்றகவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (பா)

## தமிழக மீனவர்கள் விடயத்தில்...

அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், "எல்லை தாண்டி மீன் பிடித்தால் சிறையில் அடைக்கப்படுவோம், உடமைகள் அரசுடைமையாக்கப்படும் என தெரிந்தும் அவர்கள் இங்கே வந்து மீன் பிடிக்க மாட்டார்கள் என நான் நினைக்கின்றேன். எடுத்த எடுப்பில் சில விடயங்களை நாம் செய்ய முடியாது.

இந்திய மீனவர்களை சிறைபிடித்து நீண்டகாலம் வைத்திருக்கவோ முடியாது. இந்தியாவுடன் நாம் நீண்ட காலமாக நற்புறவை பேணி வருகின்றோம். இலங்கை அகதிகள் பலருக்கும் தமிழக அரசு அங்கு அடைக்கலம் கொடுத்துள்ளது. அதேபோன்று சுமார் 50 ஆயிரம் வீடுகளை வடக்கு கிழக்கில் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இரண்டு நாடுகள் நட்பு ரீதியாக பேசி தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சினை இது. இதனை அரசியலாக்க கூடாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தங்கத்தின் விலை...

1 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாவாகவும் காணப்படுவதாக புறக்கோட்டை தங்க வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

உலக சந்தையில் தற்போது தங்கத்தின் விலை சற்று குறைந்திருந்தாலும், எதிர்வரும் காலங்களில் தங்கத்தின் விலை மீண்டும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ரயில்வே அதிகாரிகள் பலருக்கு...

சேவைகளும் கடல்வழி மார்க்க ரயில் பாதை மற்றும் களனிவெளி ரயில் பாதையில் நான்கு ரயில் சேவைகளும் புத்தளம் ரயில் பாதையில் 3 ரயில் சேவைகளும் வடக்கு ரயில் வழிப்பாதையில் குருநாகல் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ரயில் ஒன்றும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மருதானை ரயில்வே தொகுதியுடன் இணைந்த சேவையை மேற்கொண்ட ரயில்வே கட்டுப்பாட்டாளர் 17 பேர் கொரோனோ வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அதனையடுத்து அவர்களுடன் நெருங்கிய தொடர்புள்ளவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## நுரைச்சோலை மின் நிலையம்...

160 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் இணைப்புக்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்தது.

மின்சார சபையின் பேச்சாளர் அன்றூ நவமணி அது தொடர்பில் நேற்று தெரிவிக்கையில், லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி இயந்திரம் செயற்படுத்தப்பட்டுள்ள நிலையில் மின் உற்பத்தி நிலையத்தின் நடவடிக்கைகள் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதாகவும் அதன் மூலம் தேசிய மின் இணைப்புக்கு இழக்கப்பட்டி ருந்த 160 மெகாவாட் மின்சாரத்தை மீண்டும் நேற்று முதல் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

900 மெகாவாட் மின்சார உற்பத்தி இடம் பெறும் மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் 300 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின் உற்பத்தி இயந்திரம் கடந்த டிசம்பர் மாதம் 3ஆம் திகதி செயலிழந்தது. இந்த சூழ்நிலையில் மேற்படி மின் உற்பத்தி இயந்திரம் திருத்தம் செய்யப்பட்டு அதன் மூலம் தற்போது 160 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் வினியோக கட்டமைப்புக்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## நாடு முழுவதும் ஒரு இலட்சம்...

ஒதுக்கீட்டை, மக்களின் தேவைக் கேற்ப பயன்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. குறைந்த பட்சம் ஒரு கிராம சேவையாளர் பிரிவில் ஐந்து அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் "ஒரு இலட்சம் அபிவிருத்தி திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது.

இந்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் விதம் தொடர்பாக நாடளாவிய ரீதியில் தேர்தல் மற்றும் கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் தொடர் கலந்துரையாடல்களை நடத்தினர். இதன்படி, மக்கள் எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை விரும்புகிறார்கள், அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என கிராம மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு, அந்தத் திட்டங்கள் அனைத்தும் எதிர்வரும் 3ஆம் திகதி (03) அனைத்து மக்கள் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் சுப வேளைகளில் அந்தந்த தொகுதிகளில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் பெசில் ராஜபக்ஷ இதற்கான நிதியை வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கியிருந்தார். (பா)

## சவூதியிலுள்ள இலங்கை... (03 ஆம் பக்கத் தொடர்)

பேராசிரியர் சன்ன ஜயசுமன மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளர் கலாநிதி. ஆர்.எம்.எஸ். ரத்நாயக்க ஆகியோரிடம் வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே கையளித்தார். சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் பி.எம். ஹம்சா மற்றும் தூதரக ஊழியர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் உதவியுடன் மருத்துவ உபகரணங்களை அனுப்பி வைத்தனர்.

## கொரோனா தொற்றுக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

கடந்த 28ஆம் திகதி பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பியுள்ள மேற்படி மாணவி கடுமையான காய்ச்சல் காரணமாக மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதனையடுத்து அவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்துள்ளார். மருத்துவமனையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின்போது கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.எவ்வாறெனினும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். (ஸ)

## ஊடகங்கள் மீது... (03 ஆம் பக்கத் தொடர்)

மறைக்கப்பட்ட உண்மையை ஊடகங்கள் நாட்டுக்கு வெளியிட வேண்டும். சில ஊடகங்கள் அரசியல்வாதிகளுக்கு தேவையான விதத்தில் தமது ஊடகங்களை கையாண்டு வருகின்றன. எவ்வாறாயினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மை வெளிவரும் நாளில் இந்த ஊடகங்கள் அழிந்து போகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மறு அறிவித்தல் வரை...

ஆணைக்குழு (PUCSL) தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த மீளாய்வின் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் PUCSL தலைவரான ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.ஊடகங்களுக்கு விடுத்துள்ள விசேட அறிக்கையொன்றிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டால் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களும் இந்த தீர்மானத்தில் தாக்கம் செலுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ள நுரைச்சோலை நிலக்கரி அனல்மின் நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கியின் ஊடாக சுமார் 200 மெகாவாட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது என்றார்.

## யாழ். பலாலி விமான...

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை மூடுவதற்கு எந்தவித அரசியல் நோக்கங்களும் இல்லை. "நாட்டில் ஏற்பட்ட கொரோனா சூழ்நிலை காரணமாக இலங்கையில் உள்ள அனைத்து விமான நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. அதேபோல், யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையம் மூடப்பட்டிருந்தது. தற்பொழுது ஏனைய சில விமான நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

அதேபோல பலாலி விமான நிலையமும் திறக்கப்படும். தற்போது பலாலி விமான நிலையத்தில் சில திருத்த வேலைகள் செய்ய வேண்டி உள்ளது. குறிப்பாக ஓடுபாதை விரிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது.

மேலும் பல விமான சேவைகளுக்கான அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் காரணமாக சற்று தாமதநிலை காணப்படுகின்றது. எனினும் அந்த வேலைகள் முடிந்த பின்னர் விரைவாக பலாலி விமான நிலையம் திறக்கப்படும் என்றார்.

## பறக்கும் படகு துபாயில்...

நாட்டு தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் அமீரக நிறுவனத்தின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ளது.

சொகுசு படகாக உருவாக்கப்பட்டுள்ள இதில் 8 முதல் 12 பேர் வரை பயணம் செய்ய முடியும். தண்ணீருக்கு 80 செ.மீ உயரத்திற்கு மேல் பறந்து செல்லும். இதில் இரண்டு எரிபொருள் செல்கள் பொருத்தப்பட்டுள்ளது. இந்த பறக்கும் படகு மணிக்கு 75 கி.மீ வேகத்தில் செல்லும் திறனுடையது.

ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்குவதால் இதில் இருந்து புகை போன்ற உமிழ்வுகள் வெளியேறுவதில்லை. எனவே இந்த படகு சுற்றுச்சூழலுக்கு மிகவும் உகந்ததாக இருக்கும் என அதன் தயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## தேசிய சுதந்திர தின விழா...

வளமான நாளையும் சுபீட்சமான தாய் நாடும்" என்ற தொனிப் பொருளில் இம்முறை நடைபெறவுள்ள தேசிய சுதந்திர தின பிரதான நிகழ்வில் முப்படை,பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு படைவீரர்களின் விஷேட மரியாதை அணிவகுப்பு மற்றும் சாகசங்கள் இடம் பெறவுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

74ஆவது தேசிய சுதந்திர தின பிரதான நிகழ்வுஏற்பாடுகள் தொடர்பாகஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் விஷேட செய்தியாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்திலிருந்து "சூம்" தொழில்நுட்பம் ஊடாக நேற்றுக் காலை (31) நடைபெற்றது.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்த செய்தியார் மாநாட்டில் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன, உள்நாட்டுஅலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் என். எச். எம். சித்ரானந்த,பாதுகாப்புபடைகளின் பிரதம அதிகாரியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன மற்றும் மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோர் கலந்துகொண்டனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ள தேசிய சுதந்திர தின பிரதான நிகழ்வில் வழக்கம் போன்று முப்படைகள்,பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினரின் மரியாதை அணிவகுப்பும், கலாசார நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன தெரிவித்தார்.

இம்முறை சுதந்திர தின பிரதான அணிவகுப்பில் முப்படையினர், பொலிஸ் ,சிவில் பாதுகாப்பு படை அதிகாரிகள் மற்றும் வீரர்கள் சுமார் 6500 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களில் இராணுவத்தைச் சேரந்து 3463 பேரும்,கடற்படையைச் சேர்ந்த 919பேரும்,விமானப் படையைச் சேர்ந்த 804 பேரும் 336 பொலிஸாரும் பொலிஸ் விஷேட அதிரடிப் படையைச் சேர்ந்த 282 பேரும் சிவில் பாதுகாப்புபடையைச் சேர்ந்த 437 பேரும்அடங்குவர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இது தவிர பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு மேலதிகமாக கலை கலாச்சார மற்றும் பாரம்பரிய நிகழ்வில் தேசிய மாணவர் படையணியைச் சேர்ந்த 259 இளைஞர்,யுவதிகள் கலந்துகொள்ளவுள்ளதாகவும் பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டினார். இதேவேளை, இம்முறையும் சர்வமத ஆசிர்வாதங்களுக்குமுன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தஅவர், ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பங்குபற்றுதலுடன் பெப்ரவரி 02ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் பிரித் நிகழ்வும்,பெப்ரவரி 04ஆம் திகதி பௌத்த மத, இந்துமத அனுஷ்டானங்கள், இஸ்லாமி சமய வழிபாட்டு நிகழ்வு மற்றும் கத்தோலிக்க, கிரிஸ்தவ தேவ ஆராதனைகளும் நடைபெறவுள்ளது என்றும் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ளவெளிநாட்டுஉயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள் மற்றும் தூதரகபாதுகாப்புஆலோசகர்கள் அந்தந்த நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்திபங்குபற்றவுள்ளனர் என்றும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

## ஆண்டுதோறும்...

பண்டாரவளை அட்டம்பிட்டி கெரண்டி எல்ல பிரதேசத்தில் நீராடச் சென்று ஐந்து பேர் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து இந்த விடயம் தெரிய வந்துள்ளது. இந்த ஆண்டில் இதுவரையில் நீரில் மூழ்கி 37 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர்.

கடந்த காலங்களில் கோவிட் பெருந்தொற்று காரணமாக வீடுகளில் முடங்கியிருந்த மக்கள், தங்களது உறவினர்களுடன் சுற்றுலா செல்லத் தொடங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவ்வாறு சுற்றுலா செல்லும் போது மக்கள் கவனயீனமாக நீராடச் செல்லும் காரணத்தினால் மரணங்கள் ஆண்டுதோறும் சம்பவிப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

## TNAயுடன் சந்திப்பை...

அலி சப்ரியும் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது, பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு அரசாங்கம் முன்வைத்துள்ள திருத்தங்களுக்கு எதிர்ப்பைத் தெரிவித்துள்ள சுமந்திரன், இந்த திருத்தங்கள் புதியனவல்ல என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திக்கும் விடயத்தை ஒத்திவைப்பது குறித்தும் இதன்போது சுமந்திரன் அதிருப்தி வெளியிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சிறுபான்மை...

கட்சிகளுக்கும், முஸ்லிம் மற்றும் மலையக கட்சிகளுக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போது நிலவும் அரசியல் பிரச்சினைகளுக்கு உள்நாட்டிலேயே தீர்வினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் குறித்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்படுவதாக நீதியமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்தார்.

## முட்டை வீச்சு தாக்குதலின்...

உயிருக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டால் அதற்கு எவன்ட்கார்ட் நிறுவனமே பொறுப்பு கூற வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் வலியுறுத்தினார்.ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கம்பஹாவில் இடம்பெற்றதைப் போன்றதொரு சம்பவம் இதற்கு முன்னர் திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் தொடர்பான போராட்டம் முன்னெடுக்கப்பட்ட போதும் இடம்பெற்றது. அந்த தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் இனங்காணப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

அதே போன்று இந்த தாக்குதல்களை நடத்தியவர்களும் காணொளிகள் , புகைப்படங்கள் ஊடாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இனங்காணப்பட்டவர்களில் ஒருவர் மஹகெதர விஜயாராச்சிலாகே ரத்மல் அசிதகுமார விஜேரத்ன என்ற நபராவார். இவர் மிரிஸ்வத்தை மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்தவராவார்.

# அறிவித்தல்

**உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அதிகாரம்)**

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின் திருத்திய உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 66(எ) உடன் இணைத்திணங்க வேண்டிய 66(இ) சரத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்,

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அதிகாரம் ) இனால் திருத்திய 2012 இன் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின் 66(எ) உடன் இணைத்திணங்க வேண்டிய 66(இ) சரத்தினது ஒழுங்கு விதிகளின் படி வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், நுபோ ஹேவகே ரோய் நிஷாந்த ஆகிய நான், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பிரகாரம் வடமத்திய மாகாண அநுராதபுர மாவட்டத்தின் மதவாச்சி பிரதேச சபையின் வெற்றிடமாகவுள்ள தலைவர் பதவிக்கு தலைவர் ஒருவரை தெரிவு செய்வதற்கான கூட்டம் **2022.02.15 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு திபுலாகல பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில்** நடாத்தப்படும் என இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

**என். எச்.ஆர். நிஷாந்த,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடமத்திய மாகாணம்**

**2022.01.29 ஆம் திகதி**
**அநுராதபுரத்திலுள்ள,**
**வடமத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தில்,**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொஹொம்பவத்த முகுணு வட்டவன இல் வசிக்கும் உடுகம்பலகே தெல்மா ஏன் தில்ருக்ஷி (தே.அ.அ.இல. 198675301424V) மற்றும் ரணசிங்ஹ ஆரச்சிலாகே சுபுன்சதுரங்க (தே.அ.அ.இல. 872371230V) ஆகிய நாங்கள்.

தொரணேகம கல்ணேவ இலக்கம் 55இல் வசிக்கும் ரணசிங்ஹ ஆரச்சிலாகே இஷாரா சத்துராணி (தே.அ.அ.இல. 887904634V) என்பவருக்கு வழங்கப்பட்டதும்,

பிரசித்த நொத்தாரிசு J.A.D.B.A. இமாலி ஜயகொடி என்பவரினால் 2011.09.01ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 166 இலக்கமுடைய அற்றோணி தத்துவமானது, 2021.12.26ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும், இத்தினத்தின் பின்னர் எம்சார்பில் அவர்மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளிற்கும் நாம் பொறுப்புதாரிகளல்ல எனவும், மேலும் அறிவித்துக் கொள்கின்றோம்.

**U.T. ஏன் தில்ருக்ஷி**
**R.A. சுபுன் சதுரங்க**

**திகதி: 2022.01.19**

# அறிவித்தல்

**உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அதிகாரம்)**

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின் திருத்திய உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 66(எ) உடன் இணைத்திணங்க வேண்டிய 66(இ) சரத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்,

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அதிகாரம் ) இனால் திருத்திய 2012 இன் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின் 66(எ) உடன் இணைத்திணங்க வேண்டிய 66(இ) சரத்தினது ஒழுங்கு விதிகளின் படி வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், நுபோ ஹேவகே ரோய் நிஷாந்த ஆகிய நான், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் பிரகாரம் வடமத்திய மாகாண அநுராதபுர மாவட்டத்தின் மதவாச்சி பிரதேச சபையின் வெற்றிடமாகவுள்ள தலைவர் பதவிக்கு தலைவர் ஒருவரை தெரிவு செய்வதற்கான கூட்டம் **2022.02.14 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு மதவாச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில்** நடாத்தப்படும் என இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

**என். எச்.ஆர். நிஷாந்த,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடமத்திய மாகாணம்**

**2022.01.29 ஆம் திகதி**
**அநுராதபுரத்திலுள்ள,**
**வடமத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தில்,**

**லங்கா இலக்ட்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட்**

# விலைமனு அழைத்தல்

## லங்கா இலக்ட்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட்

**(Ref: NG/ADM/PC/2022/003)**

**நீர் கொழும்பு கிளை மற்றும் CSCS களுக்குப் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக**
**முன்னணி சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

நீர்கொழும்பு தளடுவ வீதி, இலக்கம் 03 இல் அமைந்துள்ள லங்கா இலக்ட்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட் இன் நிருவாகப் பிரிவில் மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1,000.00 ஐச் செலுத்தி வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். 2022 பெப்ரவரி 01 முதல் 2022 பெப்ரவரி 14 வரை விலைமனுப்படிவங்கள் வழங்கப்படும்.

விலைமனு ஆவணத்தின் வரைவானது, (விலைமனுக்களுக்காக அல்ல) www.promise.lk அல்லது www.leco.lk என்ற இணையதளங்களில் பரிசீலனைக்காகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள், லங்கா இலக்ட்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிட்டட்டின் பிரதான பொறியியலாளர் (கிளை) என்ற பெயருக்கு முத்திரையிடப்பட்ட உறைகளில் முன்வைக்கப்படல் வேண்டும். 2022 பெப்ரவரி 15 அன்று பி.ப. 2.00 இற்குப் பிந்தாமல் பின்வரும் முகவரியின் முதலாம் மாடியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும்.

இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்களின் முன்னிலையில், விலைமனுக்கள் உரிய நேரத்தில் மூடப்பட்டு உடனடியாகவே அவை திறக்கப்படும்.

**பிரதான பொறியியலாளர் (கிளை)**
**லங்கா இலக்ட்சிரிட்டி கம்பனி (பிறைவட்) லிமிட்டட்**
**இல. 03, தளடுவ வீதி,**
**நீர்கொழும்பு**
**தொ.பே. இல: 031-2222349, 031-2233322, 031-2225068**

# தேருநர் (வாக்காளர்) இடாப்பு மீளாய்வு – 2022

2022 ஆண்டிற்கான தேருநர் (வாக்காளர்) இடாப்பு மீளாய்வு அலுவல்கள் 2022 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினூடாக திருத்தியமைக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

02. தற்போது நடைமுறையிலிருக்கும் 2021 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்களின் அல்லது அவற்றின் பாகங்களின் பிரதிகள் பதிவு செய்யும் அலுவலர்களால் அவர்களது அலுவலகங்களிலும் கீழ் குறிப்பிடப்படும் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்படும்.

| இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்கள் காட்சிப்படுத்தப்படும் அலுவலகங்கள் | காட்சிப்படுத்தப்படும் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்கள். |
|---|---|
| மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் | தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பின் மொத்தப் பிரதி |
| கிராம அலுவலர் அலுவலகங்கள் | கிராம அலுவலர் பிரிவிற்குள் வதியும் எல்லாத் தேருநர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பாகங்கள் |

03. இதற்கமைய, ஏதேனுமொரு தேர்தல் மாவட்டத்தில் வாக்காளரொருவராயிருக்கத் தகுதியுள்ள அனைவருக்கும் தமது பெயர் மேற்கூறப்பட்ட தேருநர் இடாப்புக்களில் பதியப்பட்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

04. கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அனைத்து வீடுகளுக்கும் வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் படிவங்களை விநியோகித்தல் மற்றும் மீளச் சேகரித்தல் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படமாட்டாது.

05. உங்களுடைய பெயர் 2021 ஆம் ஆண்டிற்கான தேருநர் (வாக்காளர்) இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருப்பின் 2022 ஆம் ஆண்டிலும் 2021 தேருநர் (வாக்காளர்) இடாப்பில் நீங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும் முகவரியில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதற்காக நீங்கள் எந்த விதமான படிவத்தையும் பூர்த்தி செய்வதற்கான தேவைப்பாடு இல்லையென்ற விடயத்தைக் கவனத்திற் கொள்ளவும். உங்களுடைய பெயர் 2021 ஆண்டில் பதியப்படாதிருப்பின் அல்லது 18 வயதைப் பூர்த்தி செய்தலின் அடிப்படையில் முதற் தடவையாக வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்படுவதாயின் அல்லது 2021 ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரியை மாற்றியமைக்க வேண்டுமாயின் அல்லது 2022 ஆம் ஆண்டில் வாக்காளரொருவராகப் பதிவு செய்வதற்காக 2022/ER படிவமொன்றைப் பூர்த்தி செய்து கிராம அலுவலரிடம் கையளியுங்கள். மேலதிக விபரங்கள் 2022/ER படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

06. 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளரொருவர் இறப்பெய்தல் அல்லது வதிவிடத்தை மாற்றிக்கொள்ளல் அல்லது வேறேதும் காரணத்தினால் 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளாதபோதும் அது பற்றியும் உங்களுடைய கிராம அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.

07. 18 வயதைப் பூர்த்தி செய்தவுடனேயே வாக்குரிமையை வழங்குவதற்காக குறைநிரப்பு தேருநர் (வாக்காளர்) இடாப்புக்களை தயாரிப்பதற்குத் தேவையான தகவல்கள் சேகரிக்கப்படும். அதற்கமைய, 2022 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் 2024 ஜனவரி 31 வரையான காலப் பகுதியினுள் 18 வயதைப் பூர்த்தி செய்யும் நபர்கள் பற்றிய விபரங்களையும் கிராம அலுவலரிடம் பெற்றுக்கொடுக்க முடியும்.

08. 2022 ஆம் ஆண்டில் வாக்காளர்களை கணக்கெடுக்கும் விதம் சம்பந்தமான அறிவித்தலொன்றை அனைத்து வீடுகளுக்கும் பெற்றுக்கொடுக்குமாறு கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவித்தல் 2022 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு உங்களுடைய வீட்டுக்கு கிடைக்கப்பெறாவிட்டால் உங்களுடைய கிராம அலுவலரிடம் வினவுமாறு அறிவிக்கப்படுகின்றது.

**தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம்,**

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க,**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்**

**2022 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி,**
**சரண மாவத்தை,**
**இராஜகிரிய,**
**தேர்தல் ஆணைக்குழுவில்.**





Daily News Classifieds, the Housewives' companion

# வடமராட்சி மீனவர்கள் தொழில் புறக்கணிப்பில்

## வலைகள் அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளதாக கண்டனம்

யாழ். விசேட நிருபர்



வடமராட்சி மீனவர்கள் கடற்றொழிலுக்கு செல்லாது புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் தமது போராட்டத்திற்கு ஆதரவாக அனைத்து மீனவர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

தமிழக மீனவர்களின் அத்துமீறலால் வடமராட்சி மீனவர்களின் வலைகள் அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளது. அதனை கண்டித்து மீனவர்கள் நேற்று சுப்பர் மட வீதியை மறித்து பந்தல்களை போட்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று திங்கட்கிழமை முதல் , தமக்கு தீர்வு கிடைக்கும் வரையில் கடற்தொழிலுக்கு செல்லப் போவதில்லை என தெரிவித்துள்ளனர்.

அதேவேளை ஏனைய பிரதேச மீனவர்களும் தமது போராட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில் தொழில் புறக்கணிப்பில் ஈடுபடுமாறு வடமராட்சி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்




# என்னைத் திருடன் என கூறுபவர் நிரூபித்தால் அடிமை சாசனம் எழுதிக் கொடுப்பேன்

## ஆனந்தசங்கரி சவால்

கோப்பாய் குறூப் நிருபர்



கோடிகளுக்கு அடிமைப்படாத என்னை திருடன் எனக் கூறி வருபவர் நிரூபித்தால் எனது சொத்துக்களை அடிமை சாசனம் எழுதி அவருக்கு வழங்குவேன் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,..

பழம்பெரும் தமிழ் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியை கைப்பற்ற முயற்சிப்போர் கட்சியின் வரலாறு தெரியாதவர்களும் கட்சியின் வயதின் கால்பங்கு கூட வரதாவர்களே அபகரிக்க முயல்கின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி மக்களுடைய சொத்து நான் பதவிகளுக்கு கோடிகளுக்கு ஆசைப்பட்டவன் கிடையாது.


அமிர்தலிங்கம் இருந்தபோது நான் அப்போதிருந்த செல்வாக்கில் பாராளுமன்றம் சென்று இருக்கலாம் நீலன் திருச்செல்வம் வந்த போது பாராளுமன்றம் சென்றிருக்கலாம் ஆனால் நான் அவ்வாறு பதவிகளுக்காக ஆசைப்படவில்லை.

அப்போதைய பிரதம மந்திரியாக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா என்னை அழைத்து உன்னைப்போல் தமிழ் ஜனநாயகவாதி பாராளுமன்றத்திலே இருக்க வேண்டும் நான் ஆசனம் தருகிறேன் வா என்றார்.

நான் அவரிடம் பதவிகளுக்காக எனது கொள்கையை விட்டு உங்களிடம் சேர்வதற்கு விருப்பம் இல்லை என தெரிவித்தேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியை சரியான முறையில் ஒழுங்கமைக்கும் வரை யாருக்கும் கட்சியை விட்டுக் கொடுக்க மாட்டேன் முடிந்தால் காட்சியை அபகரிக்க நினைப்பவர்கள் தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்தினால் கட்சியை அவர்களிடம் கொடுப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியாவில் இளைஞர் மாயம்; உதவிகோரும் குடும்பத்தினர்



ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா தேக்கவத்தை பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 4 நாட்களாக காணவில்லை என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது

குறித்த இளைஞர் கடந்த 27 ஆம் திகதி வவுனியா குருமன்காடு பகுதிக்கு சென்று வருவதாக வீட்டில் கூறிவிட்டு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். எனினும் அதன் பின்னர் அவருடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது.

நான்கு நாட்கள் கடந்தும் குறித்த இளைஞர் வீட்டிற்கு வராத நிலையில், அவரது தாயாரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்தில் பாலகிருஷ்ணன் நிரேஸ் (வயது 30) என்ற இளைஞரே இவ்வாறு காணாமல் போயுள்ளதுடன், அவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் 0778013692, 0771014446 என்ற இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி தெரியப்படுத்துமாறு அவர்களது குடும்பத்தினரால் உதவி கோரப்பட்டுள்ளது.

# வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் காணாமல் போன ஒருவரின் சடலம் ஆழியவளை கடற்பகுதியில் மீட்பு

நாகர்கோவில் விஷேட நிருபர்



வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் கடந்த 27 ஆம் தேதி கடலுக்கு சென்று காணாமல் போனவர்களில் இளைஞன் ஒருவரின் சடலம் ஆழியவளை கடற்பகுதியில் நேற்று (31) நண்பகல் கரையொதுங்கியுள்ளது.

வத்திராயன் பகுதியைச் சேர்ந்த 37 வயது மூன்று பிள்ளைகளின் தந்தையான பிறேம்குமார் மற்றும் 21 வயதான தணிகைமாறன் ஆகிய இருவர் கடல் தொழிலுக்கு கடந்த 27ஆம் திகதி சென்ற நிலையில் கரை திரும்பவில்லை. இதனைத் தொடர்ந்து அப்பகுதி மீனவர்கள் விளையாட்டு கழகத்தினர் இணைந்து கடற்பரப்பில் இரவு பகலாக பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டனர்.

அவர்களையோ, அவர்கள் பயணித்த படகினையோ கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் அறுந்த வலைகள் மட்டுமே மீட்கப்பட்டிருந்தன.

அவர்களின் படகை இந்திய ரோலர் படகுகள் மோதி விபத்துக்குள்ளாக்கி இருக்கலாம் என மீனவர்கள் குற்றம் சாட்டியிருந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை(31) நண்பகல் தணிகைமாறன் என்பவருடைய சடலம் ஆழியவளை கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கியுள்ளது. இது தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னாரில் 'கனிய மண்' அகழ்வு, பல்வேறு நடவடிக்கைகளுக்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டம்

மன்னார் குறூப் நிருபர்



மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கனிய மண் அகழ்வு உள்ளடங்கலாக பல்வேறு நடவடிக்கைகளுக்கு எதிராக நேற்று (31) காலை மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நேற்று (31) காலை 10.30 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் இடம்பெற்றது.


மன்னார் பஜார் பகுதியில் அமைந்துள்ள மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகையின் சிலைக்கு முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகி மன்னார் மாவட்டச் செயலக பகுதியை வந்தடைந்தது.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மாவட்டச் செயலகத்திற்கு முன் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த போராட்டமானது மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கனிய மண் அகழ்வுக்கு எதிராகவும், குறித்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தக் கோரியும் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் மன்னார் பகுதியில் அமைக்கப்பட்ட உயர் மின்வலு காற்றாலைகளினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற வீதிகள் தரமற்றதாக காணப்படுகின்றமை குறித்தும், போதைப்பொருள் கடத்தலின் தளமாக மன்னாரை மாற்றி மன்னார் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மக்களுக்கு குறித்த நடவடிக்கைகளின் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

# சர்வதேச செய்திகள்

## தாய்வானிய வான் பகுதியில் சீன விமானங்கள் ஊடுருவல்



சீன இராணுவ போர் விமானங்கள் தமது ஆகாயப் பாதுகாப்பு அடையாள பிராந்தியத்திற்குள் இரண்டாவது தடவையாகப் பெரிய ஊடுருவலை மேற்கொண்டுள்ளதாக தாய்வான் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஊடுருவலில் சீனாவின் 39 இராணுவ விமானங்கள் ஈடுபட்டதாகவும் அவ்வமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் தாய்வான் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், எமது ஆகாயப் பாதுகாப்பு அடையாளப் பிராந்தியத்திற்குள் சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் 59 யுத்த விமானங்கள் கடந்த ஒக்டோபர் மாதம் முதற் தடவையாக ஊடுவலை மேற்கொண்டன. அதன் பின்னர் இரண்டாவது தடவையாக தற்போது ஊடுருவல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளிக்கும் வகையில் எமது யுத்த விமானங்களின் ரோந்து, வானொலி மூலமான எச்சரிக்கை விடுப்பு மற்றும் ஆகாயப் பாதுகாப்பு ஏவுகணைக் கட்டமைப்பு செயற்படுத்தப்பட்டமை என்பன மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து சீன யுத்த விமானங்கள் எமது ஆகாயப் பாதுகாப்பு அடையாளப் பிராந்தியத்திலிருந்து அகன்று சென்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## அமெரிக்க முன்னாள் அழகி மாடியிலிருந்து விழுந்து பலி



நியூயோர்க்கில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் இருந்து கீழே விழுந்த 2019 ஆம் ஆண்டில் அமெரிக்க அழகிப் பட்டம் வென்ற சார்லி கிறிஸ்ட் உயிரிழந்துள்ளார்.

60 மாடிகள் கொண்ட அந்தக் கட்டடத்தின் ஒன்பதாவது மாடியில் வசித்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அவர் கடைசியாக 29 ஆவது மாடியில் காணப்பட்டுள்ளார்.

உயிரிழப்பதற்கு சில மணி நேரத்திற்கு முன் கிறிஸ், தனது திகைப்புடன் இருக்கும் படத்தை இஸ்டகிராமில் கடைசியாக வெளியிட்டு அதில் ரகசிய குறிப்பு ஒன்றையும் பதிவிட்டுள்ளார்.

“இந்த நாள் உங்களுக்கு அமைதியைத் தரும்” என்று அவர் இதயத்தின் படம் ஒன்றுடன் குறிப்பிட்டுள்ளார்.

அவரது குடும்பத்தினர் மரணத்திற்கான காரணம் பற்றி கூறாத நிலையில், கிறிஸ்டின் மரணம் ஒரு தற்கொலை என்று நியுயோர்க் பொலிஸ் திணைக்கள வட்டாரம் குறிப்பிட்டுள்ளது.

30 வயதான கிறிஸ்ட் 28 வயதில் அமெரிக்க அழகியாக பட்டம் பெற்று, அந்தப் பட்டத்தை வென்ற வயதானவராகவும் பதிவானார்.

## பாகிஸ்தான் அரசு மீது கூட்டணி கட்சி சாடல்



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரீபை லண்டனில் இருந்து திரும்ப அழைக்கும் அந்நாட்டு அரசின் முயற்சிக்கு கடும் விமர்சனங்கள் எழுந்திருக்கும் நிலையில், மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை அரசு தொடர்ந்து பொருட்படுத்தாது இருந்தால் “நாட்டை இறைவனால் மாத்திரமே காப்பாற்ற முடியும்” என்று ஆளும் தஹ்ரீக்கே இன்சாப் கட்சியின் பிரதான கூட்டணி கட்சி ஒன்று குறிப்பிட்டுள்ளது.

நவாஷ் ஷரீபை மீண்டும் கொண்டுவரும் காலத்தை வீணடிக்கும் முயற்சியை அரசு கைவிட்டு பொதுமக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று இம்ரான் கான் அரசின் கூட்டணி கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் குவைத் குறிப்பிட்டுள்ளது.

2019 நவம்பரில் நவாஸ் ஷரீப் பாகிஸ்தானை விட்டு வெளியேறியதோடு இம்ரான் கான் அரசு ஒப்புதல் அளித்ததை அடுத்தே மருத்துவ சிகிச்சைக்காக அவர் லண்டன் சென்றார்.

# எண்ணெய் நாடுகளின் முக்கிய பேச்சு நாளை



மசகு எண்ணெய் விலை ஏழு ஆண்டுகளில் இல்லாத உச்சத்தை தொட்டிருக்கும் நிலையில் உற்பத்தியை மேலும் அதிகரிப்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்த உலகின் முன்னணி எண்ணெய் உற்பத்தி நாடுகள் நாளை புதன்கிழமை சந்திக்கவுள்ளன.

கொவிட்–19 பெருந்தொற்று எண்ணெய் சந்தையில் பெரும் அதிர்வை ஏற்படுத்திய நிலையில் வழக்கமான சந்திப்பின் ஓர் அங்கமாகவே பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பின் (ஒபெக்) 13 உறுப்பு நாடுகளும் அதன் 10 கூட்டணி நாடுகளுமே வீடியோ மாநாடு மூலம் சந்திக்கவுள்ளன.

இதில் வரும் மார்ச் மாதத்தில் நாளொன்றுக்கு 400,000 பீப்பாய்களாக உற்பத்தியை தொடர்ந்து அதிகரிக்க தீர்மானிக்கப்படலாம் என்று அவதானிகள் நம்புகின்றனர்.

கொவிட் தொற்று முதலில் பரவ ஆரம்பித்தபோது எண்ணெய் விலை பெரு வீழ்ச்சி கண்டதை அடுத்து அதன் உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டதோடு கடந்த ஆண்டு மே மாதம் தொடக்கம் படிப்படியாக உற்பத்தி அதிகரிக்கப்பட்டு வருகிறது.

பிரெண்ட் எண்ணெய் கடந்த புதன்கிழமை பீப்பாய் ஒன்று 90 டொலர்களாக அதிகரித்தது. இது 2014 ஒக்டோபருக்கு பின்னர் பதிவான உச்ச விலையாக இருந்தது.

ரஷ்யா மற்றும் மேற்குலக நாடுகளுக்கு இடையே உக்ரைன் விவகாரம் தொடபில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் பதற்ற சூழலும் எண்ணெய் விலை அதிகரிப்புக்கு காரணமாக கருதப்படுகிறது. குறிப்பாக உலகின் இரண்டாவது மிகப் பெரிய எண்ணெய் உற்பத்தி நாடாக ரஷ்யா உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய அரபு இராச்சியம் மீது வந்த ஏவுகணை இடைமறிப்பு



இஸ்ரேலிய ஜனாதிபதி ஒருவரின் முதல் விஜயமாக இசாக் ஹர்சோக் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பயணம் மேற்கொண்டிருக்கும்நிலையில் யெமனில் இருந்து வீசப்பட்ட ஏவுகணை ஒன்றை இடைமறித்து அழித்ததாக ஐக்கிய அரபு இராச்சியம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை இடைமறிக்கப்பட்ட இந்த ஏவுகணையின் பாகங்கள் மனித நடமாட்டம் இல்லாத பகுதியில் விழுந்ததாக ஐக்கிய அரபு இராச்சிய பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. எனினும் இந்த ஏவுகணை இலக்கு வைத்த பகுதி பற்றி கூறப்படவில்லை.


இதற்கு பதில் நடவடிக்கையாக யெமனின் வடக்கின் அல் ஜவுப் பிராந்தியத்தில் உள்ள ஏவுகணை ஏவுதளம் தாக்கி அழிக்கப்பட்டதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஜனவரி 17 ஆம் திகதி ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணை தாக்குதலில் மூன்று எண்ணெய் தொழிற்சாலை ஊழியர்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பின்னர் ஐக்கிய அரபு இராச்சியத்தின் மீது நடத்தப்படும் மூன்றாவது தாக்குதல் இதுவாகும்.

ஜனவரி 17 தாக்குதலுக்கு பொறுப்பேற்ற யெமனின் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்துவதாக குறிப்பிட்டிருந்தனர்.

2020 இல் ஐக்கிய அரபு இராச்சியம் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்திய பின் இஸ்ரேல் ஜனாதிபதி முதல் முறை ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ளார். இந்நிலையில் இந்த ஏவுகணை தாக்குதலை அடுத்து இஸ்ரேலிய ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், ஜனாதிபதியின் விஜயம் திட்டமிட்டபடி தொடரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# "தன் நண்பனுக்காக உயிரை கொடுப்பதை விட மேலான அன்பு இல்லை"



## அன்பின் அடித்தளமே கிறிஸ்தவம்

அன்பின் அடித்தளத்திலேயே கிறிஸ்தவம் கட்டியெழுப்பப் பட்டுள்ளது.

அதனை மையமாகக் கொண்டே கடந்த ஞாயிறு திருவழிபாட்டு வாசகங்கள் அமைந்துள்ளன.

அன்பு இல்லாமல் வேறு திறமைகள் இருந்தால் அதனால் பயன் ஒன்றுமில்லை என்றும் அன்பின் பண்புகள் எப்படிப்பட்டவை என்றும் எடுத்துக்காட்டுகிறார் புனித பவுல்.

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருந்த போது அவரை விமர்சனம் செய்தவர்களில் அவரது கட்சியைச் சேர்ந்த ஸ்டாண்டன் என்பவரைப் போல வேறு யாரும் இருக்க முடியாது.

ஆப்ரகாம் லிங்கனை தந்திரக்காரக் கோமாளி என்றும் ஆப்பிரிக்க கொரில்லா போன்ற வார்த்தைகளாலும் வசை பாடினார் ஸ்டாண்டன்.

அதற்காக லிங்கன் அவரை ஒதுக்கவில்லை. மாறாக உயர்ந்த பதவியைப் பெற்றுக்கொடுத்தார்.



ஆனால் சில ஆண்டுகளுக்குப் பின் லிங்கன் சுட்டுக் கொல்லப்பட்டபோது அவரது உடல் ஒரு அறையில் கிடத்தப்பட்டிருந்த போது ஸ்டாண்டன் கண்ணீரோடு இதோ உலகம் இதுவரைக் காணாத மாபெரும் தலைவர் இங்கே கிடத்தப்பட்டிருக்கிறார் என்றார்.

புனித பவுல் அன்பின் பரிமாணங்கள் பற்றிக் கூறும்போது அன்பு பொறுமையுள்ளது அன்பு அழுக்காறு கொள்ளாது, பெருமை பேசாது, இறுமாப்பு அடையாது, இழிவானதைச் செய்யாது, தன்னலத்தை தேடாது சீற்றத்திற்கு இடந்தராது, வன்மம் வைக்காது; அநீதியைக் கண்டு மகிழ்வுறாது, உண்மையைக் கண்டு உளம் மகிழும், அனைத்தையும் தாங்கிக் கொள்ளும் (1 கொரி. 13:47) என்று கூறுகிறார்.

இந்த அன்பின் பரிமாணங்கள் அனைத்தும் ஆபிரகாம் லிங்கனிடம் இருந்தது என்றால் மிகையாகாது.

அன்பைவிடச் சிறந்தது வேறு எதுவும் இல்லை . ஒருவருக்கு பல மொழி பேசும் திறமை இருக்கலாம். இறைவனுடைய திட்டத்தை முன்னறிவிக்கும் வரம் இருக்கலாம். ஆழ்ந்த விசுவாசம் இருக்கலாம். ஆனால் இவையனைத்தும் அன்பின் அடிப்படையில் அமையாவிட்டால் போட்டி, தற்புகழ்ச்சி, பெருமை இவற்றிற்கு இட்டுச் செல்லும் (1 கொரி. 13:13).

கடந்த ஞாயிறு முதல் வாசகமும் நற்செய்தியும் இறைவாக்கினர் பணி எவ்வளவு துன்பங்கள் நிறைந்தது என்றும்

ஓர் உண்மையான இறைவாக்கினருக்கு அளவற்ற பிறரன்பு தேவைப்படுகின்றது என்பதையும் உணர்த்துகின்றது.

இறைவனின் அன்பை எடுத்துரைக்கின்றபோது அளவற்ற பொறுமை, சகிப்புத் தன்மை, மன்னிப்பு போன்ற அன்பின் பரிமாணங்கள் நம்மில் இடம் பெற வேண்டும் என்பதையே இவை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன.

அன்பை எப்படிக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்கு இயேசு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

நான் உங்களிடம் அன்புகூர்ந்தது போல. நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகூர வேண்டுமென்பதே எனது கட்டளை (யோவா. 13:34) என்று உறுதியாக அவரால் கூற முடிந்தது.

இயேசு எல்லோரையும் அன்பு செய்து பாவிகளைத் தேடிச் செல்லும் நல்ல ஆயனாகத் திகழ்கிறார். பாவிகளை மன்னிக்க தந்தையிடம் மன்றாடுகிறார். யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுத்தபோதும் அவனின் தவறுகளைச் சுட்டிக்காட்டினாரே தவிர, எதிரியாகப் பாவிக்கவில்லை .

தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு இல்லை (யோவா. 15:13) என்று கூறிய இயேசு அதைத் தன் வாழ்வாக நிகழ்த்தினார்.

நம் பாவங்களுக்காக உயிரையே கொடுத்தார்.

இயேசுவின் அன்பு மன்னிக்கும் அன்பு. தியாகத்தின் அன்பு. நிபந்தனையற்ற நிலையான அன்பு. அன்பர் இயேசுவின் அன்பைக் கடைப்பிடித்து அவரின் சாட்சிகளாக வாழ்வோம்.அதற்காக அவரது அருளை வேண்டுவோம்.

அருட்பணி ம. அருள்...




# இயேசுவின் வழியில் உறுதியானதும் நிலையானதுமான சமாதானம் அவசியம்

## கத்தோலிக்க ஊடகங்களின் அனைத்துலக கூட்டமைப்பினருடன் திருத்தந்தை சந்திப்பு

'நானே உண்மை' என்று கூறிய இயேசுவின் வழியில் அனைவரும் இணைந்து ஒரு உறுதியான மற்றும் நிலையான சமுதாயத்தை மேம்படுத்துவதற்காகவே பணியாற்றுகிறோம் என பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை 28ஆம் திகதி கத்தோலிக்க ஊடகங்களின் அனைத்துலக கூட்டமைப்பினரை திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ்.



தகவல்தொடர்புகளின் கருப்பொருளைப் பற்றியும் குறிப்பாக கொவிட்19 தொற்றுநோய் தொடர்பான சில சிக்கலான பிரச்சினைகளை கிறிஸ்தவச் செய்தித் தொடர்பாளர்கள் கையாள வேண்டிய விதத்தைப் பற்றியும் திருத்தந்தை கருத்துக்களை முன்வைத்தார்.

இணைந்து பணியாற்றுவது,யாருக்காகப் பணியாற்றுவது மற்றும் உண்மைக்காகப் பணியாற்றுவது என மூன்று விடயங்களில் தனது சிந்தனைகளை செய்தியாளர்களோடு பகிர்ந்து கொண்டார் திருத்தந்தை .

இணையவழித் தொடர்பு, பகிர்தல் திறன்கள், அறிவு மற்றும் பொருத்தமான தகவல்களை வழங்குவதற்கான பங்களிப்புகள் ஆகியவற்றுக்காக தகவல் துறையில் ஒன்றாக இணைந்து வேலை செய்வது அவசியம் என்பதை எடுத்துக்காட்டிய திருத்தந்தை தொற்றுநோயின் விளைவுகளையும் அதனால் ஏற்படும் சமூகப் பிளவுகளையும் நாங்கள் உணரும் நேரத்தில் கிறிஸ்தவ செய்தித் தொடர்பாளர்களாக நீங்கள் ஒரு செய்தியை அனுப்புவதும் ஒரு செய்தியாகும் என தெரிவித்தார்.

இரண்டாவதாக யாருக்காகப் பணியாற்றுகிறோம் என்பதை சிந்திக்கும்போது கிறிஸ்தவர்களாகிய நாம் அநீதிகளுக்கும் பொய்களுக்கும் எதிரான நிலையில் எப்போதும் மனிதர்களை மட்டுமே முன்னிலைப்படுத்துகிறோம் என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது. உங்கள் நோக்கம் தவறான தகவல்களை எதிர்த்துப் போராடுவது, போலிச் செய்திகளை மறுப்பது, மற்றும் மனதை கவரக் கூடிய செய்திகளைக் கையாள்வது போன்றவையாக இருந்தாலும் தகவல்களுக்கும் மக்களுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாட்டை ஒருபோதும் கவனிக்காமல் விடக்கூடாது என்றும் அறிவுறுத்தினார். மூன்றாவதாக, உண்மைக்காகப் பணியாற்றுகிறோம் என்பது தொடர்பில் கருத்து தெரிவித்த திருத்தந்தை,தரவுகளைச் சரிபார்ப்பதிலும், அவற்றைப் பொருத்தமான முறையில் வழங்குவதிலும் உண்மைக்கான நமது சொந்தத் தேடலைத் தொடர்வதிலும் நாம் ஒருபோதும் சோர்வடையக்கூடாது என்றும் 'நானே உண்மை' என்று கூறிய இயேசுவின் வழியில், அனைவரும் இணைந்து ஒரு நியாயமான உறுதியான மற்றும் நிலையான சமுதாயத்தை மேம்படுத்துவதற்காகவே பணியாற்றுகிறோம் என்பது உணரப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

கொவிட் 19 பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள மக்களையும் அவர்தம் குடும்பங்களையும் நினைவு கூர அழைப்பு விடுத்த திருத்தந்தை பிரான்சிஸ் செய்தியாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் ஆசீரையும் வழங்கினார்.

செல்வராஜ் சூசை மாணிக்கம்....

# உடப்பு பிரான்சிஸ் சவேரியார் ஆலய திருவிழா







வரலாற்று சிறப்பு மிக்க உடப்பு புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா பங்குத்தந்தை வின்சன் ஜெயராசா அடிகளாரின் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மறையுரைகளை அருட்தந்தையர்களான அமல்ராஜ் அடிகளாரும், வின்சன் ஜெயராஜா அடிகளாரும் நிகழ்த்தினர். திருவிழாவின் இறுதியில் புனித பிரான்சிஸ் சவேரியாரின் திருச்சுரூப பவனியும் இறுதி ஆசீர்வாதமும் நடைபெற்றது. (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

# இலங்கையின் புனிதர் ஜோசப் வாஸ்



## வாழ்வும், பணியும், வரலாற்றுக் குறிப்பும்

இலங்கையின் புனித ஜோசப் வாஸ் அடிகளார் புனிதராக அறிவிக்கப் பட்ட தினத்தை கத்தோலிக்கத் திருச்சபை ஜனவரி 14ஆம் திகதி நினைவு கூருகின்றது.

புனிதர் ஜோசப் வாஸ் திருச்சபைக்கு ஆற்றிய அர்ப்பணிப்புள்ள சேவையை கௌரவிக்கும் வகையில் 1995 ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார்.

அதனையடுத்து 2015ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி இலங்கைக்கு திருத்துதுப் பயணம் மேற்கொண்ட பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் அருளாளர் ஜோசப் வாஸ் அடிகளாரை புனிதராக அறிவித்தார்.

கத்தோலிக்கத் திருச்சபை புனித ஜோசப் வாஸ் திருநாளை ஜனவரி மாதம் 14ம் திகதி கொண்டாடுகிறது.

புனித ஜோசப் வாஸ் கிறிஸ்டோபர் வாஸ் மரியோ மிராண்டா என்ற பெயர்களைக் கொண்ட பெற்றோருக்கு மூன்றாவது குழந்தையாக இந்தியாவின் கோவா மாநிலத்தில் பெனோலிம் என்ற ஊரில் 1651 ஏப்ரல் 26ஆம் திகதி பிறந்தார்.

டொமினிக்கன் சபையினரால் நடத்தப்பட்ட புனித தோமஸ் அக்குவைனாஸ் உயர் கல்லூரியில் மெய்யியல் மற்றும் இறையியல் கற்றுத் தேர்ந்த அவர் தமது இருபதாவது வயதில் 1671ஆம் ஆண்டில் குருத்துவத்துக்கு முன்னரான பட்டங்களைப் பெற்று 1676 ஆம் ஆண்டு கோவா ஆயரினால்



குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இலங்கை கத்தோலிக்க மக்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் தம்மை வழிநடத்த குழுக்கள் இல்லாத நிலையில் அந்தரித்து காணப்படும் காலத்தில்

இலங்கைக்கு வந்து தூதுப் பணியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

1687ஆம் ஆண்டு அவர் குருவானவராக தூத்துக்குடியில் பணிபுரிந்த காலத்தில் தமிழ் மொழியை கற்றுக் கொண்டார்.

அந்த ஆண்டிலேயே ஏப்ரல் மாதத்தில் அவர் தூத்துக்குடியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணித்தார்.

கடலில் வீசிய கடும் காற்று காரணமாக அவர் யாழ்ப்பாணத்திற்குப் பதிலாக மே மாதத்தில் மன்னாரைச் சென்றடைந்தார். அவருடன் குருவானவரான யோணும் அந்தப் பயணத்தில் இணைந்திருந்தார்.

ஒருவாறு மே மாதம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த இருவருக்கும் வயிற்றோட்ட நோய் ஆரம்பித்தது. நோயிலிருந்து ஜூன் மாதத்தில் நலம் பெற்று கழுத்தில் சிலுவையை அணிந்து கொண்டு பிச்சைக்காரர் வேடத்தில் அவர் கத்தோலிக்கர்களை தேடிச் சென்றார்.




சில்லாலைக்குச் சென்ற அவர் சுமார் இரண்டரை வருடங்கள் அங்கிருந்து கொண்டு யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று இரவு நேரத்தில் மறைவாக தமது மறை பணியை மேற்கொண்டு வந்தார்.

1688 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதி நத்தார் நள்ளிரவு திருப்பலியின் போது மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அவர் உயிர் தப்பினாலும் அவரோடு பணிபுரிந்த ஆறு பேர் பிடிபட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு அவர்கள் மறைசாட்சிகளாக உயிரிழந்துள்ளனர். அதன் போது அவர் மறைவாக வன்னிப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

கண்டிக்கு செல்லும் நோக்கில் 1690 ஆம் ஆண்டு அவர் புத்தளத்தை வந்தடைந்தார்.

பின்பு கண்டிக்குத் திரும்பி அங்கிருந்து கொண்டு சுதேச குருக்களின் உதவியுடன் ஒல்லாந்தரின் நிர்வாகத்தில் இருந்த கொழும்பு, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதிகளுக்கு சென்று பணிபுரிந்தார். **(மிகுதி அடுத்த வாரம்)**

எல்.செல்வா...

# ஸ்ரீபாத வனம் அழிப்பு வளவை களுகங்கைகளுக்கு பாதிப்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தின் ஸ்ரீபாத வனத்தின் அலுப்பொல வலேபொட காடுகள் அழிக்கப்பட்டு வருவதால் களுகங்கை வளவை ஆறுகள் பாதிப்படைத்து வருவதாக பிரதேச மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையால் பிரதான ஆறுகள் மட்டுமன்றி இவற்றின் கிளை ஆறான அலுப்பொல எல்லவில் நீர் மட்டம் குறைந்து காணப்படுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். வன பிரதேசத்திலுள்ள காடுகள் பரவலாக அழிக்கப்பட்டு வருவதுடன் அப்பகுதிகளில் தோட்டங்கள் உருவாக்கப்பட்டு வருவதால் இந்நிலைமை இரட்டிப்புப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

வனப்பகுதியில் தம்மால் அபகரிக்கப்பட்ட காணிகளுக்கு செல்வதற்கு இவர்கள் பாதை ஒன்றை அமைத்து வருகின்றனர்.

இதனால் அலுபொல எல்ல ஆற்றில் கழிவுகள் ஒதுக்கப்படுகின்றன. இதன் தாக்கங்கள் காரணமாகவே பிரதான ஆறுகளான களுகங்கை மற்றும் வளவை ஆறுகளையும் பாதித்துள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து உரிய தரப்பினருக்கு அறிவித்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால் குற்றச் செயலில் ஈடுபடுவோர் அச்சமின்றி தமது காரியத்தை கச்சிதமாக நிறைவேற்றி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பெறுமதியான நீர்நிலைகள் அசுத்தமடைந்து மக்களின் குடிநீர் உட்பட சுகாதாரப் பாதிப்புகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# மின்சார நெருக்கடி; மவுசாகலை நீர்த்தேக்கத்தை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு





**ஹற்றன் சுழற்சி நிருபர்**

மவுசாகலை நீர்த்தேக்கத்தில் தேங்கியுள்ள கழிவுகளை அகற்றி அணைக்கட்டை சுத்தப்படுத்தும் நடவடிக்கை கடந்த 2 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மவுசாகலை நீர்த்தேக்கத்தின் நீர்ப்பாசன பொறியியலாளர்களால் இச்செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

மத்திய மலை நாட்டில் உள்ள பெரும்பாலான குளங்கள் சுத்தப்படுத்தப்படாமையாலும், போதியளவு மழை வீழ்ச்சி கிடைக்காமையாலும் நீர்மின் உற்பத்தி வெகுவாக குறைவடைந்து வருகின்றது.

குறிப்பாக 25 வீதத்தால் மின் உற்பத்தி குறைந்துள்ளது. இவ்வாறான நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடிக்கு தீர்வாக தற்போது இடைக்கிடையே மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலைமையை கருத்திற்கொண்டு மவுசாகலை நீர்த்தேக்கத்திலிருந்து கெனியோன் வரை நீரை கொண்டு செல்லும் சுரங்க பாதையை சுத்தப்படுத்தும் நடவடிக்கையை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர்.

சுரங்க பாதையில் இடைக்கிடையே கழிவுகள் தேங்கியுள்ளதால் அவற்றை அகற்றி சுத்தப்படுத்தும் பணிகளில் மவுசாகலை நீர்த்தேக்க நீர்ப்பாசன பொறியியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இதன்படி இரண்டாம் திகதி முதல் 78 நாட்கள் நீரை கொண்டுச் செல்லும் சுரங்க பாதையை துப்புரவு செய்து அதிலுள்ள கழிவுகளை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக மவுசாகலை நீர்த்தேக்க நீர்ப்பாசன பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு நீர்ப்பாசன சுரங்க பாதையும் 10 வருடத்திற்கு ஒருமுறை சுத்தப்படுத்த வேண்டியது அவசியம் என தெரிவிக்கப்படுகின்றது. எனினும் கெனியோன், பொல்பிட்டிய சமனல நீர்த்தேக்கங்களில் வேறு சுரங்க பாதையை பாவித்து மின் உற்பத்தி நடைபெறுவதாகவும் நீர்ப்பாசன பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கெனியோன் மின் உற்பத்தி நிலையத்தில் கடந்த இரண்டாம் திகதி முதல் மின் உற்பத்திநிறுத்தப்பட்டுள்ளதால் தேசிய மின் உற்பத்திக்கு 60 மெகா வோட் மின்சாரம் கிடைக்காமல் போயுள்ளது.

அத்துடன் கடந்த மாதங்களில் கெனியோன் மின் உற்பத்தி நிலையத்தின் சுரங்க பாதையில் கோளாறு ஏற்பட்டமையால் அங்குள்ள இரண்டு டேபன்டயினர்கள் சேதமடைந்தாக நீர்ப்பாசன பொறியியலாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதில் ஒரு டேபன்டயினர் செயற்பட்டால் தேசிய மின் உற்பத்திக்கு 30 மெகா வோட் மின்சாரம் கிடைக்கும் சாத்தியமுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதற்காகவே தற்போது சுரங்க பாதையை கழிவுகள் அகற்றி சுத்தப்படுத்தும் பணிகள் இடம்பெறுவதாகவும் மாறாக இது சீர்குலைக்கும் வேலை அல்ல எனவும் நீர்ப்பாசன பொறியியலாளர்கள் இதன்போது மேலும் தெரிவித்துள்ளனர்.

## நீட்வுட் தோட்ட பாடசாலைக்கு புதிய கட்டடம்



ஹல்துமுல்ல நீட்வுட் தோட்ட பாடசாலை மாணவர்களின் வகுப்பறை பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக புதிய கட்டடமொன்றை இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் நிர்மாணித்து கொடுத்துள்ளார்.

நீட்வுட் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கோரிக்கையை ஏற்று, செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின்கீழ் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வனராஜா பகுதியில் விபத்து – 09 பேர் படுகாயம்

**ஹற்றன் விசேட, ஹற்றன் சுழற்சி நிருபர்கள்**

டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்கள் பயணித்த வேன் ஒன்று பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 09 பேர் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் பொகவந்தலாவ பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் 30ம் திகதி மாலை 6.45 மணியளவில் வனராஜா தேயிலை தொழிற்சாலைக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

டிக்கோயா பகுதியில் இடம்பெற்ற கிரிக்கட் சுற்றுப்போட்டி ஒன்றில் கலந்து கொண்டு திரும்பி செல்லும் போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இதன் போது 16 பேர் வரை பயணம் செய்துள்ளதாகவும் வேன் சாரதியால் வேகத்தினை கட்டுப்படுத்த முடியாமையால் தொழிற்சாலையில் அமைக்கப்பட்டிருந்த சல்லடை கம்பி பாதுகாப்பு வேலியினை உடைத்துக்கொண்டு சுமார் 20 அடி பள்ளத்தில் பாய்ந்து இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. இவ்விபத்து காரணமாக சுமார் 30 நிமிடங்கள் வரை வீதி போக்குவரத்தும் தடைப்பட்டன.

தனியார் வேன் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது. இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சுகாதார துறைக்கு அரசாங்கம் கூடுதல் நிதியை ஒதுக்கியுள்ளது

## சுகாதார உத்தியோகத்தர்களை பாராட்டும் நிகழ்வில் அதாஉல்லா எம்.பி

**(ஒலுவில் விசேட நிருபர்)**

நாட்டில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டிருந்த கால கட்டத்திலும் அரசாங்கம் சுகாதார துறைக்கு கூடுதலான நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளதாக, தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் கொவிட் 19 தடுப்பூசி வழங்கும் செயற்திட்டத்தினை ஆரம்பித்து ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு, கொவிட்19 காலப்பகுதியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சுகாதார உத்தியோகத்தர்களை பாராட்டும் வைபவம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் ஆஸாத் எம். ஹனீபா தலைமையில் சனிக்கிழமை (29) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,



வைத்தியத்துறை ஒரு புனிதமான துறையாகும்.

இதில் யாரும் கட்சி வேறுபாடுகளோ, சமயங்களோ பார்ப்பதில்லை. சுகாதார துறை ஒரு நாட்டின் உயிர்நாடியாகும். கடந்த காலங்களில் எமது நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தொற்றிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு சுகாதார துறையினர் அர்ப்பணிப்புடன் பாடுபட்டனர்.

வைத்தியசாலைகளில் அரசியல் தலையீடுகள் இருக்க முடியாது. நான் ஒரு போதும் வைத்தியசாலைகளில் அரசியல் செய்ததில்லை. மாறாக எந்த வைத்தியசாலையை எடுத்துக் கொண்டாலும் இப் பிரதேசத்தில் அபிவிருத்தியே செய்துள்ளேன்.

ஒவ்வொரு கிராமங்கள் தோறும் வைத்தியசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள் காணப்படுகின்றதென்றார்.

இவ் வைபவத்தில் அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாஉல்லா அகமட் சக்கி, தவிசாளர் எம்.ஏ. றாசிக் உட்பட பொலிஸ், இராணுவ அதிகாரிகளும், சுகாதார துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார பொருட்கள் கையளிப்பு



பொத்துவில் பிரதேசத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கான வாழ்வாதாரப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பொத்துவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

பொத்துவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.எம்.பிர்னாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முசாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

தெரிவு செய்யப்பட்ட வருமானம் குறைந்த சமுர்த்தி பயனாளிகளுக்கான மீன்பிடி உபகரணங்கள், அரிசி குத்தும் இயந்திரம், மாவு இடிக்கும் இயந்திரம்,தையல் இயந்திரம், கிருமி நாசினி தெளிக்கும் பம்ப், குளிர்சாதனப் பெட்டிகள், மோட்டார் பம்ப் என வாழ்வாதாரப் பொருட்கள் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

பொத்துவில் பிரதேசத்திலுள்ள தமிழ்,சிங்கள, முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மட்டக்களப்பு நகரில் மெழுகுவர்த்தி போராட்டம்

**(புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்)**

ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தினை வலியுறுத்தி மெழுகுவர்த்தி ஏந்தி ஊடக சுதந்திரத்தினை கோரும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (30) மட்டக்களப்பு நகரில் நடைபெற்றது.

ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தினை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டு வரும் கறுப்பு ஜனவரி வார நிகழ்வின் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை, மட்டக்களப்பு நகரில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபி அருகே துண்டுபிரசுர விநியோக நிகழ்வும் மெழுகுவர்த்தி ஏந்தி ஊடக சுதந்திரத்தினை கோரும் நிகழ்வும் நடைபெற்றது.

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், அம்பாறை ஊடக



அமையம், கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த நிகழ்வை நடாத்தியது.

இதில் ஊடவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள் கலந்து கொண்டதுடன், மெழுகுவர்த்தி ஏந்தி படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தினர்.

## திருகோணமலை இராவண சேவை அமைப்பினரால் பொங்கல் விழா



**தம்பலகாமம் நிருபர்**

திருகோணமலை இராவண சேவை அமைப்பினரால் பொங்கல் விழா ஞாயிற்றுக்கிழமை (30) கொண்டாடப்பட்டது. திருகோணமலை நகர சபை வாகன தரிப்பிடத்தில் இது ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

தொண்டர் அமைப்புகளும் கலா நிலையத்தினர்கள், பாடசாலை மாணவர்கள், ஊர் பிரமுகர்கள் என பல்வேறு தரப்பினரும் இதில் இணைந்திருந்தனர்.

காலை 7.00மணிக்கு ஆரம்பித்த விழா மதியம் 12.30 மணிக்கு நிறைவடைந்தது. தமிழுக்கும் சமுகத்திற்கும் சேவையாற்றிய மூவர் இலங்கைநேசன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய அறங்காவலர் கலாநிதி ஆறு திருமுருகன், திருகோணமலையைச் சேர்ந்த ஓய்வுநிலை அதிபரும் இலக்கியவாதியுமான சி.நவரெத்தினம், எழுத்தாளர் கனகசபை தேவகடாட்சம் ஆகியோர் இந்த விருதினை பெற்றுக் கொண்டனர்.

மருத்துவர் ஆ.சதீஸ்குமாருக்கு தொண்மம் தேடுதலுக்கான பாராட்டு விருது வழங்கி வைக்கப்பட்டது.

# புனரமைக்கப்பட்ட மனையியல்கூடம் திறப்பு





**(பேருவளை விஷேட நிருபர்)**

தர்கா நகர் அளுத்கம வீதி முஸ்லிம் தேசிய பாடசாலையில் ரூபா 450000 செலவில் புனரமைக்கப்பட்ட மனையியல் கூடத்தை பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அண்மையில் திறந்து வைத்தார்.

அதிபர் ஏ.ஏ.எம். பாயிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பேருவளை பிரதேச சபை முன்னாள் தலைவரும் தற்போதைய எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளருமான ஏ.ஆர். எம்.பத்தியுத்தீன், பிரதேச சபை உறுப்பினர் பைஸான் நைஸர் உட்பட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். பிரதேச மக்களின் நீண்டகால கோரிக்கையை தொடர்ந்து இந்த மனையியல் கூடம் புனரமைக்கப்பட்டது.

# மல்லிகை சி.குமாரின் வேடத்தனம் நூலுக்கு கொடகே சாகித்திய விருது

## நாளை விழா ஆரம்பமாகிறது

கொடகே தேசிய சாகித்திய விருது 2022 விழா, 2020ஆம் ஆண்டுக்கான தமிழ் ஆக்க இலக்கியப் பிரதி போட்டிக்கான பரிசளிப்பு விழாவும் நாளை (02) பிற்பகல் 2.30மணிக்கு கொழும்பு 07, பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் 23வது கொடகே தேசிய சாகித்திய விருது மல்லிகை சி.குமாரின் “வேடத்தனம்‘ எனும் சிறுகதைத் தொகுப்புக்கும் வெலிமடை ரபீக்கின் “ ஒரு நானும் இன்னும் ஒரு நானும் ‘ கவிதைத் தொகுப்புக்கும் வழங்கப்படவுள்ளன.

மொழிபெயர்ப்பு நூலுக்கான விருது சிங்களத்திலிருந்து எம். ரிஷான் ஷரீப் தமிழில் மொழிபெயர்த்த கத்யானா அமரசிங்ஹவின் தரணி எனும் நாவலுக்கும் முதல் நூலுக்கான விருதினை ஆ.லெ.மு.இர்ஷாத்தின் 'ஒளி பூக்கும் இரவு' எனும் ஹைக்கூ தொகுதிக்கும் வழங்கப்படவுள்ளன.

2020 க்கான கொடகே தேசிய தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிகளுக்கான போட்டியில் சிறந்த சிறுகதைத் தொகுப்பாக தெரிவு செய்யப்பட்டுள்ள பாலரஞ்சனி ஜெயபாலின் ' நெத்திக்காசு' தொகுப்புக்கும் சிறந்த கவிதைத் தொகுதியாக தெரிவு செய்யப்பட்ட ஜன்ஸி கபூரின் ' பிறப்பிட நிழலிலே' தொகுப்பு நூலுக்கும் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

ஆங்கில, சிங்கள மொழி நூல்களுக்கும் விருதுகள் வழங்கப்படவுள்ள இவ்விழாவில் மட்டுப்படுத்தப்பட்ட அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன.

(ஸ)

# புத்தளம் பாலிகா வித்தியாலயத்தின் வைரவிழா, கலைநிகழ்வுகள் ஏற்பாடு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) தனது 60 வது அகவையை நினைவு கூரவுள்ளது.இதைனை முன்னிட்டு வைரவிழாவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இதில், பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் கலைவிழாக்கள் இன்றும் (01) நாளையும் (02) நடைபெறவுள்ளன.இவ்விழா மாலை 2.00 மணி முதல் 6.00 மணி வரை கல்லூரியில் நடைபெறும்.மகளிருக்கு மட்டுமென,இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வை, சிறப்பிக்கும் முகமாக பாத்திமாவின் பழைய மாணவர் சங்கத்தினால் பல விசேட நிகழ்ச்சிகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

# கதவு விழுந்து சிறுமி பலி

**(அநுராதபுரம் தினகரன் நிருபர்)**

தம்புத்தேகம பொலிஸ் பிரிவிலுள்ள வீடு ஒன்றின் கதவு இடிந்து விழுந்ததில்,ஆறு வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புத்தேகம முசல்பிட்டி பகுதியில் வசித்து வரும் தம்புத்தேகம ஆரம்ப வித்தியாலயத்தில், கல்வி பயிலும் ஆறு வயது சிறுமியே உயிரிழந்தார்.

தம்புத்தேகம நகரிலுள்ள தனது பாடசாலை ஆசிரியயையின் வீட்டுக்கு செல்வதற்காக, கதவை திறந்த போது, இந்தச் சிறுமி மீது கதவு இடிந்து விழுந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து, தம்புத்தேகம வைத்தியசாலையில் சிறுமி அனுமதிக்கப்பட்டார்.எனினும் சிகிச்சை பலனின்றி சிறுமி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில், மேலதிக விசாரணைகளை தம்புத்தேகம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# சமய,சமூக நல்லிணக்கங்களில் ஜம்இய்யதுல் உலமாவின் வழிகாட்டல்களை பின்பற்றுங்கள்

## ஊடகவியலாளர் சந்திப்பில் வேண்டுகோள்

சமயம் மற்றும் சமூக விடயங்களில் அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமாவின் அறிவுரைகளைப் பின்பற்று மாறும் சமயங்களுக்கிடையில் சகோதரத்துவமாக வாழும் சுமுக நிலையை ஏற்படுத்துவதற்கு சிறந்த வழிகாட்டல்களை வகுத்துள்ளதாகவும் அகில இலங்கை ஜம்இய்யதுல்உலமா தெரிவித்துள்ளது.கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் நடாத்தப்பட்ட ஊடகவியலாளர் கருத்தரங்கிலே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதில்,தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏனைய சமூகத்துடன் சகவாழ்வை பேணி, தேசப்பற்றுடன் முன்மாதிரியானதும் கட்டுக்கோப்பான சமுகத்தை உருவாக்குவதே எமது நோக்கம்,இதற்கான வழிகாட்டல்களையும் நாம் தயாரித்துள்ளோம்.

இறைதூதர் முஹம்மது நபியவர்களின் முன்மாதிரிகள் சமூக நல்லிணக்கத்தையும் கற்றுத்தருகிறது.இதன் சிந்தனைகளிலிருந்து விடுபடாமல் வாழ்வதற்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா முஸ்லிம்களுக்கு வழிகாட்டும்.

சகல முஸ்லிம்களும் ஏனைய சமூகங்களுடன் நல்லிணக்கம், அன்பு,இரக்கம் செலுத்தி வாழ்வது அவசியம்.

நடுநிலையாகவும்,சகிப்புத்தன்மையுடனும் முன்மாதிரியான சமூகமாக முஸ்லிம்கள் வாழ வேண்டும்.

உலமாக்கள்,சமூகப் பிரதிநிதிகள், முக்கியஸ்தர்கள், மஸ்ஜித் நிருவாகிகள், ஊர்த் தலைமைகள், கல்விமான்கள், துறைசார்நிபுணர்கள், சிவில் அமைப்புக்கள் என சகலரும் இதற்காக இணைய வேண்டும் என்றும் அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில்,தலைவர் றிஸ்விமுப்தி, உலமா சபையின் செயலாளர் அர்க்கம் நூராமித், மௌலவி தாசிம் மற்றும் பொருளாளர்கள் உள்ளிட்ட முக்கிய அங்கத்தவர்களும் இதில், கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

# கைவிடப்பட்ட இறால் குழியிலிருந்து குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

**(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)**

உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொத்தாந்தீவு கிராமத்தில் கைவிடப்பட்டுள்ள இறால் பண்ணை நீர்த் தொட்டிக்குளிருந்து, இளம் குடும்பஸ்தர் (29) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அப்புத்தளை வெரகொல்ல தோட்டத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 30 வயதுடைய இளம் குடும்பஸ்தரே, சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முந்தல் கொதத்தாந்தீவு பகுதியிலுள்ள இறால் பண்ணைக்கு வேலை செய்யும் நோக்கில், கடந்த (27) அப்புத்தளை வெரகொல்ல தோட்டத்தைச் சேர்ந்த குறித்த நபர், வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்நபர் கடந்த (28) வெள்ளிக்கிழமை மாலை முதல் காணமல் போயிருந்த நிலையில் (29) சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் கைவிடப்பட்டுள்ள இறால் பண்ணை நீர்த்தொட்டிக்குள் மிதந்து கொண்டிருந்ததை அவதானித்த இறால் பண்ணை ஊழியர்கள் இதுதொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். அங்கு வருகை தந்த உடப்பு பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் கள விசாரணைகளை இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.



புதிய அலை கலை வட்டத்தின் விருது வழங்கும் விழாவில் விருது பெறுவோரின் பெயர்களுடனான படங்களைக் கொண்ட தினகரன் வாரமஞ்சரியின் இலவச இணைப்பிதழான "செந்தூரம்" இதழ், விழா மேடையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் இணைந்து புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதா மேத்தாவிடம் கையளிப்பதை காணலாம்.

# ஹிங்குராங்கொட பொலிஸ் பிரிவு; 56 இலட்சத்து 6500 ரூபா அபராதம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

ஹிங்குராங்கொட பொலிஸ் போக்குவரத்து பிரிவினால் 2021 ஆம் ஆண்டுக்கான வருமானமாக 56 இலட்சத்து 6500 ரூபா அரசாங்கத்திற்கு பெற்றுகொடுக்கப்பட்டுள்ளது.

நீதி மன்றில் தொடுக்கப்பட்ட வழக்குகளின் மூலம் 4,624,500 ரூபாவும் நிலைய அபராதமாக 982,000. ரூபாவும் பெற்றுகொடுக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு ஹிங்குராங்கொட பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் மூலம் குடிபோதையில் வாகனம் செலுத்திய 213 சாரதிகளை கைது செய்துள்ளனர்.

பொலனறுவை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மஹேஷ் ஹேவவித்தாரன வின் ஆலோசனைப்படி ஹிங்குரங்கொட உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.ஆர்.எம்.எஸ்.குமாரசிறி யின் வழிகாட்டுதலின் கீழ் ஹிங்குராங்கொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் வுத்திக குணசேகர, போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் சார்ஜன்ட் பேரேரா உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டிருந்தனர்.





இலங்கையின் முதன்மையான வர்த்தக வங்கிகளில் ஒன்றான DFCC வங்கி, கொக்கலை சுதந்திர வர்த்தக வலயத்திற்குள் அமைந்துள்ள MAS Intimates Unichela வளாகத்தில் புதிய MySpace ஏடிஎம் இயந்திரமொன்றைத் திறந்து வைத்துள்ளது. இதன் மூலம் தனது நாடளாவிய வலையமைப்பை விரிவுபடுத்தியுள்ளது. பரந்த அளவிலான வாடிக்கையாளர்களுக்கான நிதித் தேவைகளை இலகுவில் பெற்றுக்கொள்வதற்கு உதவுவதற்காக விரிவுபடுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டின் மற்றொரு பகுதியாக இது திறக்கப்பட்டது.


## அஞ்சல் திணைக்களம்

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

**1000, வர்த்தக நாமத்துடனான டிஜிட்டல் எழுத்து தராசு மற்றும் 500, வர்த்தக நாமத்துடனான டிஜிட்டல் மேடைத்தராசுகள் வழங்குதல் மற்றும் பராமரித்தல்.**

01. 1000, டிஜிட்டல் எழுத்து தராசுகள் மற்றும் 500, மேடைத் தராசுகள் வழங்குதல் மற்றும் பராமரிப்பதற்காக தகைமையும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அஞ்சல் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர், விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

02. விலைமனுக்கள் தேசிய போட்டி, கேள்வி முறைமையூடாக நடத்தப்படும்.

**03. தகைமை தகவுத்திறன்**

அ) செல்லுபடியாகும் வர்த்தக பதிவு

ஆ) இலங்கையில் இயங்கும் குறைந்தபட்சம் 5 வருடங்கள் சிறப்பாக ஸ்தாபிக்கப்பட்டதாக விலைமனு சமர்ப்பிக்கப்படும் வர்த்தக நாமம் இருத்தல் வேண்டும். மற்றும் அளவை அலகுகள் தரக்கட்டுப்பாட்டு மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் ஏற்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

இ) இலங்கையில் தராசுகள் விற்பனையில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உ) கடந்த 10 ஆண்டு காலத்தில் எந்த நிறுவனத்தினாலும் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாத ஒருவராக விலைமனுதாரர் இருத்தல் வேண்டும்.

ஊ) 2022 ஆம் ஆண்டிற்காக இலங்கையில் அளவை அலகுகள் தரக்கட்டுப்பாட்டு மற்றும் சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்ததாக இருத்தல் வேண்டும்.

04. 2022 மார்ச் 02 ஆம் திகதி 14.00 மணி வரை தபால் அதிபர் நாயகத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக இ.ரூபா 5000/- செலுத்துவதன் பேரில் கீழேயுள்ள முகவரிக்கு விலைமனுதாரர்கள் சுயமாக அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளால் ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தும் முறை காசாக இருக்கும்.

05. பொறியிடப்பட்ட விலைமனுக்களை கொழும்பு - 10, டி.ஆர்.விஜேவர்தன மாவத்த, இல.310, தரைமாடி, அஞ்சல் தலைமையகம், கணக்காளர் (பெறுகை) இன் அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது 2022 மார்ச் 03ஆம் திகதி 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்படும் நேரத்திற்கு பின்னர் உடனடியாக கீழ்க்காணும் முகவரியில் விலைமனுதாரர்கள் அல்லது சமுகமளிக்கும் அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

06. விலைமனுக்கள் மூடப்படும் திகதியில் இருந்து 91 கலெண்டர் நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

07. இலங்கையில் இயங்கும் ஓர் வங்கியினால் விநியோகிக்கப்படும் ஓர் விலைமனு பிணை அல்லது அஞ்சல் திணைக்களம், அஞ்சல் அதிபர் நாயகத்தின் பெயரில் வரையப்பட்ட மற்றும் 2022 ஜுன் 29ஆம் திகதி வரை செல்லுபடியாகும் இலங்கை ரூபா 500,000/- (வங்கி வரைவு) எல்லா விலைமனுவுடனும் இணைக்கப்படல் வேண்டும்.

08. எந்த காரணமும் கூறாமலேயே எந்த அல்லது எல்லா விலைமனுவையும் நிராகரிக்கும் அல்லது ஓர் விலைமனுவின் எந்தப் பாகத்தையும் ஏற்றுக்கொள்ளும் உரிமையை திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவர் கொண்டிருப்பர்.

09. கொழும்பு - 10, டி.ஆர்.விஜேவர்தன மாவத்த, இல-310, அஞ்சல் திணைக்களம், தலைமையகம், அஞ்சலதிபர் நாயகத்தின் மாநாட்டு அறையில் 2022 பெப்ரவரி 08 ஆம் திகதி 10.30 மணிக்கு இந்த விடயத்திற்கான விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் நடைபெறும்.

10. ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்களுக்கு, எந்த வேலை நாட்களிலும் 0900 மணிக்கும் 1500 மணிக்கும் இடையில் தொலைபேசி 0115746194 அடுத்த இலக்கம் 0114927249 இலிருந்து கணக்காளர் (பெறுகை) இடமிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் அத்துடன் கீழே தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரிசீலிக்கலாம்.

**கணக்காளர் (பெறுகை)**
**அஞ்சல் தலைமையகம், தரைமாடி,**
**இல.310, டி.ஆர்.விஜேவர்தன மாவத்த, கொழும்பு - 10.**

**பெறுகை இலக்கம் - POST/PMD/06/05/2021**

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**அஞ்சல் திணைக்களம், இல.310,**
**டி.ஆர்.விஜேவர்தன மாவத்த, கொழும்பு - 10**
**01.02.2022**

# வெளிநாட்டில் பணிபுரிகின்ற இலங்கையர்கள் மற்றும் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிப் பெறுகைகளை பெற்றுக்கொள்பவர்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நாணயம் வைத்திருப்போருக்கு

## இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலிடுவதற்கான வாய்ப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## இலங்கை அபிவிருத்தி முறிகள்

வழங்கல்

(ஐக்கிய அமெரிக்க டொலரில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள்)

பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**முதலீடும் தீர்ப்பனவும் : 2022 சனவரி 25 இலிருந்து திறக்கப்படும் அத்துடன் மறுஅறிவித்தல் வரை திறக்கப்பட்டிருக்கும்**

| | | |
|---|---|---|
| நாணயம் | : | ஐக்கிய அமெரிக்க டொலர் |
| காலம் மற்றும் வட்டி வீதம் | : | தயவுசெய்து கீழே அட்டவணையைப் பார்க்க |
| வட்டிக் கொடுப்பனவுகள் | : | ஆண்டிற்கு இரு தடவை |
| முதலீட்டுத் தொகை | : | குறைந்தபட்சம் 1,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் மற்றும் 1,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களின் பெருக்கங்களிலிருந்து |
| வரி | : | இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலிடுவதற்கு பிடித்துவைத்தல் வரி இல்லை |
| வழங்கும் அலுவலகம் | : | பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி |
| முறிகளைக் கொள்வனவு செய்வதற்காக குறித்துரைக்கப்பட்ட முகவர்கள் | : | தெரிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் |

உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறித்துரைக்கப்பட்ட முகவர் ஊடாக அல்லது முதலீட்டாளர்களினால் நேரடியாக fopdd@cbsl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படலாம். முதலீட்டாளர்களால் நேரடியாகச் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் முதலீட்டு ஏற்பாடுகளுக்காக முதலீட்டாளர் விரும்புகின்ற பெயர்குறிக்கப்பட்ட முகவருக்கு விண்ணப்பம் அனுப்பப்படும்.

கொண்டுவரப்பட்ட முதலீட்டுத் தொகை மீது 50 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட ஊக்குவித்தல் அத்துடன்/ அல்லது கையாளுதல் கட்டணம் பெயர்குறிக்கப்பட்ட முகவர்களுக்கு ஊக்குவிப்பாக வழங்கப்படும். இக்கட்டணம் முதலீடுகளின் ஏற்பாட்டாளர்களுடன்[1] சேர்த்து பெயர்குறிக்கப்பட்ட முகவர்களால் பகிரப்படலாம்.

[1] இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீட்டினைக் கொண்டு வருகின்ற ஏதேனும் நிறுவனம் அல்லது தனிப்பட்டவர்.

**https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/about/sldb_direct_window_offer_information_e.pdf**

குறிப்பு: இலங்கை அபிவிருத்தி முறிகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் இலங்கை மத்திய வங்கியால் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. முன்வைப்பு தொடர்பான விபரங்கள் 2022 சனவரி 25ஆம் திகதியிடப்பட்ட முன்வைப்பு ஆவணத்தில் கிடைக்கப்பெறுகின்றது.

### கிடைக்கப்பெறுகின்ற இலங்கை அபிவிருத்தி முறியின் முதிர்ச்சிகளும் முதலீட்டிற்கு ஏற்புடைய நிலையான வீதங்களும்[2]

| 2022 சனவரி 25 அன்று உள்ளவாறான எஞ்சியுள்ள முதிர்ச்சி | ஏற்புடைய நிலையான வீதம் (ஆண்டுக்கான சதவீதம்) |
|---|---|
| 6 மாதம் | 7.50 |
| 10 மாதம் | 7.65 |
| 1 வருடம் | 7.80 |
| 1 வருடம் 3 மாதம் | 7.85 |

| 2022 சனவரி 25 அன்று உள்ளவாறான எஞ்சியுள்ள முதிர்ச்சி | ஏற்புடைய நிலையான வீதம் (ஆண்டுக்கான சதவீதம்) |
|---|---|
| 2 வருடம் | 7.90 |
| 2 வருடம் 3 மாதம் | 7.90 |
| 3 வருடம் | 7.90 |

| 2022 சனவரி 25 அன்று உள்ளவாறான எஞ்சியுள்ள முதிர்ச்சி | ஏற்புடைய நிலையான வீதம் (ஆண்டுக்கான சதவீதம்) |
|---|---|
| 4 வருடம் | 7.95 |
| 4 வருடம் 6 மாதம் | 7.95 |
| 4 வருடம் 11 மாதம் | 7.95 |

[2] அடுத்த இலங்கை அபிவிருத்தி முறி ஏலத்தின் தொடக்கம் வரை மாற்றமின்றி காணப்படும். மேலே குறிப்பிட்ட இணைய இணைப்பினூடாக அணுகக்கூடிய முன்வைப்பு தகவல் ஆவணத்தில் மேலதிக விபரங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

### பெயர்குறிக்கப்பட்ட முகவர்கள் அட்டவணை

அக்குயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட், தொலைபேசி: 2206297 | இலங்கை வங்கி தொலைபேசி: 2448830 | கப்பிட்டல் அலையன்ஸ் லிமிடெட், தொலைபேசி: 2317777/ 2317730-1 | கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி, தொலைபேசி: 2330406 | டொயிஷ் வங்கி ஏஜி, கொழும்பு கிளை, தொலைபேசி: 2447062 | டீஎவ்சிசி வங்கி பிஎல்சி, தொலைபேசி: 2442442 | பெஸ்ட் கப்பிட்டல் ரெசரீஸ் பிஎல்சி, தொலைபேசி: 2639898 | ஹட்டன் நசனல் வங்கி லிமிடெட், தொலைபேசி: 2370390 | ஹட்டன் நசனல் வங்கி பிஎல்சி, தொலைபேசி: 2664664 | இந்தியன் வங்கி, தொலைபேசி: 2447163 | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தொலைபேசி: 5324422 | எம்சிபீ பாங் லிமிடெட், தொலைபேசி: 2448765 | நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி, தொலைபேசி: 2448448 | நேஷன்ஸ் றஸ்ட் வங்கி பிஎல்சி, தொலைபேசி: 4711411 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட், தொலைபேசி: 2425010 | பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி, தொலைபேசி: 4667702 | மக்கள் வங்கி, தொலைபேசி: 2206783 | பப்ளிக் பாங்க் பேர்காட், தொலைபேசி: 2576289 | சம்பத் வங்கி பிஎல்சி, தொலைபேசி: 2305841-2 | செலான் வங்கி பிஎல்சி, தொலைபேசி: 2456337 | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி, தொலைபேசி: 2374100 | வெல்த் றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட், தொலைபேசி: 2675091-4.

### தகைமையுடைய முதலீட்டாளர்கள்

(அ) உள்முக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக அவர்களுடைய வதிவிட அந்தஸ்தினைப் பொருட்படுத்தாது வெளிநாடுகளின் பிரசைகள்

(ஆ) உள்முக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கைப் பிரசைகள்.

(இ) தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளை, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளை அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுக் கணக்குகளை வைத்திருப்போர்.

(ஈ) உள்முக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் அல்லது இலங்கைக்கு வெளியில் பதிவுசெய்யப்பட்ட பங்குடமைகள்.

(உ) உள்முக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக இலங்கைக்கு வெளியில் நிறுவப்பட்ட நாட்டு நிதியங்கள், பிராந்திய நிதியங்கள், பரஸ்பர நிதியங்கள், கூறு நம்பிக்கைகள் மற்றும் நிறுவனசார் முதலீட்டாளர்கள்.

(ஊ) இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்.

(எ) வெளிநாட்டு நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்.

# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மூலம் வழங்கப்படும்

# இலங்கை அபிவிருத்தி முறிகள்

வழங்கல்

# விண்ணப்பப் படிவம்

ஐக்கிய அமெரிக்காவில் ஏற்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் காரணமாக, இலங்கை அபிவிருத்தி முறிகள் வழங்கலின் காலச்சட்டகத்திற்குள் ஐக்கிய அமெரிக்காவில் இவ்வழங்கலை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடு காணப்படவில்லை. அதற்கமைய, இவ்வழங்கல் ஐக்கிய அமெரிக்காவிற்கு அல்லது ஐக்கிய அமெரிக்க ஆட்களுக்கு நீடிக்கப்படவில்லை. இலங்கை அபிவிருத்தி முறிகள், ஐக்கிய அமெரிக்காவிற்கு அல்லது அந்நாட்டினுள் அல்லது ஐக்கிய அமெரிக்க ஆட்களுக்கு வழங்கப்படாமல், விற்கப்படாமல், மீள்விற்பனை செய்யப்படாமல், வாக்குறுதியளிக்கப்படாமல், மாற்றப்படாமல், குறித்தொதுக்கப்படாமல் அல்லது விநியோகிக்கப்படாமல் இருக்கலாம். ஐக்கிய அமெரிக்காவிற்குள் அல்லது ஐக்கிய அமெரிக்க ஆளொருவருக்கு இலங்கை அபிவிருத்தி முறிகளின் எத்தனிக்கப்பட்ட ஏதேனும் விற்பனை, மீள்விற்பனை, வாக்குறுதி, மாற்றல், குறித்தொதுக்கல் அல்லது விநியோகம் என்பன இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படமாட்டாது அல்லது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஐக்கிய அமெரிக்காவில் உள்ள அல்லது ஐக்கிய அமெரிக்காவிலிருந்து தோன்றுகின்ற முகவரியொன்றுடன் அல்லது ஐக்கிய அமெரிக்காவிற்கு இலங்கை அபிவிருத்தி முறிகளை விநியோகிப்பதற்கு கோருகின்ற இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான ஏதேனும் விண்ணப்பம் அல்லது ஐக்கிய அமெரிக்க ஆளொருவருக்கு இலங்கை அபிவிருத்தி முறிகளின் மாற்றல் பற்றிய ஏதேனும் அறிவித்தல் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**(விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்வதற்கு முன்னர் இலங்கை அபிவிருத்தி முறிகளின் "வழங்கல் ஆவணத்தில்" தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை தயவுசெய்து பார்க்கவும்)**

கண்காணிப்பாளர்
பொதுப்படுகடன் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01.
இலங்கை

கனம் ஐயா,

2022 சனவரி 25ஆம் திகதியிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தினால் (வழங்குநர்) வழங்கப்பட்ட "வழங்கல் ஆவணத்தின்" நியதிகளுக்கமைவாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலிடுவதற்காக நான்/நாங்கள் இத்தால் விண்ணப்பிக்கின்றேன்/விண்ணப்பிக்கின்றோம். சொல்லப்பட்ட வழங்கல் ஆவணத்தை உரியவாறு வாசித்து புரிந்துகொண்டேன்/புரிந்துகொண்டோம் என்றும் வழங்கலுக்கு ஏற்புடைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் முழுமையாக அறிந்துகொண்டுள்ளேன்/ அறிந்துகொண்டுள்ளோம் எனவும் நான்/ நாங்கள் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம். விண்ணப்பத்தை முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்றுக்கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை வழங்குநர் கொண்டுள்ளார் என நான்/நாம் மேலும் அறிவேன்/அறிவோம்.

வழங்கல் ஆவணத்திற்கமைவாக உங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறான என்னால்/ எங்களால் விண்ணப்பிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறியை/ முறிகளை கொள்வனவுசெய்வதற்கு இத்தால் உடன்படுகின்றேன்/ உடன்படுகின்றோம். எனக்கு/ எங்களுக்கு வழங்கப்படக்கூடிய இலங்கை அபிவிருத்தி முறியின்/முறிகளின் உடமையாளராக/ உடமையாளர்களாக பதிவுசெய்யப்படுவதற்கு என்னை/ எங்களை இயலச்செய்வதற்கு எனது/ எமது பாகத்தின் மீது, ஏதேனுமிருப்பின், தேவைப்படுகின்றவாறு அத்தகைய ஏனைய அனைத்து ஆவணங்களிலும் நான்/ நாங்கள் கையொப்பமிடுவேன்/ கையொப்பமிடுவோம் என்றும் தேவைப்படுகின்றவாறு அத்தகைய ஏனைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கும் நான்/ நாங்கள் இத்தால் பொறுப்பேற்றுக்கொள்கின்றேன்/ பொறுப்பேற்றுக்கொள்கின்றோம். இவ் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான எனது/ எமது பெயர்/ பெயர்கள், முகவரி/முகவரிகள் மற்றும் ஏனைய விடயங்களை உங்களுடைய புத்தகங்களிலும் பதிவுகளிலும் பதிவுசெய்வதற்கு உங்களுக்கு நான்/நாங்கள் இத்தால் அதிகாரமளிக்கின்றேன்/ அதிகாரமளிக்கின்றோம்.

சொல்லப்பட்ட வழங்கல் ஆவணத்தின் நியதிகளுக்கமைவாக நான்/நாங்கள் தகுதியுடைய முதலீட்டாளர்/ முதலீட்டாளர்கள் எனவும் வழங்கல் ஆவணத்தின் நியதிகளுக்கமைவாக ஏதேனும் தகுதியின்மைக்கு உட்படவில்லை எனவும் நான்/நாங்கள் இத்தால் உறுதியளிக்கின்றேன்/ உறுதியளிக்கின்றோம்.

இவ்விண்ணப்பத்தின் அடிப்படையில் எனக்கு/ எங்களுக்கு இலங்கை அபிவிருத்தி முறி/ முறிகள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், நான்/ நாங்கள், இலங்கை அபிவிருத்தி முறிக்கு அத்துடன் வழங்கல் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்புடைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு நிபந்தனையின்றியும் மாற்றமுடியாதவாறும் நான்/ நாங்கள் பிணிக்கப்படுவதற்கு பொறுப்பேற்கின்றேன்/ பொறுப்பேற்கின்றோம்.

**1. விண்ணப்பதாரியின் விபரங்கள்**

1.1 தலைப்பு: திரு. | திருமதி. | செல்வி. | வண. | கலாநிதி. | வேறு.

1.2 கடைசிப் பெயர்

1.3 முதலெழுத்துக்கள்

1.4 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்

1.5 அஞ்சல் முகவரி

1.6 தொலைபேசி இலக்கம்

1.7 தொலைநகல் இலக்கம்

1.8 மின்னஞ்சல் முகவரி

1.9 தேசியம் / கூட்டிணைவு நாடு

1.10 தகைமை: அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ (தயவுசெய்து கூட்டினுள் ✓ அடையாளம் இடவும்)

1.11 வரி அடையாள இலக்கம் (TIN)

1.12 அடையாள அட்டை இலக்கம்
(தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/பதிவு)

**2. விண்ணப்பிக்கும் முதிர்ச்சிக் காலம்**

2.1
☐ 6 மாதங்கள் ☐ 10 மாதங்கள் ☐ 1 ஆண்டு ☐ 1 ஆண்டு 3 மாதங்கள்
☐ 2 ஆண்டுகள் ☐ 2 ஆண்டுகள் 3 மாதங்கள் ☐ 3 ஆண்டுகள் ☐ 4 ஆண்டுகள்
☐ 4 ஆண்டுகள் 6 மாதங்கள் ☐ 4 ஆண்டுகள் 11 மாதங்கள் (தயவு செய்து கூட்டினுள் ✓ அடையாளம் இடவும்)

**3. விண்ணப்பிக்கும் தொகை (ஐ.அ.டொலர்களில்)**

3.1 இலக்கங்களில்

3.2 எழுத்துக்களில்

**4. வட்டி வீதம்**

4.1 இலக்கங்களில்

4.1.1 நிலையான வீதம் ______ அடிப்படைப் புள்ளிகள்

4.2 எழுத்துக்களில்

4.2.2 நிலையான வீதம் ______ அடிப்படைப் புள்ளிகள்

4.3 தீர்ப்பனவுத் திகதி

**5. வட்டி கொடுப்பனவுகள் மற்றும் முதன்மைத்தொகை மீள்கொடுப்பனவிற்குமான அறிவுறுத்தல்கள்**

5.1 நீங்கள் கொடுப்பனவுகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்கள்? ☐ காசோலை ☐ வங்கியில் நேரடியாக வரவு வைத்தல்

5.2 வங்கிக் கணக்கொன்றிற்கு நேரடியாக வரவு வைப்பதன் மூலம் நீங்கள் கொடுப்பனவுகளைப் பெற விரும்பினால், தயவுசெய்து பின்வரும் தகவல்களை வழங்கவும்.

5.2.1. கணக்கு இலக்கம்

5.2.2 வங்கியின் பெயர்

5.2.3 வங்கியின் முகவரி

5.2.4 வங்கி அடையாளக் குறியீடு (BIC), அறிந்திருப்பின்

**6. நியமிக்கப்பட்ட பெயர் குறிக்கப்பட்ட முகவர்**

என்னால் வழங்கப்பட்ட மேற்குறித்த விடயங்கள் யாவும் உண்மையானதெனவும் சரியானதெனவும் நான் சான்றுபடுத்துகின்றேன்

**7. விண்ணப்பதாரியின் கையொப்பம் .......................................... திகதி ............................**

**8. பெயர் குறிக்கப்பட்ட முகவரினால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்**

8.1 பெயர் குறிக்கப்பட்ட முகவரின் பெயர்

8.2 முகவரி

பெயர் குறிக்கப்பட்ட முகவரின் கையொப்பம் .......................................... முத்திரை ............................

திகதி ............................

முனைவர் எம். இசட். எம். ஆசிம்
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்
பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1

தொலைபேசி : 2477011
தொலைநகல் : 2477687, 2477718 /9
http:// www.cbsl.gov.lk

இணைந்த விண்ணப்பங்கள், கட்டுக்காப்பு ஒழுங்கேற்பாடுகள் அல்லது பெயர்குறித்தல் ஒழுங்கேற்பாடு போன்றவற்றிற்காக தயவுசெய்து வழங்கப்பட்டுள்ள QR குறியீட்டினூடாக விண்ணப்பத்தை தரவிறக்கம் செய்துக்கொள்ளவும்.

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

## குடிமனைகளின் புனரமைப்புக்கான தேசிய போட்டி ரீதியான விலைமனு

செவனகல பிரிவில் உள்ள பின்வரும் குடிமனைகளை புனரமைப்பதற்கு ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வ/இ | விபரம் | மீளளிக்கப் படாத வைப்பு ரூபா | விலைமனு பிணை ரூபா | கேள்விமனு குறிப்பு |
|---|---|---|---|---|
| 01 | G4/01 மனைகளின் புனரமைப்பு – வலயம் 01 | 2,000.00 | 60,000.00 | PR-6620 |
| 02 | G3/04 மனைகளின் புனரமைப்பு – வலயம் 03 | 1,500.00 | 50,000.00 | PR-6621 |
| 03 | G1/02 மனைகளின் புனரமைப்பு – வலயம் 04 | 2,500.00 | 100,000.00 | PR-6622 |
| 04 | G1/03 மனைகளின் புனரமைப்பு – வலயம் 04 | | | |
| 05 | G1/04 மனைகளின் புனரமைப்பு – வலயம் 04 | | | |
| 06 | G2/01 மனைகளின் புனரமைப்பு – வலயம் 05 | 3,500.00 | 150,000.00 | PR-6623 |
| 07 | G2/02 மனைகளின் புனரமைப்பு – வலயம் 05 | | | |
| 08 | G2/03 மனைகளின் புனரமைப்பு – வலயம் 05 | | | |
| 09 | G4/01 மனைகளின் புனரமைப்பு – வலயம் 05 | 3,500.00 | 150,000.00 | PR-6624 |
| 10 | G4/02 மனைகளின் புனரமைப்பு – வலயம் 05 | | | |

1. ஒவ்வொரு விலைமனு ஆவணத்திற்காகவும் மேலுள்ள அட்டவணைக்கு அமைய மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2022 பெப்ரவரி 21 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். ரொக்கப்பணம் மூலம் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
2. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை 2022 பெப்ரவரி 22 ஆம் திகதி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்ப்பது அல்லது விரைதூதர் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கேள்விமனு குறிப்பு இலக்கத்துடன் குடிமனையின் புனரமைப்புக்கான கேள்விமனு" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. C7 அல்லது அதற்கு மேல் (கட்டிட நிர்மாணம்) ICTAD பதிவு தேவை என்பதோடு குறைபாடு பொறுப்புக் காலம் 365 நாட்கள் மற்றும் திட்டக் காலம் 90 நாட்களாகும்.
5. ஓர் விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் மற்றும் தளவிஜயம் 2022 பெப்ரவரி 14ஆம் திகதி 10.00 மணிக்கு செவனகல கேட்போர் கூடத்தில் நடைபெறும்.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - கொள்முதல் முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 2505558, கைபேசி + 94 71 9803859, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: chandana@lscl.lk).

**தலைவர் - திணைக்கள பெறுகைக்குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**
**இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு-04.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## 2022 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு சேவையை வழங்கல்

**ஒப்பந்த இல.: UGC/Admin/05/01**

1. வோட் பிளேஸ் 20 ஆம் இலக்கம், வோட் பிளேஸ் 24 ஆம் இலக்கம் மற்றும் ஆனந்த இராஜகருணா மாவத்தை 94/10, ஆகியவற்றின் அலுவலக இடப்பரப்புக்களுக்கு பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சார்பாக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகின்றார்.
2. தேவைப்படுத்தல்களின் விபரமான விளக்கமானது விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.
3. உத்தேசிக்கப்பட்டுள்ள சேவைக் காலப்பகுதியானது 365 நாட்களாகும்.
4. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் செயற்பாட்டின் மூலம் நடாத்தப்படும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 011 2685183 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பொது நிருவாகத்திற்கான பிரதி செயலாளரிடமிருந்து பெற்று கொழும்பு-07, வோட் பிளேஸ், 20 ஆம் இலக்கத்திலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொது நிருவாக பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2022.02.01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகும் வகையில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மூவாயிரம் இலங்கை ரூபாவை (3,000) மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொழும்பு-07, வோட் பிளேஸ், 20 ஆம் இலக்கத்திலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொது நிருவாகத்திற்கான பிரதி செயலாளரின் அலுவலகத்திலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் சிறாப்பரிடம் செலுத்தப்படல் வேண்டும்.
7. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதுமானதும் 100,000 ரூபாவிற்கான மீளளிக்கப்படும் விலைமனுப்பிணை வைப்பொன்றை அரசாங்க நிறுவனங்கள் நீங்கலான அனைத்து விலைமனுதாரர்களும் சமர்ப்பித்தல் வேண்டும். (விலைமனுப்பிணையானது 2022.05.30 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்).
8. இதற்கமைவாக, பாதுகாப்பு சேவையை வழங்குவதில் ஆர்வமுள்ள சாரார்கள் பாதுகாப்பு சேவையின் அனைத்து விபரங்களையுமடக்கிய விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது, விலைமனுக்களின் இரு பிரதிகள் ''மூலப்பிரதி" மற்றும் ''நகல்பிரதி" என தயாரிக்கப்பட்டு அவையிரண்டும் தனித்தனியான இரு தபாலுறைகளில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு ''மூலப்பிரதி" மற்றும் ''நகல்பிரதி" என குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர், அவையிரண்டும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
9. விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Supplying of Security Services 2022"** என குறிப்பிடப்படல் வேண்டும்.
10. 2022.02.15 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல.20, வோட் பிளேஸ், கொழும்பு-07 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான மற்றும் இலத்திரனியல் மூலம் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும்.
11. விலைமனுக்களை அவைகளை மூடிய நேரத்தின் பின்னர் உடனடியாகவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய சபை அறையில் திறக்கப்படுவதுடன் இந்நிகழ்வின் போது விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
12. விலைமனுக்களை தயாரித்தல் அல்லது அவைகளின் ஒப்படைத்தல் ஆகியவற்றில் விலைமனுதாரர்களுக்கேற்படும் செலவினங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,**
**இல. 20, வோட் பிளேஸ், கொழும்பு-07.**
**01.02.2022.**







பெருந்தொற்றுக்கு சவால்விடுத்த மனித நேயத்திற்கு செய்யும் மரியாதை எனும் தொனிப் பொருளில் கொரோனா தடுப்பூசியை செலுத்திய ஒரு வருட பூர்த்தியினை கொண்டாடும் நிகழ்வு அக்குறணை சுகாதார வைத்திய பணிமனையின் ஏற்பாட்டில் அக்குறணை பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதின் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஹாரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியின் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன அமைப்பாளருமான திலக் ராஜபக்ஷ கலந்து கொண்டார். அக்குறணைப் பிரதேசத்தில் கொரோனா தொற்று நோயினை கட்டுப்படுத்துவதற்காக செயற்பட்ட அக்குறணை பிரதேச சபை, அக்குறணை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், அக்குறணை பிரதேச செயலாளர் அலுவலகம், அலவத்துக்கொட பொலிஸ் நிலையம், அக்குறணை ஜம்மிய்யதுல் உலமா சபை, அக்குறணை ஜும்ஆப் பள்ளிவாசல், பாதுகாப்பு படையினர் ஆகியோர் அயராது சேவையாற்றியமைக்காக சான்றிதழ்கள், விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்

## குளியாப்பிட்டிய நகர சபை

# பெறுகை அறிவித்தல்

பின்வரும் விடயங்களுக்காக 2022-02-01ஆம் திகதி முதல் 2022-02-24ஆம் திகதி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

I. மாதம்பை வீதி 270ஆம் இலக்க கட்டிடத்தை குத்தகைக்கு வழங்குதல்
II. அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களின் பகுதிகளை விற்பனை செய்தல்

விலைகள் தொடர்பான விபரங்கள்

| தொ. இல. | விபரங்கள் | மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணைமுறி (ரூபா) | குறைந்தபட்ச விலை |
|---|---|---|---|---|
| 01 | மாதம்பை வீதி 270ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கட்டிடம் | 500.00 | 110000.00 | 75500.00 |
| 02 | I. FRONCABIN (DRIVERS)<br>II. GARBAGE TANK (SMALL)<br>III. MUDCUARD 02<br>IV. SIGNAL LAMPS<br>V. REAR BUFFER | 500.00 | 5000.00 | 50000.00<br>25000.00<br>1500.00 |

விலைகளைச் சமர்ப்பிப்பது தொடர்பான மேலதிக தகவல்கள் மற்றும் விலைக்கோரல் விண்ணப்பப்படிவங்களை நகர சபையின் பிரதான அலுவலகத்தில் கடமை நேரத்தினுள் வருமான மேம்பாட்டு அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (விசாரணைகள்: 0374947848)

**ஏ. எம். லக்ஷ்மன் அதிகாரி,**
**தலைவர்,**
**குளியாப்பிட்டிய நகர சபை.**
**தொலைபேசி: 0372281275/0374947848 தொலைநகல்: 0372281114**
**மின்னஞ்சல்: kuliyauc@gmail.com இணையதளம்: www.kuliyapitiya.uc.gov.lk**

**கிராமிய வீடமைப்புத்துறை மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில்கள் ஊக்குவித்தல் இராஜாங்க அமைச்சு**

# கட்டிடங்கள் திணைக்களம்

## 2022 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்களை பதிவு செய்தல்

2022 ஆம் ஆண்டிற்காக கீழே குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும்/ அல்லது சேவைகளை வழங்குவதற்காக கட்டிடங்கள் திணைக்களத்துடன் தம்மை பதிவு செய்ய விரும்பும் வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல. | விளக்கம் | பதிவுசெய்தல் கட்டணம் |
|---|---|---|
| **பண்டங்கள்** | | |
| ஜி1 | அலுவலக காதிதாதி | 1000.00 |
| ஜி2 | Toners & Ink Cartridges for Printers & Photocopiers & Fax machines. | 1000.00 |
| ஜி3 | Tracing Paper Rolls & White Paper Rolls | 1000.00 |
| ஜி4 | டயர்கள் மற்றும் கார் பட்டரிகளின் வழங்கல் | 1000.00 |
| ஜி5 | கணினி துணைப்பாகங்களின் வழங்கல் | 1000.00 |
| **சேவைகள்** | | |
| எஸ்1 | நிழற்படபிரதியாக்கல் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள் மற்றும் அச்சுப்பொறிகள் ஆகியவற்றின் பழுதுபார்த்தல்கள் | 1000.00 |
| எஸ்2 | வளிச்சீராக்கிகளின் பழுதுபார்த்தல்கள் மற்றும் சேவைகள் | 1000.00 |
| எஸ்3 | மோட்டார் வாகனங்களின் பழுதுபார்த்தல்கள் மற்றும் சேவைகள் (கார்கள், வேன்கள், டபிள் கெப்கள்) | 1000.00 |
| எஸ்4 | Carpeting and Cushioning works of Motor Vehicles | 1000.00 |
| எஸ்5 | Offset Printing and Binding | 1000.00 |

1. **www.buildings.gov.lk** என்ற திணைக்கள இணையதளத்திலிருந்து விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.
2. வழங்குனரொருவர்/சேவை வழங்குனரொருவர் ஒரு வகுதிக்கு மேலதிகமாக விண்ணப்பிக்க விரும்பினால், ஒவ்வொரு வகுதிக்கும் தனித்தனியான விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. விண்ணப்ப படிவத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள சான்று ஆவணங்கள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எந்தவொரு ஆவணத்தின் சமர்ப்பித்தல் அல்லாத அல்லது ஒரு பகுதி சமர்ப்பித்தல் விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான வழியை வகுக்கும். நிராகரிப்பதற்கான எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் நிராகரிப்பதற்கான உரிமையை கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம் கொண்டுள்ளார்.
4. பொதுவாக விலைமனுக்கோரல்கள் பதிவு செய்யப்பட்டுள்ள வழங்குனர்கள்/சேவை வழங்குனர்களிடமிருந்தே கோரப்படும் ஆனால் வேறேதாவது வளங்களிலிருந்தும் விலைமனுக்கோரல்களின் மூலம் கொள்வனவு செய்வதற்கான உரிமையை திணைக்களம் கொண்டுள்ளது.
5. பண்டங்களை வழங்கவும் அல்லது சேவைகளை வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட எந்தவொரு வழங்குனர் அல்லது சேவை வழங்குனரும் விலைமனுக்கோரல்களின் அழைப்பிற்கு இரு தடவைகள் பதிலிறுக்கத் தவறின், அவ்வாறானவர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவார்கள்.
6. 2022.02.22 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விண்ணப்பங்கள் பத்தரமுல்ல, ''செத்சிரிபாய", கட்டிடங்கள் திணைக்களம், கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Registration of Suppliers and Service Providers for the Year 2022" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
7. உரித்தான மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமானது ரொக்கப் பணத்தில் செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டின் மூலப்பிரதியானது விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். ரொக்கப் பணக்கொடுப்பனவானது தலைமையகத்தில் அல்லது திணைக்களத்தின் எந்தவொரு வலய பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் செலுத்தப்படல் வேண்டும். மாற்று வழியாக, உங்கள் பணக்கொடுப்பனவை பத்தரமுல்ல இலங்கை வங்கி கிளையின் 7042710 என்ற கணக்கிலக்கத்திற்கு கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் செலுத்தலாம்.
8. மேலதிக தகவலுக்கு நீங்கள் 011-2862588 என்ற தொலைபேசி வழியாகவும் 011-2864771, 011-2868285 ஆகிய தொலைநகல் இலக்கங்களூடாகவும் ஒப்பந்தங்களுக்கான பிரதான பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

**பொறியியலாளர் எம்.எச்.எம். இஸ்மயில்,**
**கட்டிடங்களுக்கான பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2 ஆம் மாடி, ''செத்சிரிபாய",**
**பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**

# பெருந்தோட்ட வைத்தியசாலைகள் அரசுடைமையாக்கல் பாராட்டத்தக்கது

***அக்குறணை குறூப், நாவலப்பிட்டிய சுழற்சி நிருபர்கள்***



பெருந்தோட்ட வைத்தியசாலைகளை அரச வைத்தியசாலைகளாக்கும் விடயத்தில் வழங்கப்பட்ட அமைச்சரவை அனுமதியைப் பாராட்டுவதாக கண்டி மனித அபிவிருத்தித்தாபனத்தின்' நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பீ.பீ.சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

இந்த நாட்டில் ஏனைய பகுதி மக்கள் கடந்த 150 வருடகாலமாக அனுபவித்து வந்த சுகாதார வசதிகள் எதையும் பெருந்தோட்ட மக்கள் பெற்றுக்கொள்ள முடியாத ஒருநிலை இதுவரை காணப்பட்டது. தற்போது அது மாற்றமடையும் சாத்தியக்கூறு ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் கடந்த 150 வருடமாக பெருந்தோட்ட மக்களது தோட்ட வைத்தியசாலைகளில் சுகாதார வசதிகள் இருக்கவில்லை. வைத்தியசாலைகள் என்று சொல்லக்கூடிய பெருந்தோட்ட நிர்வாகங்களின் கீழ் இயங்கி வந்த மருந்தகங்களே சேவைகளை வழங்கி வந்தன. அதேநேரம் பெருந்தோட்டம் அல்லாத பகுதிகளில் வசிக்கும் ஏனைய பிரஜைகளுக்கு மத்திய அரசு அல்லது மாகாண அரசு சுகாதார சேவைகளை வழங்கி வந்தது. அதுபோல் தோட்டப்பகுதிகளில் எதுவும் இருக்கவில்லை.

இது ஒரு உரிமை மீறலாக நாம் எடுத்துக் காட்டி வந்தோம். எமது முன்னெடுப்புக்களில் ஒரு அங்கமாகவே பெருந்தோட்டப் பிரதேசங்களிலுள்ள சுமார் 450 தோட்ட வைத்தியசாலைகளை அரசுடைமையாக்க அல்லது அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதில் முதற்கட்டமாக 59 வைத்தியசாலைகளை பொறுப்பேற்க திட்டமிடப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

# தியத்தலாவையில் அடிக்கடி நீர்வெட்டு மக்கள் அசௌகரியம்

***ஊவா சுழற்சி நிருபர்***

தியத்தலாவை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பின் அண்மைக்கால செயற்பாடுகளினால் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

கடந்த தென்ன, நெலும் மாவத்த, பன்சலமலை, பட்டு அராவ, ரஞ்சல்லாவை, கோமாரிகஹ கொடை போன்ற பிரதேசங்களுக்கு அடிக்கடி நீர்வெட்டு அமுல்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். வாரத்தில் நான்கு அல்லது ஐந்து நாட்கள் அதுவும் சில மணித்தியாலங்கள் மாத்திரம் நீர்விநியோகம் இடம்பெறுவதால் மக்கள் தமது அன்றாடத் தேவைகள் பூர்த்தி செய்ய முடியாதுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இப்பிரதேசத்தில் கஹகொல்ல சிங்கள தேசியப் பாடசாலை, அல்பதுரியா முஸ்லிம் மகா வித்தியாலயம், அல் மதனியா அரபு கலாசாலை, இலங்கை இராணுவ மகளிர் படை கொரோனா தனிமைப்படுத்தும் நிலையம், பௌத்த பிரிவினா, கஹகொல்ல பௌத்த விகாரை, அல்பதுரியா ஜும்மா பெரிய பள்ளிவாசல் போன்றவை அமைந்துள்ளதால் சில முக்கிய தேவைகளுக்கு மாத்திரமல்லாது சமய கலாசார விடயங்களுக்குக் கூட குடிநீர் கிடைக்காது மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர். இதனால் தனியார் நீர்த்தாங்கிகளை நாட வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு தாம் தள்ளப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த காலங்களைப் போன்று நீர் விநியோகத்தினை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பிரதேசவாசிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

MILCO®

# மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்

(அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சி)

## விலைமனு மூடப்படும் திகதிக்கான திருத்தம்

**Development and Implementation of a Cloud based enterprise resource Planning (ERP) System**

**கேள்வி இல M/ PUR/ TEN/ 2022/01**

மேற்படி விடயமாக 2022.01.12ம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் சம்பந்தமானது.

மேற்படி கேள்வியின் மூடப்படும்/ திறக்கப்படும் திகதி 2022.02.15ம் திகதி பி.ப. 2.00 வரை நீடிக்கப்படுவதாக விலைமனு ஆவணங்களை ஏற்கனவே சேகரித்துள்ள விலைமனுதாரர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**தலைவர்**
**கேள்விக் கமிட்டி**
**மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்**
**345/5/1, காலி வீதி,**
**கொழும்பு - 03**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தொழில் திணைக்களம் - கொழும்பு 05

### கொழும்பு - 05, கிருள வீதியிலுள்ள ‘‘மெஹெவர பியச’’ அலுவலகப் பகுதியின் தரைத் தளத்திற்கான உத்தேச உள்ளக வேலைகள்

**ஒப்பந்த இல. FG/TB/65/2021**

1. தொழிலாளர் ஆணையாளர் நாயகம் சார்பாக ஆலோசனை பெறுகைக் குழுவின் (CPCD) தலைவர், பின்வருமாறு விபரிக்கப்படும் கொழும்பு 05, கிருள வீதியில் உள்ள "மெஹெவர பியச" அலுவலகப் பகுதியின் தரைத் தளத்திற்கான உத்தேச உள்ளக வேலைகளுக்கு தகுதியும் தகைமையும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கிறார். மற்றும் அன்னளவாக 6 மில்லியன் இலங்கை ரூபா (VAT தவிர்த்து) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேலைகள், கொழும்பு 05, கிருள வீதியிலுள்ள "மெஹெவர பியச"வின் அலுவலகப் பகுதியின் தரைத் தளத்திற்கான உத்தேச உளளக வேலைகளுக்கு கட்டமைப்புகளை வழங்குதல் மற்றும் விசேடமான உள்ளக பொருட்களை நிறுவுதல், முடிவுறுத்தல் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெற,
   - வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளாகாதவராகவும் மற்றும் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருடங்களுக்கு இலங்கையில் செல்லுபடியாகும் வர்த்தகப் பதிவைக் கொண்டிருக்க வேண்டும்.
   - வெற்றிகரமான விலைமனுதாரர், தளபாடங்கள், பொருத்துதல்கள் மற்றும் உபகரணத் துறையில் CIDA (நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை) SP4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவைப் பெற்றிருக்க வேண்டும்.
   - வெற்றிகரமான விலைமனுதாரர் ISO9001 இன் கீழ் அங்கீகாரம் பெற்று பதிவு செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

   விலைமனுதாரரின் அனுபவம் மற்றும் சாதனைப் பதிவு ஆகியவற்றை ஆதரிக்கும் ஆவணச் சான்றுகள் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு தகுதி பெறுவதற்கான தகுதித் தேவைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:
   - கடந்த ஐந்து வருடங்களின் சராசரி வருடாந்த புரள்வு ஆகக் குறைந்தது 15 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - கடந்த ஐந்து வருடங்களில் 25 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதிக்குக் குறையாத விரிவான மற்றும் ஒருங்கிணைந்த உள்ளக அலங்காரம் மற்றும் கட்டிடக்கலை பொருத்தல்களுடன் இலங்கையில் குறைந்தபட்சம் ஒரு திட்டத்தையாவது வெற்றிகரமாக முடித்த அனுபவம்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளின் நிகரான திரவச் சொத்துக்களின் குறைந்தபட்சத் தொகையானது 9 மில்லியன் இலங்கை ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை நிதிப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2022 பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2022 பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரம் (ரூபா 2,000.00) ரூபாவைச் செலுத்திய பின்னர், 2022 பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2022 பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி வரையான வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரையில் நிதிப் பிரிவிற்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை (தொகுதி 1 தவிர) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் கொழும்பு 05, தொழிற் செயலகக் கட்டிடத்தின் 4ஆம் மாடி, கேட்போர் கூடத்தில் 2022 பெப்ரவரி 14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும் என்பதுடன் அதே நாளில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தைத் தொடர்ந்து வேலைத்தள விஜயமும் இடம்பெறும்.
8. விலைமனுக்களை நகல் பிரதியுடன் 2022 பெப்ரவரி 22ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன் பின் உடன் திறக்கப்படும்.
9. விலைமனுக்கள் 2022 மே 24ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
10. சகல விலைமனுக்களுடனும் ‘‘விலைமனுப் பிணை முறி’’யாக ஐம்பத்தெட்டாயிரம் இலங்கை ரூபா (58,000.00) பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றில் நிபந்தனையற்ற கோரிக்கை உத்தரவாதமொன்றை 2022 ஜூன் 21ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் (விலைமனுக்கள் திறக்கப்பட்டதன் பின் 119 நாட்கள்) பெற்று இணைத்திருத்தல் வேண்டும்.
11. யாராவது விலைமனுதாரரொருவர் இந்தத் தொகுதியின் பல பொதிகளுக்கு அல்லது இந்தத் திட்டத்தின் வேறு ஏதேனும் தொகுதிக்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்க விரும்பினால் விலைமனுதாரர் ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழும் தனித்தனியாக தேவைப்படும் தகைமை/ தகுதி தகவுத் திறன்களை நிறுவ வேண்டும். இல்லையெனில் விலைமனுதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறமாட்டார்.
12. மேற்படி 11ஆம் பந்திக்கு மேலதிகமாக, விலைமனுதாரர் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் / இந்தத் திட்டத்தின் தொகுதி / தொகுதிகளின் பொதிகளில் ஏதேனும் ஒப்பந்தக்காராக பணிபுரிந்திருந்தால், இந்த விலைக்கோரலின் பிரத்தியேகமான தகவுத் திறன்களின் பிரகாரம் விலைமனுதாரர் தமது நிதி மற்றும் தொழில்நுட்ப தேவைப்பாடுகளை விபரக்குறிப்பு / தகுதியின் கீழ் நிறுவுதல் வேண்டும். இல்லையெனில் விலைமனுதாரர் இந்த ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறமாட்டார்.
13. விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழான பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
14. விலைமனுதாரர்கள் விலைக்கோரலில் பங்கேற்கும் நபரின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு இலக்கம் என்பவற்றை விலைமனுக்கள் திறக்கப்படுவதற்கு மூன்று (03) வேலை நாட்களுக்கு முன் ஆலோசனை பெறுகைக் குழுவின் (CPCD) தலைவருக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலே குறிப்பிடப்பட்ட முகவரிகள் (இவை):

**ஆலோசனை பெறுகைக் குழுவின் தலைவர் (CPCD)**
**தொழில் திணைக்களம்,**
**கொழும்பு-05.**
**தொலைபேசி : 0112-104837**
**தொலைநகல் : 0112-581393**
**மின்னஞ்சல் : dol.fin.procurement@gmail.com**

The Housewives' companion
Classifieds on
Daily News

---

**நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னரான அறிவித்தல்**

இல. 305/23, கிரீன்பாக், திக்ஹேனவத்த, பத்தேகொட, பண்டாரகம என்ற முகவரியில் வசிக்கும் உடுவரகே சுலோசனா மனிக் குமாரி ஆகிய நான், நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 107), பிரிவு 7 இன்படி, களுத்துறை மாவட்டத்தில் மேல் நீதிமன்ற வலயத்தில் சிங்கள மொழியில் பிரசித்த நொத்தாரிசாக சேவையாற்றுவதற்காக பதிவாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் இன்றிலிருந்து ஒரு மாதம் முடிவடைந்த பின்னர் நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பதிவாளர் நாயகத்திற்கு கோரிக்கை விடுப்பேன் என இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் சகல மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

**யு.எஸ்.எம். குமாரி**
**இல. 305/23, கிரீன்பாக்,**
**திக்ஹேனவத்த, பத்தேகொட,**
**பண்டாரகம.**

---

**சிறப்பு அட்டர்னி தத்துவத்தை இரத்து செய்தல்**

இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசு, வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பங்கதெனிய, எரிக்விலா, இல.15, குசலையை சார்ந்த அர்சகுலசூரிய மேரி சுசிலா ரஞ்சனி பொ்ணான்டோ (தே.அ.அ.இல.658451332V) ஆகிய நான் இதே புத்தளம் மாவட்டம், கட்டுனேரிய, இலயனல் பொ்ணான்டு மாவத்தை, 69ம் இலக்கத்தை சார்ந்த அர்சகுலசூரிய பிரிஜிதா சச்சினி பொ்ணான்டு (தே.அ.அ. இல.845911762V) என்பவருக்கு மாரவில பிரசித்த நொத்தாரிசு எச்.ஜே.எம் ஜயசிங்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 20547 இலக்கமும் 2011.08.29 தேதியும் உடையதும் வடமேல் வட மத்திய மாகாண துணை பதிவாளர் நாயக அலுவலகத்தில் 45ம் இலக்க கட்டுப்புத்தகத்தின் மடித்தாள் பக்கம் 2970ல் 2271 தினப்புத்தக இலக்கத்தின் கீழ் 2011.09.02 தேதியில் பதியப்பட்டதுமான சிறப்பு அட்டர்னி தத்துவ பத்திரத்தின் மூலம் நான் வழங்கிய சகல தத்துவங்களையும் இன்றைய 2022.01.28 தேதியன்று இரத்து செய்து விட்டேன் என்பதை இத்தால் இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசு அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேன். மேற் சொல்லப்பட்ட அர்சகுலசூரிய பிரிஜிதா சச்சினி பொ்ணான்டு இந்த அட்டர்னி தத்துவ பத்திரத்தின் மூலம் இனிமேல் மேற்கொள்ளும் எந்த செயல்களும் என்னை கட்டுப்படுத்தாது என்பதனையும் அவற்றுக்கு எனது அங்கீகாரம் இல்லை என்பதையும் இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் மேலும் அறியத்தருகின்றேன்.

**அர்சகுலசூரிய மேரி சுசிலா ரஞ்சனி பொ்ணான்டோ**

---

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

---

## Comtrust Adl Mudarabah
## நிதி கலைப்பு

Comtrust Adl Mudarabah நிதியின் மேலாளர்கள் Comtrust Asset management (Pvt) Ltd உங்கள் கவனத்துக்கு கொண்டு வர விரும்புவது என்ன வென்றால், தற்போதைய பொருளாதார நிலைமையினைக் கருத்தில் கொண்டு எதிர்பார்க்கும் நிதி வருவாயை இனிமேல் உங்களுக்கு வழங்க முடியாது என நாங்கள் கருதுவதால், இந்த நிதியை கலைக்க விரும்புகின்றோம். எனவே, இதற்கான இறுதி மதிப்பீட்டுத் திகதியாக டிசம்பர் 31ஆம் திகதி அறிவிக்கப்படுகின்றது.

உங்களின் பெறுமதிமிக்க முதலீட்டுக்கு நன்றி. (ஷரியா தொடர்பாக எங்கள் ஆலோசகர்களான ADI Capital உடனான ஆலோசனையின்பேரில்) உங்கள் முதலீட்டினை மீளப் பெற பின்வரும் தெரிவுகளை உங்களுக்கு வழங்க விரும்புகிறோம்.

- முதலீட்டை மீளப் பெறுவது.
- எங்கள் பணச் சந்தை நிதி அல்லது பங்கு சந்தை நிதிக்கு மாற்றுவது (இந்த நிதியானது ஷரியாவுக்கு இணக்கமானது அல்ல என்பதை நினைவில்கொள்ளவும்.)

உங்களுக்கு தேவையான மீட்பு விருப்பை தேர்ந்தெடுத்து, 28 பிப்ரவரி 2022 அன்று அல்லது அதற்கு முன் எங்களுக்கு பதிலளிக்கவும்.

நீங்கள் ஏற்கனவே முதலீட்டை மீளப் பெற்றிருந்தால் அல்லது முந்தைய தகவல் தொடர்புக்கு பதில் அளித்திருந்தால், மேற்குறிப்பிடப்பட்டுள்ள மீட்பு விருப்பை நீங்கள் புறக்கணிக்கவும்.

comtrust ASSET MANAGEMENT
"Celebrating 25 years of Trust"
Trusted partners in Professional Fund Management

Managers of Comtrust Adl Mudarabah Fund
# 04-07, Majestic City, 10 Station Road, Colombo 04
Tel: 011 575 9570 / 011 250 6347
Email : info@comtrust.lk
www.comtrust.lk

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

### உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம் - செயற்றிட்டம் ID: P 163305

### கிழக்கு மாகாணம், திருகோணமலை

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கியிடமிருந்து உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்ட ஆகுசெலவிற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள பண்டங்களின் வழங்கல் பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு பண்டங்களுக்கான வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து உரித்தான உள்ளூர் அதிகாரசபைகளின் சார்பாக உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. தகைமைத் தேவைப்படுத்தல்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் III ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் தரவுத் தாளில் வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை உள்ளூர் அதிகாரசபையின் தலைவர்/செயலாளரிடமிருந்து பெற்று அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2022.02.01 ஆம் திகதியிலிருந்து 2022.02.14 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் உள்ளூர் அதிகாரசபைக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. 2022.02.15 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள அட்டவணையில் காட்டியவாறு மூதூர் பிரதேச சபை, உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைகளின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் ஆகியவற்றில் விலைமனுதாரர்களுக்கேற்படும் எவ்வித ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு பெறுகையாளர் பொறுப்பேற்கமாட்டார்.
9. கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்கள் விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| தொ. இல. | உள்ளூர் அதிகார சபையின் பெயர் | பண்டங்கள் மற்றும் வேலை இலக்கத்தின் விளக்கம் | பெறுகை அமைப்பின் பெயர் | விலைமனுக் கோரல் ஆவணத்தை கொள்வனவு செய்யும் இடம் மற்றும் தொலைபேசி இல. | விலைமனு ஆவணத்தின் பெறுமதி (ரூபாவில்) | தேவைப்படும் விலைமனுப்பிணை | | விலைமனு செல்லுபடியாகும் காலப்பகுதி - வரையும் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | செல்லு படியாகும் காலப்பகுதி | |
| 1. | மூதூர் பிரதேச சபை | திருகோணமலை, மூதூர் பிரதேச சபைக்கான மூதூர் பொழுதுபோக்கு பூங்காவில் வெளிப்புற உடற்பயிற்சி உபகரணங்களை வழங்கல் மற்றும் நிறுவுதல் | மூதூர் பிரதேச சபை | மூதூர் பிரதேச சபை. 026-2238376 | 1,000.00 | 20,000.00 | 2022.05.02 ஆம் திகதியன்று வரையும் | 2022.04.04 ஆம் திகதியன்று வரையும். |
| 2. | மூதூர் பிரதேச சபை | திருகோணமலை மூதூர் பிரதேச சபைக்கான நெய்தல் நகர், சுடைகுடா மற்றும் கட்டைபறிச்சான் ஆகிய இடங்களில் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களை வழங்கல் மற்றும் நிறுவுதல். | மூதூர் பிரதேச சபை | மூதூர் பிரதேச சபை. 026-2238376 | 1,000.00 | 25,000.00 | 2022.05.17 ஆம் திகதியன்று வரையும் | 2022.04.18 ஆம் திகதியன்று வரையும். |

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழு,**
**மூதூர் பிரதேச சபை,**
**திருகோணமலை.**

01.02.2022.

---

## பெறுகை அறிவித்தல்

# துணி வகைகளைக் கொள்வனவு செய்தல் – 2022

### டீ சொய்சா மகளிர் வைத்தியசாலை - கொழும்பு 08

டீ சொய்சா மகளிர் வைத்தியசாலைக்கு 2022ஆம் ஆண்டில் துணிவகைகளைக் கொள்வனவு செய்து கொள்வதற்காக அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து விலைமனுக் கோரப்படுகின்றது. நாங்கள் வழங்கும் படிவங்களில் அவ்விலைமனுவானது, சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2022.02.01 முதல் 2022.02.15 வரை, வார வேலை நட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத ரூபா 1000.00 இற்கான தொகையை வைத்தியசாலையின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டை நிதிப்பிரிவில் சமர்ப்பித்து இதற்கான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பற்றுச்சீட்டு, விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் 2022.02.17 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதித்தபாலில் அனுப்புதல் அல்லது கணக்காளரின் அலவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில், 'துணி வகைகளைக் கொள்வனவு செய்து கொள்ளல் 2022' எனக்குறிப்பிடுதல் வேண்டும். 2022.02.18 அன்று மு.ப. 10.00 இற்கு விலைமனுத் திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

மேலதிக விபரங்களிற்காக அலுவலகத்தை அழைக்கவும். (தொலைபேசி இல: 011-2697315/ 2696224-25) விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிராந்தியப் பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்/ பணிப்பாளர்**
**பிராந்தியப் பெறுகைக் குழு,**
**டீ சொய்சா மகளிர் வைத்தியசாலை**
**கொழும்பு 08**

---

திகதி 30.01.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4663
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,508,120.00
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 0 6 9 0 7 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 34,907,296.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2958
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,259,480.00
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 03 30 53 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,707,023.20

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 1011
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,142,200.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 199,528,430.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 10671
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 17
வெற்றி இலக்கங்கள் 28 29 31 42

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 693
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,343,420.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 10 12 62 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,801,345.60

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0004
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,166,900.00
இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 12 27 46 53
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,540,476.20

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1205
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,673,880.00
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 1 8 3 8 6 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,974,471.20

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# 21ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்று சாதனை படைத்த நடால்





ஸ்பெயினைச் சேர்ந்த ரஃபாயல் நடால் 21ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

ஸ்விட்சர்லந்தின் ரோஜர் ஃபெடரரும் செர்பியாவின் நோவாக் ஜோகோவிச்சும் ஆளுக்கு 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

அவுஸ்திரேலிய பகிரங்க விருதை வென்றதன் மூலம் அந்தச் சாதனையைப் படைத்துள்ளார், நடால்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் அவர் ரஷ்யாவைச் சேர்ந்த டேனியல் மெட்வெடேவுடன் (Daniil Medvedev) மோதினார்

முதல் 2 ஆட்டங்களுக்கு மெட்வெடேவ் முன்னணியில் இருந்தார்.

ஆனால் இறுதியில், நடால் வெற்றி கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

கிட்டத்தட்ட ஐந்தரை மணி நேரம் நீடித்த போட்டியின் செட் விவரம் 2–6, 6–7, 6–4, 6–4, 7–5.

**நடாலுக்கு வாழ்த்து தெரிவித்த பெடரர், ஜோகோவிச்**

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில் காயம் காரணமாக பெடரரும், தடுப்பூசி செலுத்தாததால் ஜோகோவிச்சும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் ரஷ்ய வீரர் மெட்வடேவை தோற்கடித்து ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் சம்பியன் பட்டம் வென்றார்.

இந்நிலையில், ரபேல் நடாலின் சாதனைக்கு சக வீரர்களான ரோஜர் பெடரர் மற்றும் நோரோக் ஜோகோவிச் ஆகியோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக பெடரர் வெளியிட்டுள்ள இன்ஸ்டாகிராமில், உங்களது அசாத்தியமான பணி நெறிமுறை, அர்ப்பணிப்பு மற்றும் போராடும் குணம் எனக்கும் உலகெங்கிலும் உள்ள எண்ணற்ற பிறருக்கும் உத்வேகமாக உள்ளது என பதிவிட்டுள்ளார்.

இதேபோல், ஜோகோவி ச் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், அற்புதமான சாதனை. உங்களின் போராட்டக் குணம் மற்றொரு முறை வெற்றி பெற்றுள்ளது என பதிவிட்டுள்ளார்.

## 5வது 20க்கு 20 போட்டி
# ஹோல்டரின் ஹெட்ரிக்கால் திரில் வெற்றி பெற்றது மேற்கிந்திய தீவு அணி





இங்கிலாந்துக்கு எதிரான 5வது 20க்கு 20 போட்டியில் மேற்கிந்திய தீவின் ஹோல்டர் ஹெட்ரிக் உட்பட 5 விக்கெட் கைப்பற்றி ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

மேற்கிந்திய தீவு இங்கிலாந்து அணிகள் மோதிய 5வது 20 ஓவர் போட்டி பார்படாசில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவு முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதன்படி, முதலி ல் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவு அணி நிர்ணயி க்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 179 ஓட்டங்கள் எடுத்தது. அணியின் தலைவர் பொல்லார்ட் 25 பந்தில் 41 ஓட்டங்களும், பாவெல் 17 பந்தில் 35 ஓட்டங்களும், பிராண்டன் கிங் 34 ஓட்டங்களும் எடுத்தனர்.

இங்கிலாந்து சார்பில் லிவிங்ஸ்டோன், அடில் ரஷித் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து, 180 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது.

இங்கிலாந்து அணி 162 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டையும் இழந்தது. இதனால் மேற்கிந்திய தீவு அணி 17 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. ஜேம்ஸ் வின்ஸ் அரைச் சதமடித்து 55 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். கடைசி கட்டத்தில் சாம் பில்லிங்ஸ் போராடினார். அவர் 28 பந்தில் 41 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மற்ற வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை.

மேற்கிந்திய தீவு சார்பில் ஹோல்டர் 5 விக்கெட்டும், ஹொசைன் 4 விக்கெட்டும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை ஜேசன் ஹோல்டர் கைப்பற்றினார்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டி கொண்ட 20 ஓவர் தொடரை மேற்கிந்திய தீவு அணி 3–2 என கைப்பற்றி அசத்தியது.

# கடினபந்து கிரிக்கெட் போட்டியில் சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக்கழகம் வெற்றி



**(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தில் முன்னணிக் கழகமான சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகம் புதிய அணித்தலைவருடன் தமது உத்தியோகபூர்வ முதலாவது போட்டியினை மட்டக்களப்பு மாவட்ட பூநொச்சிமுனை விளையாட்டு கழகத்துடன் இடம்பெற்ற சினேக பூர்வ கடினபந்து கிரிக்கெட் போட்டியில் மியன்டாட் விளையாட்டுக் கழகம் 6 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டிக்கொண்டது.

இப்போட்டியானது பூநொச்சிமுனை இக்ரா பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கடந்த (21) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

20 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் ஆரம்பத்தில் துடுப்பாடிய பூநொச்சிமுனை விளையாட்டுக்கழகம் 04 விக்கெட்டுகளையும் இழந்து 184 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதுடன், தனது அணிக்காக அதி கூடிய ஓட்டமாக முஹம்மட் சஜி (50) பெற்றுக்கொடுத்தார்.

பதிலுக்கு துடுப்பாடிய சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகம் வீரர்களின் அதீத சிறப்பாட்டம் மூலம் 17 வது ஓவர் 2 வது பந்தில் நிர்ணயிக்கப்பட்ட 185 ஓட்டங்களைப் பெற்று 06 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

மியன்டாட் கழகத்தின் ஆரம்ப வீரரான ஏ.எம். பயாஸ் மிகவும் அபாரமாக துடுப்பெடுத்தாடி 47 பந்துகளுக்கு 87 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்து அணியின் வெற்றிக்கு வழியமைத்தார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் இவர் தெரிவானார்.





# பாகிஸ்தானில் தங்கம் வென்ற முல்லைத்தீவு யுவதிக்கு கௌரவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதிய நகர் கிராமத்தை சேர்ந்த யுவதி கணேஷ் இந்துகாதேவி பாகிஸ்தானில் நடைபெற்ற குத்துச்சண்டையில் தங்கப்பதக்கம் வென்றிருந்தார் இந்த யுவதிக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட கரிப்பட்ட முறிப்பு புதியநகர் கிராமத்தில் நடைபெற்றது.

இந்த யுவதியினை கௌரவிக்கும் நோக்கில் கௌரவிப்பு நிகழ்வு ஒன்றினை ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது.

அந்தவகையில் காலை 11 மணிக்கு புதிய நகர் புதிய சூரியன் விளையாட்டு மைதானத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் புதிய சூரியன் விளையாட்டு கழகம் என்பன இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் சிறப்பு விருந்தினராக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பரமோதயன் ஜெயராணி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் நா.குகேந்திரா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

தங்கம் வென்ற யுவதியின் வீட்டில் இருந்து உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானம் வரை யுவதி மற்றும் அவருடைய தாயார், அம்மம்மா, அம்மப்பா மற்றும் விருந்தினர்கள் கரிப்பட்ட முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்ளின் பான்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்துவரப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

மிகவும் பின்தங்கிய கிராமத்தில் இருந்து தனது திறமையினை வெளிக்காட்டிய மாணவிக்கு பலர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளதுடன் விருதுகளையும் வழங்கி கௌரவித்துள்ளார்கள். கடந்த 18 ம் திகதி பாகிஸ்தான் நாட்டில் இடம்பெற்ற இரண்டாவது பாகிஸ்தான் சிறீலங்கா சவேட் குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை அணிசார்பில் பங்கேற்ற முல்லைத்தீவு யுவதி கணேஸ் இந்துகாதேவி என்ற யுவதி பெண்களுக்கான 25 வயதுக்குட்பட்ட 50–55 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்டு தங்கப்பதக்கத்தை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கும் வர்ண விழா





**(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திலிருந்து பிரதேச மட்டம் முதல் தேசிய மட்டம் வரை விளையாட்டுத்துறையில் சகல பிரிவுகளிலுமிருந்து சாதனை படைத்த வீரர்களை கௌரவிக்கும் வர்ண விழா செவ்வாய்கிழமை (25) மாலை களுவாதளை கலசார மண்டபத்தில் நடைபெற்றது.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், கடந்த 10வருடத்திற்குள் தேசிய மட்டத்தில் சாதனை நிலை நாட்டியவர்களுக்குமே இக்கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசெயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி எஸ்.ஸ்ரீகாந்த், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர்(காணி) திருமதி என். முகுந்தன், மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், விளையாட்டு உத்தியோகஸ்த்தர்கள், விளையாட்டுப் பயிற்று விப்பாளர்கள், விளையாட்டுத்துறையில் சாதனை படைத்த வீரர்கள் உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவில் இருந்து பாடசாலை மட்டம், இளைஞர் சேவைகள் மன்றம், விளையாட்டு அமைச்சு, உள்ளிட்ட பல பகுதிகளிலுமிருந்து, பங்குபற்றி விளையாட்டுக்களில் வெற்றிபெற்று பிரதேசத்திற்கும், மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்த விளையாட்டு வீர, வீராங்கணைகள் வர்ண விழா பிரதேச செயலகத்தினால், வெற்றிக் கேடயங்கள், சான்றிதழ்கள, வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு, அவர்களின் வெற்றிக்கு காரணகர்த்தாவாக விளங்கிய பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளர்களுக்கும், இதன்போது பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிலையில் விளையாட்டுக்கள் தொடர்பான வர்ணங்கள் எனும் நூல் ஒன்றும் பிரதேச செயலத்தினால் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்

## இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடாத்தும்
# கிரிக்கெட் போட்டிக்கு அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அணி தெரிவு

**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படும் 17வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான 2021/22 கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு, அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மாணவர் அணி சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் எம்.எஸ்.நபார் தெரிவித்தார்.இதன் பிரகாரம், இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படும் 17 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான பிரிவு III முதல்சுற்று கிரிக்கெட் போட்டியில் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மாணவர் அணி பங்குபற்றவுள்ளதாகவும், இதற்கான எற்பாடுகள் தற்பொழுது நடைபெற்றுவருவதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார். இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடாத்தும் 17 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மாணவர் அணி சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கைபாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

விளையாட்டுத்துறையில் நீண்டகாலமாக பல்வேறு வெற்றிகள், சாதனைகளை குவித்துவரும் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மாணவர்கள் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்குத்தெரிவு செய்யப்பட்டுள்ளமை வரலாற்றுப் பதிவாகும்.

இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட கல்லூரி அதிபர் எம்.எஸ். நபார், பிரதியதிபர் (இணைப் பாடவிதானம்) ஏ.சி.எம்.ஹரீஸ், உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம்.றிப்தி,விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் எம்.ஏ.எம்.றஸ்பாஸ் ஆகியோருக்கு விளையாட்டுத்துறை ஆர்வலர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் நன்றி,பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 1ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.